நன்னிலம்

ஸ்ரீ தாண்டவேசுர சுவாமிகள்

அருளிச் செய்த

# கைவல்ய நவநீதம்

## மூலமும், உரை நடை வடிவமும்




உரைநடை வடிவமாக்கியோன் ஜவஹர் சுவாமிகள்

கணபதி பதிப்பகம்

1/349, திருப்பூர் குமரன் தெரு, பாடியநல்லூர், சென்னை-52.

ஓம் :

தத் சத்

பரப்பிரஹ்மணே நம:

நன்னிலம்

ஸ்ரீ தாண்டவேசுர சுவாமிகள்

அருளிச் செய்த

# கைவல்ய நவநீதம்

## மூலமும்,

## உரை நடை வழவமும்

உரை நடை வடிவாக்கம்

தவத்திரு. ஜவஹர் சுவாமிகள்

வெளியிட்டோர் :

கணபதி பதிப்பகம்,

பாடியநல்லூர், சென்னை-52.

# நூல் விளக்கம்


| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | கைவல்யநவநீதம் (ஸ்ரீ தாண்டவேசுரசுவாமிகள் அருளியது) மூலமும், உரை நடை வடிவமும் |
| ஆசிரியர் | : | ஜவஹர் சுவாமிகள் |
| மொழி | : | தமிழ் |
| வகை | : | எழுத்து தொகுப்பு |
| இரண்டாம் பதிப்பு | : | 2014 |
| நூலின் அளவு | : | 1/10 டெமி |
| பக்கங்கள் | : | 100 |
| தாள் | : | 11.6 |
| எழுத்து அளவு | : | 12 |
| உரிமை | : | ஆசிரியருக்கு |
| கட்டமைப்பு | : | சாதா பைண்டு அட்டை |
| கணினி அச்சுக் கோர்ப்பு | : | ஸ்ரீ வாரி பிரிண்டர்ஸ் செங்குன்றம். |
| அச்சிட்டோர் | : | ஸ்ரீ வாரி பிரிண்டர்ஸ் செங்குன்றம். |
| வெளியீடு | : | கணபதி பதிப்பகம், 1/349, திருப்பூர் குமரன் தெரு, பாடியநல்லூர், சென்னை-52. |

ஓம் :

தத் சத்

பரப்பிரஹ்மணே நம:

## முன்னுரை

உலக வாழ்வில் சுகதுக்கங்கள் அனைவராலும் அனுபவிக்கப் படுகின்றது என்பது எல்லோருக்கும் அனுபவமாம். இந்த சுக துக்கங்கள் ஒவ்வொருவருக்கும் தனித் தனியாக அவரவரது கர்மத்திற்கேற்ப இருப்பதும், இப்பூவுலகில் பிறந்து, வாழ்ந்து, இறந்து போதல் கடலின் கண் எழும் அலைகளைப் போல் அளவற்று, ஓய்ந்து போகாமல், திரும்பத் திரும்ப வருவதாயும் இருப்பதைக் கண்ணுற்ற நம் முன்னோர் இதனை ஆராய்ச்சி செய்தனர். இந்த ஆராய்ச்சி சாதாரணமானது அல்ல. அந்த ஆராய்ச்சிகளின் முடிவினில் இந்த பிறவி மீண்டும் மீண்டும் வருவதற்கானக் காரணத்தை கண்டு, அப்பிறவி நீக்கத்துக்கும் வழி வகுத்தனர். அறிவில் மிகவும் தெளிவை உடையோர்க்கே இவ்விழுயங்களை உணரஇயலும். குடும்பம், சொத்து சேர்த்தல் பதவியில் ஆசை முதலானவைகளில் மனத்தை செலுத்தி தன் வாழ்நாட்களைக் கழித்து பின் மரணமடைந்து போகின்றதனையே வழக்கமாக பலரும் கொண்டுள்ளனர். அவர்கள் முன் செய்த புண்ணியங்களின் விளைவால் மட்டுமே ஞான குருவினது தரிசனம் கிடைக்கின்றது.

இதற்கு மகான்கள் பலரின் வாழ்க்கைச் சரிதங்கள் உள்ளன என்பது எல்லோரும் அறிந்த ஒன்றாகும். மாணிக்கவாசகப் பெருமானார் உயர்ந்த குடியில் பிறந்து, முதலமைச்சர் ஆகி, பின்னர், திருப்பெருந்துறையிலே சிவபிரானை ஞானகுருவாக அடையப்பெற்று உபதேசிக்கப்பட்டு, துறவறம் பூண்டமையும், பட்டினத்தார் மிகப் பெரிய வணிகராய், செல்வந்தராயிருக்கும் காலையில் முருகப்பெருமான் அருளால், இவ்வுலக வாழ்வின் அநித்தியத்தினை உணர்ந்து, சகல சௌகரியங்களையும் துறந்து துறவியானார் என்பதும், தாயுமான சுவாமிகள், நாயக்க மன்னர் அரசவையில் கணக்காளராக இருந்து வருகிற சமயத்தில் மவுன சுவாமிகளின் அருளால் சும்மாயிரு என்னும் உபதேசம் பெற்று, துறவறம் பூண்டனர் என்பதும் சரித்திரங்கள் ஆகும். உபதேசம் என்பது வெறும் வாக்கியத்தின் சப்தம் அல்லது மந்திரம் மட்டும்

அல்லவாம். அந்த குரு வாக்கியங்களின் இலட்சியார்த்தத்தை உணருதலே ஆகும். அதன் பொருட்டே முற்காலத்தில் 12ஆண்டுகள் குருகுல வாசம் என்பது நியமமாய் இருந்தது. தற்காலம் பல துறைகளும் மாறி, முன்னேற்றம் அடைந்திருப்பதால்–அவகாசம் இன்மையால் ஓரளவிற்கு ஞான நூற்களை அவரவர்களாகவே படித்து உண்மை அறிவினை அடையலாமென ஞான குருமார்கள் எண்ணி, வட மொழியில் சூத்திரங்களாகவும், சுலோகங்களாகவும் ஆக்கித் தந்துள்ளனர். அப்படி இயற்றப் பட்டதுதான் ஸ்ரீ பஞ்சதசி எனும் வேதாந்த சாத்திரமாகும்.

மந்தரும் உணருமாறு வத்து தத்துவம் சொல்வேனே என்று இந்நூல் ஆசிரியர் கூறியதற்கு ஒப்ப நம் போன்ற மந்தத்தன்மை உடையவர்களின் பொருட்டு, இந்த ஸ்ரீபஞ்சதசி என்ற நூலை அடிப்படையாகக் கொண்டு, தமிழ்மொழியிலே இயற்றப்பட்ட சாத்திரந்தான் கைவல்ய நவநீதம் எனும் இந்த அத்துவித நூல். திருவாரூர் எனும் திருத்தலத்திற்கு வடக்கில் 10 கி.மீ தொலைவில் அமைந்திருக்கும் நன்னிலம் என்கின்ற மதுவனத்தில் சமாதி கொண்டு அருள் பாலித்து வரும் ஸ்ரீலஸ்ரீ தாண்டவேசுர சுவாமிகளால் தேனீக்கள் கூட்டிய மதுவின் சுவையாய் இந்த அத்துவித நூல், பாயிரம் 7–பாடல்களாகவும், தத்துவ விளக்கம் 101–பாடல்களாகவும் சந்தேகம் தெளிதல் 180–பாடல்களாகவும், மொத்தத்தில் 288 பாடல்களாக இயற்றப்பட்டு இருக்கின்றது. இதனை இன்றைய நவீன விவேகிகள் படிக்கச் சிரமப்படுவதால் பல ஆன்மீக மெய்யன்பர்களின் வேண்டுகோளுக்கு இணங்க, இந்நூலின் மூலத்தை யாப்பு இலக்கணத்துக்கு ஒப்ப சுவாமிகள் இயற்றிய முறைமையிலேயும் அதனை யாவரும் எளிதில் படித்து உணரவும், பொருளைப் புரிந்து கொள்ளவும், வாக்கியங்களை முறையுடனே பிரித்தும் அந்தந்த பாடல்களுக்கு யாம் ஆக்கி உள்ளோம். நலமெய்யாகிய, கைவல்ய நவநீத நூலைக் கற்றோர், பலகலை ஞானநூல்கள் படித்த, ஞானிகளாய் வாழ்வார், என்ற கைவல்ய நவநீதத்தின் கடைசி பாடலில் கூறியதற்கிணங்க மெய்யன்பர்கள் அனைவரும் ஆநந்தமாக வாழ்ந்து முத்தியைப் பெறுவார்களாக.

ஜவஹார் சுவாமிகள்

எல்லாம் அவன் செயல்

# பதிப்புரை

கணபதி பதிப்பகத்தாரால் வெளியிடப்படும் இந்நூல் ஏழு ஆண்டுகளில் ஐந்தாவது முறையாக பதிப்பிக்கப்படுகிறது. ஆண்டுகளுக்குரிய அனுபவ முயற்சிக்கேற்ப பல வேதாந்த உரைகளின் அடிப்படையில் படைக்கப்பட உள்ளது. இப்பகுதி வாழ் வேதாந்த வாழ்க்கைக்கு தன்னைத் தயார் படுத்திக் கொண்டிருக்கும் அனைவருக்கும் ஒரு வரப்பிரசாதமாக அமையும் என்ற உறுதியுடன் இப்பூவுலகிற்கு சமர்ப்பிக்கிறோம்.

இதுவரை வந்த வெளியீடுகள் அனைத்தும் அனைவராலும் நுகரப்பட்டிருந்தாலும் ஆண்டுக்கு ஆண்டு ஆழமான உரைகளை நமக்கு அளித்துக் கொண்டே வரும் நம் குருமார்கள், வேதாந்த விற்பன்னர்கள் மற்றும் நல்லுள்ளங்கள் கொண்ட மெய்யன்பர்கள் அனைவரது விருப்பப்படியும் காலத்திற்கேற்றவாறு, கைவல்ய நவநீதத்தில் உள்ள பாடல்களை உரை நடை வடிவமாக புதுப்பொலிவுடன் அர்ப்பணிக்கின்றோம்.

நம் வழிகாட்டிகளாய் இருக்கும் பிரம்ம வித்யா பீட குருமார்கள், அதன் வழிவந்த விபு வித்யா பீட மெய்யன்பர்கள், எப்பொழுதும் வழி வழி கைவல்யம் போதிக்கும் அருப்புக்கோட்டை அன்பர்கள், மற்றும் நன்னிலம் வாழ் கைவல்ய உபவாசிகள் முதலான அனைவருக்கும் எங்களின் மனமுவந்த வந்தனங்களை சமர்ப்பிக்கிறோம்.

இந்த கைவல்ய நவநீதத்தை, குறிப்பாக, சென்னையைச் சேர்ந்த இப்பகுதியில் விளக்கேற்றி, ஆன்மிக வெளிச்சம் காட்டி, எப்பொழுதும் மனத்தகத்து தக்க வைக்க விழைந்து வரும் பாடி கைவல்ய நவநீத சங்க மெய்யன்பர்கள் மற்றும் இம்மெய்யன்பர்களை ஊக்குவித்து தீட்சை அருளிய குருமகான்கள் அனைவருக்கும், அவர்களின் அறிவுரைகட்கும், ஆன்மிக வழிகாட்டலுக்கும் நன்றி சமர்ப்பணமாய் வெளியிடுகிறோம் என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

வேதாந்த தெளிவுக்கு விதையிடும் மூலப்பாடல்களின் உரைநூல்கள் காலத்திற்கேற்ப நிறைய அச்சேற்றி, ஆன்மிக உள்ளங்களின் தேடல்களுக்கு அவ்வப்போது விடையளித்துக் கொண்டும் வழிகாட்டிக் கொண்டிருக்க வேண்டும் என்ற பெரும்

விருப்பமுடன் நன்றி பகர்ந்து, வரும் வாழ்நாள் வீழ்நாளாக இல்லாது மனநிறைவுடன் வாழ எல்லாம் வல்ல இறை எப்பொழுதும் உடனிருக்கும் என்று சமர்ப்பிக்கிறோம்.

மிகவும் பணிவுடன்,
**கணபதி பதிப்பகத்தார்**
**கண்டிகை கிராம மனித நேய இளைஞர் நற்பணி மன்றம்**
**கண்டிகை, பூதூர், சென்னை-67.**

---

## சமர்ப்பணம்

பாடி கைவல்ய நவநீத சங்கம், அச்சுததாசர் மரபு, நாகவேடு ஸ்ரீமத் அமலாநந்த சுவாமிகளின் வேதாந்த பீடத்தின் வழி வந்த ஸ்ரீமத் கருணானந்த சுவாமிகளின் பாதசேகரரும், இந்நூலின் உரை நடை வடிவாக்கம் செய்த ஜவகர் சுவாமிகளின் குருவுமாகிய ஸ்ரீமத் வேதாந்த விஞ்ஞான ஏழுமலையானந்த சுவாமிகளால் குரு பூர்ணிமா தினத்தில் பாடி கைவல்ய நவநீத மெய்யன்பர்களுக்கு உபதேச தீட்சை வழங்கியதன் நிழற்படம்.




நடுவே அமர்ந்திருப்பவர் :
குருபிரான் ஸ்ரீமத் வேதாந்த விஞ்ஞான ஏழுமலையானந்த சுவாமிகள்.
நிற்பவர்கள் : (இடமிருந்து) வேங்கடேச சுவாமிகள், கம்பீரானந்த சுவாமிகள், முருகராஜ் சுவாமிகள், பாலசுப்ரமணிய சுவாமிகள், வேணுகோபால் சுவாமிகள், ஜவஹர் சுவாமிகள்.
உட்கார்ந்திருப்பவர்கள் : (இடமிருந்து) ஜான் சுவாமிகள், கோவிந்தசாமி சுவாமிகள், செல்வராஜ் சுவாமிகள்

# சமர்ப்பணம்

## குருமகான்கள்



இடமிருந்து : ஸ்ரீமத் சிவா சுவாமிகள் (பெரம்பூர்), ஸ்ரீமத் உலகநாத சுவாமிகள் (வில்லிவாக்கம்), ஸ்ரீமத் சுப்ரமணிய சுவாமிகள் (கொடைக்கல்), ஸ்ரீமத் கருணானந்த சுவாமிகள் (குகைய நல்லூர்), ஸ்ரீமத் சிவசாத்மிகானந்த சுவாமிகள் (ராயபுரம்)



ஸ்ரீமத் லோகநாத சுவாமிகள் (வியாசர்பாடி)



சாது ஸ்ரீமத் ஜோதி அம்மையார் (மகாதேவ மலை)

பொன்னில மாத ராசை பொருந்தினர் பொருந்தா ருள்ளந்
தன்னிலந் தரத்திற் சீவ சாட்சிமாத் திரமாய் நிற்கு
மெந்நிலங் களினு மிக்க வெழுநில மவற்றின் மேலா
நன்னில மருவு மேக நாயகன் பதங்கள் போற்றி. (1)

ஈன்றளித் தழிக்குஞ் செய்கைக் கேதுவா மயனாய் மாலா
யான்றவீ சனுமாய்த் தானே யநந்தமூர்த் தியுமாய் நிற்கும்
பூன்றமுத் தனுமா யின்பப் புணரியா தவனாய் நாளுந்
தோன்றிய விமல போத சொரூபத்தைப் பணிகின் றேனே. (2)

எவருடை யருளால் யானே யெங்குமாம் பிரம மென்பால்
கவருடைப் புவன மெல்லாங் கற்பித மென்ற றிந்து
சுவரிடை வெளிபோல் யானென் சொரூபசு பாவ மானே
னவருடைப் பதும பாத மநுதினம் பணிகின் றேனே. (3)

என்னுடை மனது புத்தி யிந்திய சரீர மெல்லா
மென்னுடை யறிவி னாலே யிரவிமுன் னிமமே யாக்கி
யென்னுடை நீயு நானு மேகமென் றைக்கியஞ் செய்ய
வென்னுடைக் குருவாய்த் தோன்று மீசனை யிறைஞ்சி னேனே. (4)

அந்தமு நடுவு மின்றி யாதியு மின்றி வான்போல்
சந்தத மொளிரு ஞான சற்குரு பாதம் போற்றிப்
பந்தமும் வீடுங் காட்டப் பரந்தநூல் பார்க்க மாட்டா
மந்தரு முணரு மாறு வத்துதத் துவஞ்சொல் வேனே. (5)

படர்ந்தவே தாந்த மென்னும் பாற்கடன் மொண்டு முன்னூற்
குடங்களி னிறைத்து வைத்தார் குரவர்க ளெல்லாங் காய்ச்சிக்
கடைந்தெடுத் தளித்தே னிந்தக் கைவல்ய நவநீ தத்தை
யடைந்தவர் விடய மண்டின் றலைவரோ பசியி லாரே. (6)

முத்தனை வேங்க டேச முகுந்தனை யெனையாட் கொண்ட
கத்தனை வணங்கிச் சொல்லுங் கைவல்ய நவநீ தத்தைத்
தத்துவ விளக்க மென்றுஞ் சந்தேகந் தெளித லென்றும்
வைத்திரு படலமாக வகுத்துரை செய்கின் றேனே. (7)

பாயிரம்-7-பாடல்கள் முற்றியது.

பொன், நில, மாதர் ஆசை ; பொருந்தினர் , பொருந்தார்
உள்ளம் தன்னில், அந்தரத்தில் , சீவ சாட்சி மாத்திரமாய் நிற்கும் ;
எந்நிலங்களினு(ம்) மிக்க, எ(ஏ)ழுநிலம் அவற்றின் மேலாம்,
நன்னில(ம்) மருவும், ஏகநாயகன் பதங்கள் போற்றி. (1)

ஈன்று,அளித்து,அழிக்கும் செய்கைக்கு,ஏதுவாம்;அயனாய்,மாலாய்,
ஆன்ற ஈசனுமாய் ,தானே அனந்த மூர்த்தியுமாய் நிற்கும் ;
பூன்ற முத்தனுமாய் , இன்பப் புணரி, ஆதவனாய் நாளும்
தோன்றிய,விமல போத சொரூபத்தைப் பணிகின்றேனே. (2)

எவருடை அருளால், யானே எங்குமாம் பிரமம் ; என்பால்
கவருடைப் புவனம் எல்லாம், கற்பிதம் என்று அறிந்து,
சுவரிடை வெளி போல்,யான்,என் சொரூப சுபாவம் ஆனேன்;
அவருடைப் பதும பாதம்,அநுதினம் பணிகின்றேனே. (3)

என்னுடை மனது, புத்தி, இந்திய சரீரம் எல்லாம்,
என்னுடை அறிவினாலே, இரவி முன் நிமமே ஆக்கி,
என்னுடை நீயும் நானும், ஏகம் என்று ஐக்கியம் செய்ய,
என்னுடைக் குருவாய்த் தோன்றும் ஈசனை,இறைஞ்சினேனே. (4)

அந்தமும், நடுவுமின்றி ,ஆதியும் இன்றி வான் போல்,
சந்ததம் ஒளிரும் ஞான சற்குரு பாதம் போற்றி ;
பந்தமும் வீடும் காட்ட, பரந்த நூல் பார்க்க மாட்டா,
மந்தரும் உணருமாறு,வத்து தத்துவம் சொல்வேனே. (5)

படர்ந்த வேதாந்தம் என்னும் பாற்கடல் மொண்டு ,முன்நூல்
குடங்களில் நிறைத்து வைத்தார் குரவர்கள் எல்லாம்; காய்ச்சி,
கடைந்து, எடுத்து அளித்தேன் இந்தக் கைவல்ய நவநீதத்தை,
அடைந்தவர், விடய மண் தின்று அலைவரோ? பசியிலாரே. (6)

முத்தனை , வேங்கடேச முகுந்தனை , எனை ஆட்கொண்ட
க(ர்)த்தனை,வணங்கிச் சொல்லும் கைவல்ய நவநீதத்தை,
தத்துவ விளக்கம் என்றும் , சந்தேகம் தெளிதல் என்றும் வைத்து ,
இரு படலமாக வகுத்து,உரை செய்கின்றேனே. (7)

பாயிரம்-7-பாடல்கள் முற்றியது.

## தத்துவ விளக்கப் படலம்

நித்திய வநித்தி யங்க ணிண்ணயந் தெரிவி வேக
மத்திய இகப ரங்கள் வரு போகங் களினி ராசை
சத்திய முரைக்க வேண்டுஞ் சமாதியென் றாறு கூட்ட
முத்தியை விரும்பு மிச்சை மொழிவர்சா தனமிந் நான்கே. (1)

சமந்தமம் விடல்ச கித்தல் சமாதானஞ் சிரத்தை யாறாஞ்
சமமகக் கரண தண்டந் தமம்புறக் கரண தண்ட
மமர்தரு கருமம் பற்றா தறுத்தலே விடலென் றாகு
மமர்செயுங் காம மாதி வரினடக் குதல்ச கித்தல். (2)

சிரவணப் பொருளைத் தானே சித்தஞ்சிந் திக்கு மாறு
சரதமா வைக்கு மித்தைச் சமாதான மென்பர் மேலோர்
பரமசற் குருநூ லன்பு பற்றலே சிரத்தை யாகும்
வரமிகு சமாதி யாறு வகையின்சொற் பொருளி தாமே. (3)

சாதன மின்றி யொன்றைச் சாதிப்பா ருலகி லில்லை
யாதலா லிந்த நான்கு மடைந்தவர்க் கறிவுண் டாகு
நூதன விவேகி யுள்ள நுழையாது நுழையு மாகில்
பூதசன் மங்கள் கோடி புனிதனாம் புருட னாமே. (4)

இவனதி காரி யானோ னிந்திரி யங்க ளாலும்
புவனதெய் வங்க ளாலும் பூதபௌ திகங்க ளாலுந்
தவனமூன் றடைந்து வெய்யிற் சகித்திடாப் புழுப்போல் வெம்பிப்
பவமறு ஞான தீர்த்தம் படிந்திடப் பதறி னானே. (5)

ஆனபின் மனைவி மக்க ளர்த்தவே டணைகண் மூன்றில்
கானவர் வலையிற் பட்டுக் கைதப்பி யோடு மான்போல்
போனவன் வெறுங்கை யோடே போகாத வண்ணஞ் சென்று
ஞானசற் குருவைக் கண்டு நன்றாக வணங்கி னானே. (6)

வணங்கிநின் றழுது சொல்வான் மாயவாழ் வெனுஞ்சோ கத்தா
லுணங்கினே னைய னேயென் னுள்ளமே குளிரும் வண்ணம்
பிணங்கிய கோச பாசப் பின்னலைச் சின்ன மாக்கி,
யிணங்கிய குருவே யென்னை யிரட்சித்தல் வேண்டு மென்றான். (7)

## தத்துவ விளக்கப் படலம்

நித்திய அநித்தியங்கள்,நிண்ணயம் தெரி(யும்) விவேகம்;
மத்திய இக, பரங்கள், வரு(ம்) போகங்களில் நிராசை;
சத்தியம் உரைக்க வேண்டும்; சமாதி என்று ஆறு கூட்ட(ம்);
முத்தியை விரும்பும் இச்சை;மொழிவர் சாதனம் இந்நான்கே. (1)

சமம், தமம்,விடல்,சகித்தல்,சமாதானம்,சிரத்தை ஆறாம்;
சமம் அகக் கரண தண்டம் ; தமம் புறக் கரண தண்டம்;
அமர் தரு கருமம் பற்றாது, அறுத்தலே விடல் என்றாகும்;
மமர் செயும் காமமாதி வரின், அடக்குதல் சகித்தல். (2)

சிரவணப் பொருளைத் தானே , சித்தம் சிந்திக்குமாறு,
சரதமா(ய்) வைக்கும் இத்தை,சமாதானம் என்பர் மேலோர்;
பரம சற்குரு, நூல் அன்பு பற்றலே, சிரத்தையாகும்;
வர(ம்) மிகு சமாதி ஆறு வகையின் ,சொற்பொருள் இது ஆமே. (3)

சாதனம் இன்றி ஒன்றைச் சாதிப்பார்,உலகில் இல்லை;
ஆதலால், இந்த நான்கும் அடைந்தவர்க்கு அறிவு (உ)ண்டாகும்;
நூதன விவேகி உள்ள(ம்) நுழையாது; நுழையுமாகில்,
பூத சன்மங்கள் கோடி; புனிதனாம் புருடனாமே. (4)

இவன் அதிகாரி ஆனோன் ; இந்திரியங்களாலும்,
புவன தெய்வங்களாலும், பூத பௌதிகங்களாலும்,
தவன(ம்) மூன்று அடைந்து;வெய்யில் சகித்திடாப் புழுப்போல் வெம்பி,
பவம் அறு ஞான தீர்த்தம் படிந்திட, பதறினானே. (5)

ஆனபின்,மனைவி ,மக்கள்,அர்த்த ஏடணைகள் மூன்றில்,
கானவர் வலையில் பட்டு, கை தப்பி ஓடு(ம்) மான் போல்,
போனவன்,வெறுங் கையோடே போகாத வண்ணம் சென்று,
ஞான சற்குருவைக் கண்டு, நன்றாக வணங்கினானே. (6)

வணங்கி நின்று , அழுது சொல்வான்; மாய வாழ்வு எனும்
சோகத்தால் உணங்கினேன்;ஐயனே! என் உள்ளமே குளிரும்
வண்ணம்;பிணங்கிய கோச பாசப் பின்னலைச்சின்னம் ஆக்கி,
இணங்கிய குருவே! என்னை இரட்சித்தல் வேண்டும் என்றான். (7)

அன்னதன் சிசுவை யைய னாமைமீன் பறவை போலத்
தன்னகங் கருதி நோக்கித் தடவிச்சந் நிதியி ருத்தி
யுன்னது பிறவி மாற்று முபாயமொன் றுண்டு சொல்வேன்
சொன்னது கேட்பா யாகிற் றொடர்பவந் தொலையு மென்றான். (8)

தொடர்பவந் தொலையு மென்று சொன்னதைக் கேட்ட போதே
தடமடு மூழ்கி னான்போற் சரீரமுங் குளிர்ந்துள் ளாறி
யடருமன் பொழுகு மாபோ லாநந்த பாஷ்பங் காட்டி
மடன்மலர்ப் பாத மீண்டும் வணங்கிநின் றீது சொல்வான். (9)

சொன்னது கேட்க மாட்டாத் தொண்டனா னாலுஞ் சுவாமி
நின்னது கருணை யாலே நீரெனை யாள ல ாமே
யுன்னது பிறவி மாற்று முபாயமொன் றுண்டென் றீரே
இன்னதென் றதைநீர் காட்டி ஈடேற்றல் வேண்டு மென்றான். (10)

அடங்கிய விருத்தி யானென் றறிந்தபின் செறிந்த மண்ணின்
குடம்பையுட் புழுமுன் னூதுங் குளவியின் கொள்கை போலத்
தொடங்கிய குருவு மான்ம சொரூபமே மருவ வேண்டி
யுடம்பினுட் சீவ னைப்பார்த் துபதேச மோது வாரே. (11)

வாராயென் மகனே தன்னை மறந்தவன் பிறந்தி றந்து
தீராத சுழற்காற் றுற்ற செத்தைபோற் சுற்றிச் சுற்றிப்
பேராத கால நேமிப் பிரமையிற் றிரிவன் போத
மாராயுந் தன்னைத் தானென் றறியுமவ் வளவுந் தானே. (12)

தன்னையுந் தனக்கா தாரத் தலைவனை யுங்கண் டானேல்
பின்னையத் தலைவன் றானாய்ப் பிரமமாய்ப் பிறப்புத் தீர்வ
னுன்னைநீ யறிந்தா யாகி லுனக்கொரு கேடு மில்லை
யென்னைநீ கேட்கை யாலே யீதுப தேசித் தேனே. (13)

என்னைத்தான் சடனா வுள்ளத் தெண்ணியோ சொன்னீ ரையா
தன்னைத்தா னறிய.ா மாந்தர் தரணியி லொருவ ருண்டோ
பின்னைத்தா னவர்கு ளெல்லாம் பிறந்திறந் துழலு வானே
னின்னைத்தா னம்பி னேற்கு நிண்ணய மருளு வீரே. (14)

அன்ன தன்சிசுவை,ஐயன்! ஆமை,மீன்,பறவை போலத்
தன் அகம் கருதி, நோக்கி, தடவி , சந்நிதி இருத்தி,
உன்னது பிறவி மாற்றும் உபாயம், ஒன்று உண்டு,சொல்வேன் ;
சொன்னது கேட்பாயாகில்,தொடர்பவம் தொலையும் என்றான். (8)

தொடர்பவம் தொலையும் என்று,சொன்னதைக் கேட்டபோதே,
தடமடு மூழ்கினான் போல் , சரீரமும் குளிர்ந்து, உள் ஆறி
அடரும் அன்பு ஒழுகுமா(று) போல் , ஆனந்த பாஷ்பம் காட்டி,
மடல் மலர்ப் பாதம் மீண்டும் வணங்கி நின்று,ஈது சொல்வான். (9)

சொன்னது கேட்க மாட்டாத் தொண்டன் ;ஆனாலும் சுவாமி !
நின்னது கருணையாலே, நீர் எ(ன்)னை ஆளலாமே;
உன்னது பிறவி மாற்றும் உபாயம் ஒன்று, உண்டு என்றீரே;
இன்னதுஎன்று,அதை நீர் காட்டி, ஈடேற்றல் வேண்டும் என்றான். (10)

அடங்கிய விருத்தியான் என்று அறிந்தபின்,செறிந்த மண்ணில்,
குடம்பையுள், புழு முன் ஊதும் குளவியின் கொள்கை போல,
தொடங்கிய குருவும், ஆன்ம சொரூபமே மருவ வேண்டி,
உடம்பினுள் சீவனைப் பார்த்து, உபதேசம் ஓதுவாரே. (11)

வாராய் என் மகனே ! தன்னை மறந்தவன் பிறந்து, இறந்து
தீராத சுழற் காற்றுற்ற, செத்தை போல் சுற்றிச் சுற்றி,
பேராத கால நேமிப் பிரமையில் திரிவன் ; போதம் ஆராயும்
தன்னை,தான் என்று அறியும் ;அவ்வளவும் தானே. (12)

தன்னையும் , தனக்கு ஆதாரத் தலைவனையும் கண்டானேல்,
பின்னை, அத்தலைவன் தானாய், பிரமமாய், பிறப்புத் தீர்வன்;
உன்னை நீ அறிந்தாய் ஆகில், உனக்கு ஒரு கேடும் இல்லை;
என்னை நீ கேட்கையாலே ,ஈது உபதேசித்தேனே. (13)

என்னைத்தான் (அ)சடனா,உள்ளத்து எண்ணியோ?சொன்னீர் ஐயா!
தன்னைத்தான் அறியா மாந்தர் தரணியில் ஒருவர் உண்டோ?
பின்னைத்தான் அவர்கள் எல்லாம் பிறந்து,இறந்து உழல்வான் ஏன்?
நின்னைத்தான் நம்பினேற்கு நிண்ணயம் அருள்வீரே ! (14)

இன்னது தேகந் தேகி யிவனென வுணர்வான் யாவ
னன்னவன் றன்னைத் தானென் றறிந்தவ னாகு மென்றார்
சொன்னபின் றேகி யாரித் தூலமல் லாம லென்றான்
பின்னது கேட்ட வையர் பீழைய நகையுங் கொண்டார். (15)

தேகமல் லாமல் வேறே தேகியார் காணே னென்றாய்
மோகமாங் கனவில் வந்து முளைத்தவ னெவனீ சொல்வாய்
சோகமங் கனவு தோன்றாச் சுழுத்திகண் டவனார் சொல்வா
யாகநீ நனவி லெண்ணு மறிவுதா னேது சொல்வாய். (16)

நனவுகண் டதுநான் கண்ட நனவுள நினைவு நீங்கிக்
கனவுகண் டதுஞ்சு ழுத்தி கண்டதும் வேறொன் றேபோற்
றினமநு பவிப்ப தொக்குந் தெரியவு மில்லை சற்றே
மனதினி லுதிக்கும் பின்னே மறைக்கும தருளு வீரே. (17)

தாலத்தின் மரங்கள் காட்டித் தனிப்பிறைக் காட்டு வார்போ
லாலத்தி னுடுக்கள் காட்டி யருந்ததி காட்டு வார்போற்
றூலத்தை முன்பு காட்டிச் சூக்கும சொரூப மான
மூலத்தைப் பின்பு காட்ட முனிவரர் தொடங்கி னாரே. (18)

அத்தியா ரோப மென்று மபவாத மென்றுஞ் சொல்லு
முத்தியாற் பந்தம் வீடென் றுரைக்கும்வே தாந்த மெல்லா
மித்தையா மாரோ பத்தாற் பந்தமா மபவா தத்தான்
முத்தியா மிவ்வி ரண்டின் முந்தியா ரோபங் கேளாய். (19)

ஆரோப மத்தி யாசங் கற்பனை யாவ வெல்லா,
மோரோர்வத் துவினில் வேறே யோரோர்வத் துவினை யோர்த
னாரூடு பணியாய்த் தோன்ற னரனாகித் தறியிற் றோன்ற
னீரூடு கானற் றோன்ற னிறந்தலம் வெளியிற் றோன்றல். (20)

இப்படிப் போல நாம ரூபங்க ளிரண்டு மின்றி,
யொப்பமா யிரண்டற் றொன்றா யுணர்வொளி நிறைவாய் நிற்கு
மப்பிர மத்திற் றோன்று மைம்பூத விகார மெல்லாஞ்
செப்புகற் பனையி னாலே செனித்தவென் றறிந்து கொள்ளே. (21)

இன்னது தேகம், தேகி இவன், என உணர்வான் யாவன் ?
அன்னவன் தன்னைத் தான் என்று,அறிந்தவன் ஆகும் என்றார்;
சொன்ன பின், தேகி யார் ? இத்தூலம் அல்லாமல் என்றான்;
பின்னது கேட்ட ஐயர் பீழையும், நகையும் கொண்டார். (15)

தேகம் அல்லாமல் வேறே தேகி யார் ? காணேன் ! என்றாய்;
மோகமாம் கனவில் வந்து, முளைத்தவன் எவன்? நீ சொல்வாய்;
சோகமாம் கனவு தோன்றாச் சுழுத்தி கண்டவன் யார்? சொல்வாய்;
ஆக, நீ நனவில் எண்ணும் அறிவுதான் ஏது? சொல்வாய். (16)

நனவு கண்டது, நான் கண்ட நனவு (உ)ள நினைவு நீங்கி,
கனவு கண்டதும்,சுழுத்தி கண்டதும், வேறு ஒன்றே போல்,
தினம் அனுபவிப்ப(து) ஒக்கும்;தெரியவும் இல்லை ;சற்றே,
மனதினில் உதிக்கும்;பின்னே மறைக்கும்;அது அருளுவீரே. (17)

தாலத்தின் மரங்கள் காட்டி, தனிப் பிறைக் காட்டுவார் போல்;
ஆலத்தின் உடுக்கள் காட்டி, அருந்ததி காட்டுவார் போல்;
தூலத்தை முன்பு காட்டி, சூக்கும சொரூபமான மூலத்தை,
பின்பு காட்ட முனிவரர் தொடங்கினாரே. (18)

அத்தியாரோபம் என்றும்,அபவாதம் என்றும் சொல்லும் உத்தியால்,
பந்தம்,வீடு என்று(உ)ரைக்கும் வேதாந்தம் எல்லா(ம்);
மித்தையாம் ஆரோபத்தால் பந்தமாம்; அபவாதத்தால் முத்தியாம்;
இவ்விரண்டில், முந்தி ஆரோபம் கேளாய். (19)

ஆரோபம்,அத்தியாசம்,கற்பனை ஆவ(து) எல்லாம்,
ஓர் ஓர் வத்துவினில்,வேறே ஓர் ஓர் வத்துவினை ஓர்தல்;
நார் ஊடு பணியாய்த் தோன்றல்;நரனாகித் தறியில் தோன்றல்;
நீர் ஊடு கானல் தோன்றல்; நிறம் தலம் வெளியில் தோன்றல். (20)

இப்படிப் போல, நாம, ரூபங்கள் இரண்டும் இன்றி,ஒப்பமாய்,
இரண்டற்று,ஒன்றாய்,உணர்வொளி நிறைவாய் நிற்கும்;
அப்பிரமத்தில் தோன்றும் ஐம்பூத விகாரம் எல்லாம்,
செப்பு கற்பனையினாலே,செனித்தவென்று அறிந்து கொள்ளே. (21)

அதுதானெப் படியென் றக்கா லநாதியாஞ் சீவ ரெல்லாம்
பொதுவான சுழுத்தி போலப் பொருந்துமவ் வியத்தந் தன்னி
லிதுகால தத்து வப்பே ரீசனுட் பார்வை யாலே
முதுமூல சுபாவம் விட்டு முக்குணம் வியத்த மாமே. (22)

உத்தம வெளுப்புச் செம்மை யுரைத்திடு கறுப்பு மாகுஞ்
சத்துவ குணத்தி னோடு ரசோகுணந் தமோகு ணந்தான்
சுத்தமோ டழுக் கிருட்டாச் சொல்லுமுக் குணமு மூன்றா
யொத்துள வேனுந் தம்மு ளொருகுண மதிக மாமே. (23)

ஒருவழி யிதுவா மித்தை யொருவழி வேறாச் சொல்வர்
மருவுமவ் வியத்தந் தானே மகதத்வ மாகு மந்த
வருண்மக தத்து வந்தா னகங்கார மாகு மென்றுங்
கருவகங் கார மூன்றாக் காட்டிய குணமா மென்றும். (24)

இக்குணங் களிலே விண்போன் றிருக்குஞ்சிற் சாயை தோன்று
முக்குணங் களினுந் தூய்தா முதற்குண மாயை யாகு
மக்குணப் பிரமச் சாயை யந்தரி யாமி மாயை
யெக்குணங் களும்பற் றாதோ னிமித்தகா ரணனா மீசன். (25)

ஈசனுக் கிதுசு ழுத்தி யிதுவேகா ரணச ரீரங்
கோசமா நந்த மாகுங் குணமிரா சதம வித்தை
தேசறு மவித்தை தோறுஞ் சிற்சாயை சீவ கோடி
நாசமா முயிர்க்கப் போது நாமமும் பிராஞ்ஞ னாமே. (26)

அழுக்கொடு பற்றுஞ் சீவர்க் கதுவேயா நந்த கோசஞ்
சுழுத்திகா ரணச ரீரஞ் சொன்னதிம் மட்டு மோக
முழுக்குணத் திரண்டால் வந்த மூலவா ரோபஞ் சொன்னோம்
வழுத்துசூக் குமவா ரோப வழியுநீ மொழியக் கேளாய். (27)

ஏமமா யாவி னோத வீசனா ரருளி னாலே
பூமலி யுயிர்கட் கெல்லாம் போகசா தனமுண் டாகத்
தாமத குணமி ரண்டு சத்தியாய்ப் பிரிந்து தோன்றும்
வீமமா மூட லென்றும் விவிதமாந் தோற்ற மென்றும். (28)

அதுதான் எப்படி என்றக்கால்,அநாதியாம் சீவர் எல்லாம்,
பொதுவான சுழுத்தி போல,பொருந்தும் அவ்வியத்தம் தன்னில்,
இது, கால தத்துவப் பேர், ஈசன் உட்பார்வையாலே,
முதுமூல சுபாவம் விட்டு, முக்குணம் வியத்தம் ஆமே. (22)

உத்தம வெளுப்பு, செம்மை, உரைத்திடு(ம்) கறுப்பும் ஆகும்;
சத்துவ குணத்தினோடு ரசோகுணம் , தமோ குணந்தான்;
சுத்தமோடு,அழுக்கு,இருட்டாச் சொல்லு(ம்) முக்குணமு(ம்) மூன்றாய்,
ஒத்துளவேனும் தம்முள், ஒரு குணம் அதிகமாமே. (23)

ஒருவழி இதுவாம்; இத்தை ஒருவழி வேறாச் சொல்வர்;
மருவும் அவ்வியத்தம் தானே ,மக தத்துவம் ஆகும் ;
அந்த அருள் மக தத்துவந்தான், அகங்காரம் ஆகும் என்றும்;
கரு அகங்கார(ம்) மூன்றாக் காட்டிய குணமாம் என்றும். (24)

இக்குணங்களிலே,விண் போன்று இருக்கும் சிற்சாயை தோன்றும்;
முக்குணங்களினும்,தூய்தா(ம்) முதற் குணம் மாயையாகும் ;
அக்குணப் பிரமச் சாயை, அந்தரியாமி; மாயை,
எக்குணங்களும் பற்றாதோன், நிமித்த காரணனாம் ஈசன். (25)

ஈசனுக்கு இது சுழுத்தி , இதுவே காரண சரீரம்;
கோசம் ஆனந்தமாகும் ; குணம் இராசதம் அவித்தை;
தேசறும் அவித்தை தோறும், சிற் சாயை சீவ கோடி ;
நாசமாம் உயிர்க்கு, அப்போது நாமமும் பிராஞ்ஞனாமே. (26)

அழுக்கொடு பற்றும் சீவர்க்கு, அதுவே ஆனந்த கோசம் ;
சுழுத்தி காரண சரீரம் ; சொன்னது இம்மட்டு(ம்), மோக
முழுக் குணத்து இரண்டால் வந்த,மூல ஆரோபம் சொன்னோம் ;
வழுத்து சூக்கும ஆரோப வழியு(ம்), நீ, மொழியக் கேளாய். (27)

ஏம மாயா வினோத ஈசனார் அருளினாலே,
பூமலி உயிர்கட்கு எல்லாம், போக சாதனம் உண்டாக;
தாமத குணம், இரண்டு சத்தியாய் பிரிந்து தோன்றும்;
வீமமா(ம்) மூடல் என்றும், விவிதமாம் தோற்றம் என்றும். (28)

தோற்றமாஞ் சக்தி தன்னிற் சொல்லிய விண்ணாம் விண்ணிற்
காற்றதாங் காற்றிற் றீயாங் கனலினீர் நீரின் மண்ணாம்
போற்றுமிவ் வைந்து நொய்ய பூதங்க ளென்று பேராஞ்
சாற்றுமற் றிவற்றிற் போக சாதன தநுவுண் டாகும். (29)

ஆதிமுக் குணமிப் பூத மடங்கலுந் தொடர்ந்து நிற்குங்
கோதில்வெண் குணத்தி லைந்து கூறுணர் கருவி யாகு
மோதிய பின்னை யைந்து முளம்புத்தி யிரண்டா ஞான
சாதன மாமிவ் வேழுஞ் சற்குணப் பிரிவி னாலே. (30)

இராசத குணத்தில் வேறிட் டெடுத்தகூ றைந்து மைந்தும்
பிராணவா யுக்க ளென்றும் பெருந்தொழிற் கருவி யென்றும்
பராவிய பெயரா மிந்தப் பதினேழு மிலிங்க தேகஞ்
சுராசுரர் நரர்வி லங்காய்த் தோன்றிய வுயிர்கட் கெல்லாம். (31)

இவ்வுடன் மருவுஞ் சீவ னிலங்குதை சதனென் றாவ
னிவ்வுடன் மருவு மீச னிரணிய கர்ப்ப னாவ
னிவ்வுட லிரண்டு பேர்க்கு மிலிங்கசூக் குமச ரீர
மிவ்வுடற் கோச மூன்றா மிதுகனா வவத்தை யாமே. (32)

சூக்கும சடமிம் மட்டுஞ் சொல்லினோ மிப்பாற் றூல
மாக்குமா ரோபந் தானு மடைவினின் மொழியக் கேளாய்
தாக்குமிவ் வுயிர்க்குத் தூல தநுவும்போ கமுமுண் டாகக்
காக்குமவ் வீசன் பஞ்சீ கரணங்கள் செய்தான் றானே. (33)

ஐந்துபூ தமும்பத் தாக்கி யவைபாதி நந்நான் காக்கி
நந்துதம் பாதி விட்டு நான்கொடு நான்குங் கூட்ட
வந்தன தூல பூத மகாபூத மிவற்றி னின்றுந்
தந்தன நான்காந் தூல தநுவண்ட புவன போகம். (34)

தூலமே மருவுஞ் சீவன் சொல்லிய விசுவ னாகுந்
தூலமே மருவு மீசன் சொலும்விராட் புருட னாகுந்
தூலமே யன்ன கோசந் துன்னுஞ்சாக் கிரவ வத்தை
தூலகற் பனையீ தென்று தொகுத்தது மனத்திற் கொள்வாய். (35)

தோற்றமாம் சக்தி தன்னில்,சொல்லிய விண்ணாம் ; விண்ணில்
காற்றதாம் ; காற்றில் தீயாம் ; கனலில் நீர் ; நீரில் மண்ணாம் ;
போற்றும் இவ்வைந்தும் , நொய்ய பூதங்கள் என்று பேராம்;
சாற்று(ம்) மற்று இவற்றில் ,போக சாதன தனு உண்டாகும். (29)

ஆதி முக்குணம், இப்பூதம் அடங்கலும் தொடர்ந்து நிற்கும் ;
கோதில் வெண் குணத்தில் ஐந்து கூறு, (உ)ணர் கருவி ஆகும்;
ஓதிய பின்னை ஐந்தும் உளம்,புத்தி இரண்டாம்;
ஞான சாதனமாம் இவ்வேழும், சற்குணப் பிரிவினாலே. (30)

இராசத குணத்தில், வேறு இட்டு எடுத்த கூறு ஐந்தும், ஐந்தும்,
பிராணவாயுக்கள் என்றும், பெரும் தொழில் கருவி என்றும்,
பராவிய பெயராம் ;இந்தப் பதினேழும் இலிங்க தேகம்;
சுர(ர்) ,அசுரர்,நரர்,விலங்காய்த் தோன்றிய,உயிர்கட்கு எல்லாம். (31)

இவ்வுடல் மருவும் சீவன் ,இலங்கு தைசதன் என்று ஆவன்;
இவ்வுடல் மருவும் ஈசன் ,இரணிய கர்ப்பன் ஆவன்;
இவ்வுடல் இரண்டு பேர்க்கும், இலிங்க சூக்கும சரீரம்;
இவ்வுடல் கோசம் மூன்றாம்; இது கனா அவத்தையாமே. (32)

சூக்கும சடம் இம்மட்டும் சொல்லினோம்; இப்பால்,
தூலம் ஆக்கும் ஆரோபந்தானும் அடைவினின் மொழியக் கேளாய்;
தாக்கும் இவ்வுயிர்க்குத் தூல தநுவும் , போகமும் உண்டாக,
காக்கும் அவ்வீசன், பஞ்சீகரணங்கள் செய்தான் தானே. (33)

ஐந்து பூதமும் பத்து ஆக்கி ,அவை பாதி நந்நான்கு ஆக்கி,
நந்து தம் பாதி விட்டு , நான்கொடு நான்கும் கூட்ட,
வந்தன தூல பூத(ம்) மகா பூதம், இவற்றினின்று
தந்தன நான்காம்; தூல தநு, அண்ட, புவன, போகம். (34)

தூலமே மருவும் சீவன்,சொல்லிய விசுவன் ஆகும்;
தூலமே மருவும் ஈசன்; சொ(ல்)லும் விராட் புருடன் ஆகும் ;
தூலமே அன்ன கோசம் ; துன்னும் சாக்கிர அவத்தை;
தூல கற்பனை ஈது என்று,தொகுத்தது மனத்தில் கொள்வாய். (35)

சீரிய வீச னார்க்குஞ் சீவர்க்கு முபாதி யொன்றே
லாரிய குருவே பேத மறிவதெப் படியென் றக்கால்
காரிய வுபாதி சீவன் காரண வுபாதி யீசன்
வீரிய மிகுச மட்டி வியட்டியாற் பேத மாமே. (36)

மரங்கள்போல் வியட்டி பேதம் வனமெனல் சமட்டி பேதஞ்
சரங்கடா வரங்கள் பேதத் தனியுடல் வியட்டி யென்பார்
பரம்பிய வெல்லாங் கூட்டிப் பார்ப்பதே சமட்டி யென்பா
ரிரங்கிய பலசீ வர்க்கு மீசர்க்கும் பேத மீதே. (37)

கற்பனை வந்த வாறு காட்டினோங் காண்ப வெல்லாஞ்
சொற்பனம் போலு மென்றே துணிந்தவன் ஞானி யாவான்
செற்புதை மழைக்கா லம்போய்த் தெளிந்தவா காசம் போல
வற்புத முத்தி சேரு மபவாத வழியுங் கேளாய். (38)

அரவன்று கயிறென் றாற்போ லாளன்று தறியென் றாற்போல்
குரவன்சொல் லுபதே சத்தாற் கூறுநூ லொளியைக் கொண்டு
புரமன்று புவன மன்று பூதங்க ளன்று ஞானத்
திரமென்னும் பிரம மென்று தெளிவதே யபவா தங்காண். (39)

படமுநூ லும்போற் செய்த பணியும்பொன் னும்போற் பார்க்கிற்
கடமுமண் ணும்போ லொன்றாங் காரிய கார ணங்க
ளுடன்முதற் சுபாவ மீறா வொன்றிலொன் றுதித்த வாறே
யடைவினி லொடுக்கிக் காண்ப தபவாத வுபாய மாமே. (40)

தூடண தமத்தில் வந்த தோற்றமாஞ் சத்தி செய்யு
மேடணை விகாரஞ் சொன்னீ ரிரண்டுசத் திகளென் றீரே
மூடலாஞ் சத்தி செய்யு மோகமுஞ் சொல்லு மையா
கேடறக் குருவே யென்னக் கிருபையோ டருள்செய் வாரே. (41)

தானிகர் தனக்கா மீசன் றனையுந்தங் களைத்தாங் கண்ட
ஞானிக டமையு மன்றி நாஸ்திந பாதி யென்னு
மூனிடை யுயிர்க ளுள்ளத் துணர்விழி குருடாம் வண்ணம்
வானிலந் திசைகண் மூடு மழைநிசி யிருள்போன் மூடும். (42)

சீரிய ஈசனார்க்கும், சீவர்க்கும் உபாதி ஒன்றேல்,
ஆரிய குருவே! பேதம் அறிவது எப்படி? என்றக்கால்,
காரிய உபாதி சீவன்; காரண உபாதி ஈசன்;
வீரிய(ம்) மிகு சமட்டி, வியட்டியால் பேதமாமே. (36)

மரங்கள் போல் வியட்டி பேதம், வனம் எனல் சமட்டி பேதம்;
சரங்கள், தாவரங்கள், பேதத் தனி உடல் வியட்டி என்பார்;
பரம்பிய எல்லாம், கூட்டிப் பார்ப்பதே சமட்டி என்பார்;
இரங்கிய பல சீவர்க்கும், ஈசர்க்கும் பேதம் ஈதே. (37)

கற்பனை வந்தவாறு காட்டினோம் ; காண்ப(ன) எல்லாம்,
சொப்பனம் போலும் என்றே, துணிந்தவன் ஞானி ஆவான்;
செற்புதை மழைக்காலம் போய் , தெளிந்த ஆகாசம் போல,
அற்புத முத்தி சேரும் அபவாத வழியும் கேளாய். (38)

அரவு அன்று கயிறு என்றாற் போல்,ஆள்அன்று தறி என்றாற் போல்,
குரவன் சொல் உபதேசத்தால் கூறு(ம்) நூல் ஒளியைக் கொண்டு,
புரம் அன்று, புவனம் அன்று, பூதங்கள் அன்று ; ஞானத் திரம்
என்னும் பிரமம் என்று , தெளிவதே அபவாதம் காண். (39)

படமும் நூலும் போல்,செய்த பணியும் பொன்னும் போல் பார்க்கில்,
கடமும் மண்ணும் போல் ஒன்றாம், காரிய காரணங்கள்;
உடல் முதல் சுபாவம் ஈறாய், ஒன்றில் ஒன்று உதித்தவாறே,
அடைவினில் ஒடுக்கிக் காண்பது , அபவாத உபாயமாமே. (40)

தூடண தமத்தில் வந்த , தோற்றமாம் சத்தி செய்யும்,
ஏடணை விகாரம் சொன்னீர்! இரண்டு சத்திகள் என்றீரே;
மூடலாம் சத்தி செய்யும் மோகமும் சொல்லும் ஐயா !
கேடு அறக் குருவே! என்ன, கிருபையோடு அருள் செய்வாரே. (41)

தான் நிகர் தனக்காம் ஈசன் தனையும், தங்களைத் தாம் கண்ட
ஞானிகள் தமையும் அன்றி; நாஸ்தி , நபாதி என்னும்
ஊன் இடை உயிர்கள் உள்ளத்து,(உ)ணர்விழி குருடாம் வண்ணம்;
வான்,நிலம், திசைகள் மூடும்; மழை நிசி இருள் போல் மூடும். (42)

பூன்றமாம் பிரமத் துக்கும் புறத்துள விகாரங் கட்கு
மான்றகூ டத்த னுக்கு மகத்துள விகாரங் கட்குந்
தோன்றிய பேதஞ் சற்றுந் தோன்றாமன் மறைத்து மூடு
மூன்றிய பவவி யாதி யுண்டாக்கு முபாதி யீதே. (43)

ஆதார மறைந்து போனா லாரோப மெங்கே தோன்று
மாதார மறையா தாகி லாரோப மிலையே யென்றா
லாதாரஞ் சமம்வி சேட மாமென விரண்டு கூறா
மாதாரஞ் சமமா மெங்கு மாரோபம் விசேட மாமே. (44)

சகமதி லிதுவென் சுட்டாஞ் சமானந்தான் மறைந்தி டாது
மிகவிது கயிறா மென்னும் விசேடந்தான் மறைந்து போகு
மகமெனுஞ் சமானந் தன்னை யஞ்ஞான மறைத்தி டாது
பகர்விசே டமதாஞ் சீவன் பரமெனு மதனை மூடும். (45)

கேவல நிலைதோன் றாமற் கெடுத்தது பஞ்ச கோசஞ்
சீவனுஞ் சகத்து மாகிச் செனித்தவிட் சேப மன்றோ
வாவ ரணந்தா னேபா ழனர்த்தமென் றுரைத்த தேதோ
மேவருங் குருவே யென்று வினாவிடின் மகனே கேளாய். (46)

தோற்றமாஞ் சத்தி தானுந் துன்பமாம் பவமா னாலு
மாற்றலான் முத்தி சேர்வார்க் கனுகூல மாகுங் காணீ
யூற்றமாம் பகற்கா லம்போ லுபகார நிசியா லுண்டோ
மாற்றமென் னுரைப்பேன் மைந்தா மறைப்பது மிகப்பொல் லாதே. (47)

சுழுத்தியிற் பிரள யத்திற் தோற்றமாஞ் சகங்கண் மாண்டு
மழுத்திய பவம்போய் முத்தி யடைந்தவ ரொருவ ருண்டோ
முழுத்தவிட் சேப மெல்லா முத்தியிற் கூட்டு கிற்குங்
கொழுத்தவா வரண முத்தி கூடாமற் கெடுத்த கேடே. (48)

சுத்தியில் வெள்ளி போலத் தோன்றிய தோற்ற மான
சத்தியும் பொய்யே யென்றாற் சத்திசா தனமா வந்த
முத்தியும் பொய்யா மென்னின் மோகநித் திரைவி லங்கா
னித்திரை தெளியு மாபோ னிருவாண நிலைமெய் யாமே. (49)

பூன்றமாம் பிரமத்துக்கும், புறத்து உள விகாரங்கட்கும்;
ஆன்ற கூடத்தனுக்கும், அகத்து உள விகாரங்கட்கும்;
தோன்றிய பேதம், சற்றும் தோன்றாமல், மறைத்து மூடும்;
ஊன்றிய பவ வியாதி, உண்டாக்கும் உபாதி ஈதே. (43)

ஆதாரம் மறைந்து போனால், ஆரோபம் எங்கே தோன்றும்?
ஆதாரம் மறையாதாகில், ஆரோபம் இ(ல்)லையே என்றால்,
ஆதாரம், சமம் விசேடமாம் என இரண்டு கூறாம்;
ஆதாரம் சமமாம் எங்கும், ஆரோபம் விசேடமாமே. (44)

சகமதில், இது என்(னும்) சுட்டால்,சமானந்தான் மறைந்திடாது;
மிக இது கயிறாம் எனும், விசேடந்தான் மறைந்து போகும்;
அகம் எனும் சமானம் தன்னை,அஞ்ஞானம் மறைத்திடாது;
பகர் விசேடமதாம் சீவன், பரம் எனும் அதனை மூடும். (45)

கேவல நிலை தோன்றாமல் கெடுத்தது, பஞ்சகோசம்;
சீவனும், சகத்துமாகி செனித்த விட்சேபம் அன்றோ?
ஆவரணந்தானே பாழ் அனர்த்தம்,என்று உரைத்தது ஏதோ?
மேவரும் குருவே! என்று வினாவிடின், மகனே கேளாய். (46)

தோற்றமாம் சத்தி தானும், துன்பமாம் பவமானாலும்,
ஆற்றலான் முத்தி சேர்வார்க்கு அனுகூலமாகும்; காண் நீ!
ஊற்றமாம் பகல் காலம் போல், உபகாரம் நிசியால் உண்டோ?
மாற்றம் என்ன உரைப்பேன்?மைந்தா! மறைப்பது மிகப் பொல்லாதே. (47)

சுழுத்தியில், பிரளயத்தில், தோற்றமாம் சகங்கள் மாண்டும்,
அழுத்திய பவம் போய், முத்தி அடைந்தவர் ஒருவர் உண்டோ?
முழுத்த விட்சேபம் எல்லாம், முத்தியில் கூட்டு கிற்கும்;
கொழுத்த ஆவரணம், முத்தி கூடாமல் கெடுத்த கேடே. (48)

சுத்தியில் வெள்ளி போலத் தோன்றிய தோற்றமான,
சத்தியும் பொய்யே என்றால்? சத்தி சாதனமா வந்த
முத்தியும், பொய்யாம் என்னில், மோக நித்திரை விலங்கால்,
நித்திரை தெளியுமா(ம்) போல், நிருவாண நிலை மெய்யாமே. (49)

இம்பரி னஞ்சை நஞ்சா லிரும்பினை யிரும்பா லெய்யு
மம்பினை யம்பாற் பற்று மழுக்கினை யழுக்கான் மாய்ப்பர்
வம்பியன் மாயை தன்னை மாயையான் மாய்ப்பர் பின்னைத்
தம்பமா மதுவுங் கூடச் சவஞ்சுடு தடிபோற் போமே. (50)

இந்தமா யையினாற் சீவர்க் கேழவத் தைகளுண் டாகு
மந்தவே ழவத்தை தம்மை யடைவினின் மொழியக் கேளாய்
முந்தவஞ் ஞான மூடன் முளைத்தல்கா ணாத ஞானஞ்
சந்ததங் கண்ட ஞானந் தழல்கெடல் குளிர்மை யாதல். (51)

பிரமமாந் தனைம றந்த பேதைமை யேயஞ் ஞானம்
பரனிலை காணோ மென்று பகர்தலா வரண மூட
னரனொரு கருத்தாற் சீவ னானென முளைத்த றோற்றங்
குரவன்வாக் கியத்தாற் றன்னைக் குறிக்கொளல் பரோட்ச ஞானம்(52)

தத்துவ விசாரஞ் செய்து சகலசந் தேக மும்போ
யத்துவி தந்தா னாத லபரோட்ச ஞான மாகுங்
கர்த்தனாஞ் சீவ பேதங் கழிவதே துக்கம் போதன்
முத்தனா யெல்லாஞ் செய்து முடிந்ததா நந்த மாமே. (53)

இதுநினக் கறியும் வண்ண மிப்படி யொருதிட் டாந்தம்
புதுமையாங் கதைகேள் பத்துப் புருடரோ ராற்றை நீந்தி
யுதகதீ ரத்தி லேறி யொருவனொன் பதுபே ரெண்ணி
யதனொடு தசமன் றானென் றறியாமன் மயங்கி நின்றான். (54)

அறியாத மயலஞ் ஞான மவனிலை காணோ மென்றல்
பிறியாவா வரண மாகும் பீழைகொண் டழல்விட் சேப
நெறியாளன் றசம னுண்டு நிற்கின்றா னென்ற சொல்லைக்
குறியாக வெண்ணி நெஞ்சிற் கொள்வது பரோட்ச ஞானம். (55)

புண்ணிய பதிகன் பின்னும் புருடரொன் பதின்மர் தம்மை
யெண்ணுநீ தசம னாவை யென்னவே தன்னைக் காணல்
கண்ணினிற் கண்ட ஞானங் கரைதல்போ வதுநோய் போத
றிண்ணிய மனதி லையந் தெளிதலா நந்த மாமே. (56)

இம்பரில், நஞ்சை நஞ்சால், இரும்பினை இரும்பால்,
எய்யும்அம்பினை அம்பால்,பற்றும் அழுக்கினை அழுக்கால்
மாய்ப்பர்;வம்பியன் மாயை தன்னை, மாயையால் மாய்ப்பர்;
பின்னைத் தம்பமாம் அதுவுங் கூட ,சவம் சுடும் தடி போல் போமே. (50)

இந்த மாயையினால், சீவர்க்கு ஏழு அவத்தைகள் உண்டாகும்;
அந்த ஏழு அவத்தை தம்மை, அடைவினில் மொழியக் கேளாய்;
முந்த அஞ்ஞானம்,மூடல்,முளைத்தல்,காணாத ஞானம்,
சந்ததம் கண்ட ஞானம், தழல் கெடல், குளிர்மையாதல். (51)

பிரமமாம் தனை, மறந்த பேதமையே அஞ்ஞானம் ;
பர நிலை காணோம் என்று, பகர்தல் ஆவரண மூடல்;
நரன் ஒரு கருத்தால், சீவன் நான் என, முளைத்த தோற்றம்;
குரவன் வாக்கியத்தால்,தன்னைக் குறிக்கொளல் பரோட்ச ஞானம். (52)

தத்துவ விசாரம் செய்து, சகல சந்தேகமும் போய்,
அத்துவிதம் தானாதல், அபரோட்ச ஞானமாகும் ;
கர்த்தனாம், சீவ பேதம் கழிவதே, துக்கம் போதல் ;
முத்தனாய், எல்லாம் செய்து முடிந்தது ஆநந்தமாமே. (53)

இது நினக்கு அறியும் வண்ணம், இப்படி ஒரு திட்டாந்தம்;
புதுமையாம் கதை கேள்; பத்துப் புருடர் ஓர் ஆற்றை நீந்தி,
உதக தீரத்தில் ஏறி , ஒருவன் ஒன்பது பேர் எண்ணி,
அதனொடு,தசமன் தான் என்று அறியாமல்,மயங்கி நின்றான். (54)

அறியாத மயல் அஞ்ஞானம்;அவன்இ(ல்)லை,காணோம் என்றல்,
பிறியா ஆவரணம் ஆகும்; பீழை கொண்டு அழல் விட்சேபம்;
நெறியாளன், தசமன் உண்டு, நிற்கின்றான், என்ற சொல்லைக்
குறியாக எண்ணி, நெஞ்சில் கொள்வது பரோட்ச ஞானம். (55)

புண்ணிய பதிகன் பின்னும், புருடர் ஒன்பதின்மர் தம்மை
எண்ணும் நீ, தசமன் ஆவை என்னவே, தன்னைக் காணல்,
கண்ணினில் கண்ட ஞானம்; கரைதல் போவது,நோய் போதல்;
திண்ணிய மனதில், ஐயம் தெளிதல் ஆநந்தமாமே. (56)

தசபுமான் றனைக்கண் டாற்போற் சற்குரு மூர்த்தி யேயென்
னிசவடி வினையான் காண நீர்காட்டல் வேண்டு மென்றான்
சுசிபெறு மிலக்கி யார்த்தந் தொம்பதந் தற்ப தங்கட்
கசிபத வைக்கியஞ் செய்யு மதுசெயு முண்மை கேளாய். (57)

விண்ணொன்றை மகாவிண் ணென்று மேகவிண் ணென்றும் பாரின்
மண்ணொன்று கடவிண் ணென்று மருவிய சலவிண் ணென்று
மெண்ணுங்கற் பனைபோ லொன்றே யெங்குமாம் பிரம மீச
னண்ணுங்கூ டத்தன் சீவ னான்குசை தந்ய மாமே. (58)

பூச்சிய வீசன் சீவன் புகல்பத மிரண்டி னுக்கும்
வாச்சியம் லட்சி யந்தான் மலமிலாப் பிரம மான்மா
காச்சிய பாலி னெய்போற் கலந்தொன்றாங் கடைந்தெ டுக்கு
மாச்சிய மென்ன வுன்னை யறிந்துநீ பிறிந்து கொள்ளே. (59)

பிறிவதெப் படியென் றக்காற் பிணமாகு முடனா னென்னு
மறிவினைக் கொல்லல் வேண்டு மைம்பூத விகார மன்றோ
வெறியதோர் துருத்தி மூக்கின் விடுவது போலுன் மூக்கா
லெறிபிரா ணனுநீ யல்லை யிராசத குணவி காரம். (60)

கரணமா மனது புத்தி கருத்தாவா மவையான் மாவோ
தரமுள விரண்டு கோசஞ் சத்துவ குணவி காரம்
வரமறு துயிலா நந்த மயனையு நானென் னாதே
விரவிய தமவஞ் ஞான விருத்தியின் விகார மாமே. (61)

சத்தொடு சித்தா நந்தஞ் சமந்திரஞ் சாட்சி யேக
நித்தியம் வியாபி யான்மா நீயது வாவ றிந்து
பொத்தொடு சடந்துக் காதி பொருந்துபே தங்க ளான
குத்திர பஞ்ச கோசக் குகைவிட்டு வெளியி லாவாய். (62)

பஞ்சகோ சமும்விட் டப்பாற் பார்க்கின்ற பொழுது பாழே
விஞ்சிய ததுவல் லாமல் வேறொன்றுந் தெரியக் காணே
னஞ்சன விருளை யோநா னகமென வநுப விப்பேன்
வஞ்சமில் குருவே யென்ற மகன்மதி தெளியச் சொல்வார். (63)

தச புமான், தனைக் கண்டாற் போல், சற்குரு மூர்த்தியே!
என்நிச வடிவினை, யான் காண, நீர் காட்டல் வேண்டும் என்றான்;
சுசி பெறும் இலக்கியார்த்தம்; தொம் பதம், தத் பதங்கட்கு,
அசி பத ஐக்கியம் செய்யும்; அது செயும் உண்மை கேளாய். (57)

விண் ஒன்றை மகா விண் என்றும்,மேக விண் என்றும்;
பாரில், மண் ஒன்று கட விண் என்றும், மருவிய சல விண் என்றும் ;
எண்ணும் கற்பனை போல் ஒன்றே, எங்குமாம் பிரமம், ஈசன்,
நண்ணும் கூடத்தன், சீவன்; நான்கு சைதன்யமாமே. (58)

பூச்சிய ஈசன் சீவன், புகல் பதம் இரண்டினுக்கும் வாச்சியம்;
லட்சியந்தான், மலம் இ(ல்)லாப் பிரமம், ஆன்மா ;
கா(ய்)ச்சிய பாலில் நெய் போல் கலந்து ஒன்றாம்; கடைந்து எடுக்கும்
ஆச்சியம் என்ன? உன்னை அறிந்து , நீ பிறிந்து கொள்ளே. (59)

பிறிவது எப்படி? என்றக்கால், பிணமாகும் உடல் நான் எனும்,
அறிவினைக் கொல்லல் வேண்டும்; ஐம்பூத விகாரமன்றோ?
வெறியது ஓர் துருத்தி மூக்கின் விடுவது போல், உன் மூக்கால்,
எறி பிராணனு(ம்), நீ அல்லை; இராசத குண விகாரம். (60)

கரணமாம் மனது; புத்தி கருத்தவாம்; அவை ஆன்மாவோ?
தரமுள இரண்டு கோசம், சத்துவ குண விகாரம்;
வரம் அறு, துயில் ஆனந்தமயனையும், நான் என்னாதே;
விரவிய, தம அஞ்ஞான விருத்தியின் விகாரமாமே. (61)

சத்தொடு சித்து, ஆநந்தம், சமம், திரம், சாட்சி, ஏகம்,
நித்தியம், வியாபி, ஆன்மா; நீ அதுவா அறிந்து,
பொத்தொடு சடம் துக்காதி, பொருந்து பேதங்களான,
குத்திர பஞ்ச கோசக் குகை விட்டு, வெளியில் ஆவாய். (62)

பஞ்சகோசமும் விட்டு, அப்பால் பார்க்கின்ற பொழுது பாழே;
விஞ்சியது அதுவல்லாமல், வேறு ஒன்றும் தெரியக் காணேன்;
அஞ்சன இருளையோ ? நான் அகம் என அனுபவிப்பேன்!
வஞ்சமில் குருவே! என்ற, மகன் மதி தெளியச் சொல்வார். (63)

முன்புக றசமன் புத்தி மோகத்தா லெண்ணி யெண்ணி
யொன்பது பேரைக் கண்ட வொருவனாந் தனைக்கா ணாத
பின்பவ னிடையிற் கண்ட பெரியபா ழவனோ பாரா
யன்புள மகனே காண்ப தடங்கலுங் காண்பா னீயே. (64)

தூலசூக் குமவஞ் ஞானந் தோன்றுமுன் றவத்தை தாமுங்
காலமோர் மூன்றுஞ் சன்மக் கடலெழுங் கல்லோ லங்கள்
போலவே வந்து வந்து போனவெத் தனையென் பேனா
னாலமர் கடவு ளாணை யவைக்கெலாஞ் சாட்சி நீயே. (65)

எல்லாங்கண் டறியு மென்னை யேதுகொண் டறிவே னென்று
சொல்லாதே சுயமாஞ் சோதிச் சுடருக்குச் சுடர்வே றுண்டோ
பல்லார்முன் றசமன் றன்னைப் பார்ப்பதுந் தனைக்கொண் டேதா
னல்லாமற் பதினொன் றானு மவனிடத் துண்டோ பாராய். (66)

அறிவுக்கு மறிவு செய்யு மறிவுவே றுண்டென் றெண்ணு
மறிவற்ற குதர்க்க மூடர்க் கனவத்தை பலமாய்த் தீரு
மறிபடும் பொருணீ யல்லை யறிபடாப் பொருணீ யல்லை
யறிபொரு ளாகு முன்னை யநுபவித் தறிவாய் நீயே. (67)

மதுரமாங் கட்டி சுட்ட மாப்பணி யார மெல்லா
மதுரமாக் கியவ தற்கு மதுரந்தான் சுபாவ மன்றோ
வதுவிது வெனுஞ்ச டங்க ளறிவாக வறிவைத் தந்தே
யதுவிது விரண்டு மாகா வகம்பொரு ளறிவாய் நீயே. (68)

இந்தநீ துவம்ப தத்தி னிலட்சியப் பொருளா மென்றும்
பந்தமில் பிரம மேதற் பதந்தனி லிலட்சி யார்த்த
மந்தமாஞ் சீவ னீச னவர்களே வாச்சி யார்த்தஞ்
சந்ததம் பேத மாவார் தமக்கயிக் கியங்கூ டாதே. (69)

பேதமா னதுவுங் கேளாய் பெயராலு மிடங்க ளாலு
மோதரு முபாதி யாலு முடலாலு முணர்வி னாலும்
பாதலம் விசும்பு போலப் பலதூர மகன்று நிற்ப
ராதலா லிவர்க்கெந் நாளு மயிக்கியமென் பதுகூ டாதே. (70)

முன் புகல் தசமன், புத்தி மோகத்தால் எண்ணி எண்ணி,
ஒன்பது பேரைக் கண்ட ஒருவனாம்,தனைக் காணாத பின்பு,
அவன் இடையில் கண்ட, பெரிய பாழ் அவனோ ? பாராய்;
அன்புள மகனே! காண்பது அடங்கலும்,காண்பான் நீயே ! (64)

தூல, சூக்கும, அஞ்ஞானம் தோன்று(ம்) மூன்று அவத்தை தாமும்;
காலம் ஓர் மூன்றும்,சன்மக் கடல் எழும் கல்லோலங்கள் போலவே,
வந்து வந்து போனவை எத்தனை என்பேன்? நான்;
ஆலமர் கடவுள் ஆணை! அவைக்கு எ(ல்)லாம் சாட்சி நீயே ! (65)

எல்லாம் கண்டு அறியும் என்னை,ஏது கொண்டு அறிவேன்?
என்று சொல்லாதே! சுயமாம் சோதி சுடருக்கு, சுடர் வேறு உண்டோ?
பல்லார் முன்,தசமன் தன்னைப் பார்ப்பதும்,தனைக் கொண்டே தான்;
அல்லாமல், பதினொன்றானும் அவனிடத்து உண்டோ! பாராய். (66)

அறிவுக்கும் அறிவு செய்யும் அறிவு, வேறு உண்டு என்று எண்ணும்,
அறிவற்ற குதர்க்க மூடர்க்கு, அநவத்தை பலமாய்த் தீரும்;
அறிபடும் பொருள் நீ அல்லை; அறிபடாப் பொருள் நீ அல்லை;
அறிபொருள் ஆகும் உன்னை, அனுபவித்து அறிவாய் நீயே. (67)

மதுரமாம் கட்டி சுட்ட மாப்பணியாரம் எல்லாம்,மதுரம் ஆக்கிய
அதற்கு, மதுரந்தான் சுபாவம் அன்றோ? அது, இது ,எனும்
சடங்கள், அறிவாக அறிவைத் தந்தே, அது, இது, இரண்டும்
ஆகா(து); அகம் பொருள் அறிவாய் நீயே. (68)

இந்த நீ, துவம் பதத்தின் இலட்சியப் பொருளாம் என்றும்,
பந்தமில் பிரமமே, தத் பதந்தனில் இலட்சியார்த்தம்;
அந்தமாம் சீவன், ஈசன் அவர்களே வாச்சியார்த்தம்;
சந்ததம் பேதம் ஆவார்; தமக்கு ஐக்கியம் கூடாதே. (69)

பேதமான அதுவும் கேளாய் ; பெயராலும், இடங்களாலும்,
ஓதரும் உபாதியாலும் , உடலாலும், உணர்வினாலும்;
பாதலம் விசும்பு போல, பல தூரம் அகன்று நிற்பர்;
ஆதலால், இவர்க்கு எந்நாளும் ஐக்கியம் என்பது கூடாதே. (70)

வடநூல்வல் லவர்கள் சொல்லும் வாசகப் பொருள்சே ராம
லிடராகிற் பொருளாம் வண்ண மிலக்கணை யுரையாற் கொள்வார்
திடமான வதுவு மூன்றாச் செப்புவார் விட்ட தென்றும்
விடலிலா தென்றும் விட்டு விடாததென் றும்பே ராமே. (71)

கங்கையிற் கோஷ மென்றுங் கறுப்புச்சேப் போடு தென்றுந்
தங்கிய சோயந் தேவ தத்தனென் றுஞ்சொல் வார்க
ளிங்குதா ரணங்க ளாக்கி யிந்தமூன் றுரைக ளாலே
துங்கநூல் விரோத மான சொல்லெலாம் பொருளாந் தானே. (72)

பன்னிய சோய மென்னும் பதங்களின் வாச்சி யார்த்த
மன்னிய தேசங் கால மவனிவ னென்ப வெல்லாஞ்
சொன்னவிவ் விரோதம் விட்டுத் தொடரிலக் கியம்வி டாம
லுன்னிடிற் றேவ தத்த னொருவனை வெளியாக் காட்டும். (73)

தத்துவ மெனும்ப தங்கள் பிரமமாய்ச் சாட்சி யான
வத்துவை விடாமற் பேத வாச்சியார்த் தத்தை விட்டு
நித்தமு மதுநீ யாகு நீயது வாகு மென்னு
மத்தமு மகண்ட மென்றே யசிபத வைக்கியங் காட்டும். (74)

கடநீரின் மேகநீரிற் கண்டவா னிரண்டும் பொய்யே
குடவானும் பெரிய வானுங் கூடியொன் றாமெப் போது
மிடமான பிரமஞ் சாட்சி யிரண்டுமெப் போது மேகந்
திடமாகச் சுவாநு பூதி சிவோகமென் றிருந்தி டாயே. (75)

தஞ்சமாங் குருவுஞ் சொன்ன தத்துவ வழிதப் பாமற்
பஞ்சகோ சமுங்க டந்து பாழையுந் தள்ளி யுள்ளிற்
கொஞ்சமா மிருப்பும் விட்டுக் கூடத்தன் பிரம மென்னு
நெஞ்சமு நழுவி யொன்றாய் நின்றபூ ரணத்தைக் கண்டான். (76)

அனுபவா நந்த வெள்ளத் தழுந்தியே யகண்ட மாகித்
தனுகர ணங்க ளாதி சகலமு மிறந்து சித்தாய்
மனதுபூ ரணமாய்த் தேக மானசற் குருவுங் காண
நனவினிற் சுழுத்தி யாகி நன்மகன் சுபாவ மானான். (77)

வடநூல் வல்லவர்கள், சொல்லும் வாசகப் பொருள் சேராமல்
இடராகில்,பொருளாம் வண்ணம், இலக்கணை உரையால் கொள்வார்;
திடமான அதுவும் மூன்றாச் செப்புவார்; விட்டது என்றும்,
விடல் இலாது என்றும், விட்டு விடாதது என்றும் பேராமே. (71)

கங்கையில் கோஷம் என்றும், கறுப்பு,சேப்பு ஓடுது என்றும்,
தங்கிய, சோயம் தேவதத்தன் என்றும் சொல்வார்கள்;
இங்கு உதாரணங்கள் ஆக்கி, இந்த மூன்று உரைகளாலே,
துங்க நூல் விரோதமான ,சொல் எ(ல்)லாம் பொருளாம் தானே. (72)

பன்னிய சோயம் என்னும் பதங்களின், வாச்சியார்த்தம்;
அந்நிய தேசம், காலம், அவன், இவன் என்பவெல்லாம்;
சொன்ன இவ்விரோதம் விட்டு, தொடர் இலக்கியம் விடாமல்,
உன்னிடில் தேவதத்தன் ஒருவனை, வெளியாக் காட்டும். (73)

தத்துவம் எனும் பதங்கள், பிரமமாய், சாட்சியான,
வத்துவை விடாமல், பேத வாச்சியார்த்தத்தை விட்டு,
நித்தமும் அது நீயாகும், நீ அதுவாகும் என்னும் அ(ர்)த்தமும்,
அகண்டம் என்றே அசிபத ஐக்கியம் காட்டும். (74)

கட நீரில், மேக நீரில், கண்ட வான் இரண்டும் பொய்யே;
குட வானும், பெரிய வானும் கூடி, ஒன்றாம் எப்போதும்;
இடமான பிரமம், சாட்சி இரண்டும், எப்போதும் ஏகம்;
திடமாகச் சுவானுபூதி, சிவோகம் என்று இருந்திடாயே. (75)

தஞ்சமாம் குருவும் சொன்ன, தத்துவ வழி தப்பாமல்,
பஞ்ச கோசமும் கடந்து, பாழையும் தள்ளி, உள்ளில்
கொஞ்சமாம் இருப்பும் விட்டு, கூடத்தன் ,பிரமம் என்னும்
நெஞ்சமும் நழுவி, ஒன்றாய் நின்ற பூரணத்தைக் கண்டான். (76)

அனுபவ ஆனந்த வெள்ளத்து அழுந்தியே ,அகண்டமாகி,
தனு, கரணங்களாதி சகலமும் இறந்து, சித்தாய்,
மனது பூரணமாய், தேகமான சற்குருவும் காண,
நனவினில் சுழுத்தியாகி, நன்மகன் சுபாவம் ஆனான். (77)

அளிமக னெடும்போ திவ்வா றானபின் மனது மெள்ள
வெளியில்வந் திடவு ணர்ந்தான் விமலதே சிகனைக் கண்டான்
றுளிவிழி சொரியப் பாதந் தொழுதுவீழ்ந் தெழுந்து சூழ்ந்தான்
குளிர்முகச் சுவாமி கேட்கக் கும்பிட்டு நின்று சொல்வான். (78)

ஐயனே யெனதுள் ளேநின் றநந்தசன் மங்க ளாண்ட
மெய்யனே யுபதே சிக்க வெளிவந்த குருவே போற்றி
யுய்யவே முக்தி நல்கு முதவிக்கோ ருதவி நாயேன்
செய்யுமா றொன்றுங் காணேன் றிருவடி போற்றி போற்றி. (79)

சிட்டனிவ் வாறு கூறத் தேசிகர் மகிழ்ந்து நோக்கிக்
கிட்டவா வெனவி ருத்திக் கிருபையோ டருளிச் செய்வார்
துட்டமாந் தடைகண் மூன்றுந் தொடராமற் சொரூப ஞான
நிட்டனா யிருக்கி னீதே நீசெயு முதவி யாமே. (80)

நீநானென் றிரண்டி லாம னிறைந்தபூ ரணமா யெங்கு
நானாகத் தெளிந்த ஞான நழுவுமோ குருவே யென்றான்
றானாகும் பிரம ரூபஞ் சற்குரு நூலாற் றோன்று
மானாலுந் தடைக ளுண்டே லநுபவ முறைத்தி டாதே. (81)

தடையெவை யெனிலஞ் ஞான சந்தேக விபரீ தங்கள்
படர்செயு மிந்த மூன்றும் பலசன்மப் பழக்கத் தாலே
யுடனுடன் வரும்வந் தக்கா லுயர்ஞானங் கெடுமி வற்றைத்
திடமுடன் கெடுப்பாய் கேட்டல் சிந்தித்த றெளித லாலே. (82)

அக்கினிக் கட்டுப் பட்டா லற்பமுஞ் சுடமாட் டாது
மக்கின ஞானத் தாலே வந்தபந் தமும்வே வாது
சிக்கெனப் பழகிக் கேட்டல் சிந்தித்த றெளித லாலே
விக்கின மடஞ்சந் தேகம் விபரீதம் போக்கு வாயே. (83)

பிரமபா வனையை மூடிப் பேதங்காட் டுவதஞ் ஞானங்
குரவன்வாக் கியநம் பாமற் குழம்புவ தாஞ்சந் தேகந்
திரமறு சகமெய் யென்றுந் தேகநா னென்று முள்ளே
விரவிய மோகந் தானே விபரீத மென்பர் மேலோர். (84)

அளி மகன் நெடும் போது இவ்வாறான பின், மனது மெள்ள
வெளியில் வந்திட உணர்ந்தான்; விமல தேசிகனைக் கண்டான்;
துளி விழி சொரிய, பாதம் தொழுது, வீழ்ந்து,எழுந்து ,சூழ்ந்தான்;
குளிர்முகச் சுவாமி கேட்க, கும்பிட்டு ,நின்று சொல்வான். (78)

ஐயனே! எனது உள்ளே நின்று, அனந்த சென்மங்கள் ஆண்ட
மெய்யனே! உபதேசிக்க, வெளி வந்த குருவே போற்றி!
உய்யவே, முக்தி நல்கும் உதவிக்கு ஓர் உதவி, நாயேன்
செய்யுமாறு, ஒன்றும் காணேன்; திருவடி போற்றி! போற்றி ! (79)

சிட்டன் இவ்வாறு கூற; தேசிகர் மகிழ்ந்து நோக்கி,
கிட்டவா என இருத்தி, கிருபையோடு அருளிச் செய்வார்;
துட்டமாம் தடைகள் மூன்றும் தொடராமல், சொருப ஞான
நிட்டனாய் இருக்கில், ஈதே நீ செயும் உதவியாமே. (80)

நீ,நான் என்ற இரண்டு(ம்) இ(ல்)லாமல்,நிறைந்த பூரணமாய்,
எங்கும் நானாகத் தெளிந்த ஞானம், நழுவுமோ குருவே?என்றான்;
தானாகும் பிரம ரூபம், சற்குரு, நூலால் தோன்றும்; ஆனாலும்
தடைகள் உண்டேல் ,அனுபவம் உறைத்திடாதே. (81)

தடை எவை எனில்? அஞ்ஞான(ம்), சந்தேக(ம்), விபரீதங்கள்;
படர் செ(ய்)யும் இந்த மூன்றும், பல சன்மப் பழக்கத்தாலே,
உடன் உடன் வரும்;வந்தக்கால்,உயர் ஞானம் கெடும்; இவற்றைத்
திடமுடன் கெடுப்பாய்; கேட்டல் ,சிந்தித்தல், தெளிதலாலே. (82)

அக்கினிக் கட்டுப்பட்டால், அற்பமும் சுட மாட்டாது;
மக்கின ஞானத்தாலே, வந்த பந்தமும் வேவாது;
சிக்கெனப் பழகிக் கேட்டல், சிந்தித்தல், தெளிதலாலே;
விக்கின மடம், சந்தேகம், விபரீதம் போக்குவாயே. (83)

பிரம பாவனையை மூடி ,பேதம் காட்டுவது அஞ்ஞானம்;
குரவன் வாக்கிய(ம்) நம்பாமல், குழம்புவதாம் சந்தேகம்;
திரம் அறு சகம் மெய் என்றும்,தேக(ம்) நான் என்றும்,
உள்ளே விரவிய மோகந் தானே, விபரீதம் என்பர் மேலோர். (84)

தத்துவ வநுபோ கந்தான் சாதித்தல் கேட்ட லென்பா
ரொத்துள பொருளு கத்தா லுசாவல்சிந் தித்த லென்பார்
சித்தமே காந்த மான தெரிசனந் தெளித லென்பார்
நித்தமிப் படிசெய் தக்கா னிருவாணம் பெறுவாய் நீயே. (85)

எத்தனை நாண்ஞா தாவு ஞானமு மிருக்கு முன்பா
லத்தனை நாளும் வேண்டு மப்பாலோர் செயலும் வேண்டா
நித்தமும் வெளிபோற் பற்றா ஞேயமாத் திரமாய்ச் சீவன்
முத்தரா னவர் விதேக முத்திபெற் றிருப்பா ரென்றும். (86)

ஞானமார் சீவன் முத்தர் நால்வகை யாவர் கேளாய்
வானிகர் பிரம வித்து வரன்வரி யான்வ ரிட்ட
னானவர் நாம மாகு மவர்களிற் பிரம வித்தின்
றானமு மற்றை மூவர் தாரதம் மியமுஞ் சொல்வேன். (87)

தீரராய் பிரம வித்தாய்த் தெளிந்தவர் தெளியு முன்னம்
வாரமா யிருந்த தங்கள் வருணமாச் சிரமஞ் சொன்ன
பாரகா ரியமா னாலும் பலர்க்குப கார மாக
நேரதாச் செய்வர் தீர்ந்த நிலைவிடார் சீவன் முத்தர். (88)

காமமா திகள்வந் தாலுங் கணத்திற்போ மனத்திற் பற்றார்
தாமரை யிலைத்தண் ணீர்போற் சகத்தொடுங் கூடி வாழ்வார்
பாமர ரெனக்காண் பிப்பார் பண்டிதத் திறமை காட்டார்
ஊமரு மாவா ருள்ளத் துவகையாஞ் சீவன் முத்தர். (89)

பேதகன் மத்தால் வந்த பிராரத்த நாநா வாகு
மாதலால் விவகா ரங்க ளவரவர்க் காவ வாகும்
மாதவஞ் செயினுஞ் செய்வார் வாணிபஞ் செயினுஞ் செய்வார்
பூதலம் புரப்பா ரையம் புகுந்துண்பார் சீவன் முத்தர். (90)

சென்றது கருதார் நாளைச் சேர்வது நினையார் கண்மு
னின்றது புசிப்பார் வெய்யி னிலவாய்விண் விழுது வீழ்ந்து
பொன்றின சவம்வாழ்ந் தாலும் புதுமையா வொன்றும் பாரார்
நன்றுதீ தென்னார் சாட்சி நடுவான சீவன் முத்தர். (91)

தத்துவ அனுபோகந்தான், சாதித்தல், கேட்டல் என்பார்;
ஒத்துள பொருள் ஊகத்தால் உசாவல், சிந்தித்தல் என்பார்;
சித்தம் ஏகாந்தமான தெரிசனம்,தெளிதல் என்பார்;
நித்தம் இப்படி செய்தக்கால், நிருவாணம் பெறுவாய் நீயே. (85)

எத்தனை நாள் ஞாதாவும், ஞானமும் இருக்கும் உன்பால்?
அத்தனை நாளும் வேண்டும்; அப்பால் ஓர் செயலும் வேண்டா(ம்);
நித்தமும் வெளி போல் பற்றா(து),ஞேய(ம்) மாத்திரமாய்,
சீவன்முத்தர் ஆனவர், விதேக முத்தி பெற்றிருப்பார் என்றும். (86)

ஞானமார் சீவன் முத்தர்,நால்வகை ஆவர் கேளாய்;
வான் நிகர் பிரமவித்து, வரன்,வரியான், வரிட்டன் ஆனவர்
நாமம் ஆகும்; அவர்களில்,பிரமவித்தின் (ஸ்)தானமும்,
மற்றை மூவர் தாரதம்மியமும் சொல்வேன். (87)

தீரராய், பிரமவித்தாய்,தெளிந்தவர்,தெளியு(ம்) முன்னம்
வாரமாய் இருந்த ,தங்கள் வருண(ம்),ஆச்சிரமம் சொன்ன
பார காரியம் ஆனாலும், பலர்க்கு உபகாரமாக,
நேரதாச் செய்வர்; தீர்ந்த நிலை விடார் சீவன்முத்தர். (88)

காமமாதிகள் வந்தாலும், கணத்தில் போம், மனத்தில் பற்றார்;
தாமரை இலைத் தண்ணீர் போல், சகத்தொடும் கூடி வாழ்வார்;
பாமரர் எனக் காண்பிப்பார்;பண்டிதத் திறமைக் காட்டார்;
ஊமரும் ஆவார்; உள்ளத்து உவகையாம் சீவன்முத்தர். (89)

பேத கன்(ம)மத்தால் வந்த பிராரத்த(ம்), நாநா ஆகும்;
ஆதலால் விவகாரங்கள், அவரவர்க்கு ஆவவாகும்;
மாதவம் செ(ய்)யினும் செய்வார்; வாணிபம் செ(ய்)யினும் செய்வார்;
பூதலம் புரப்பார் ; ஐயம் புகுந்து உண்பார் சீவன்முத்தர். (90)

சென்றது கருதார்; நாளைச் சேர்வது நினையார்; கண்முன்
நின்றது புசிப்பார்; வெய்யில் நிலவாய்; விண் விழுது வீழ்ந்து;
பொன்றின சவம் வாழ்ந்தாலும், புதுமையா(ய்) ஒன்றும் பாரார்;
நன்று, தீது என்னார்; சாட்சி நடுவான சீவன் முத்தர். (91)

பின்னைமூ வரிலி ரண்டு பேர்களுஞ் சமாதி யோகந்
தன்னையுற் றிருப்பார் தேக சஞ்சார நிமித்தந் தானா
யுன்னுவோன் வரன்வேற் றோரா லுணர்பவன் வரியா னாகு
மன்னியர் தம்மாற் றன்னா லறியாதோன் வரிட்ட னாமே. (92)

அரிதாகு மிவர்க ளிவ்வா றநேகரா னாலு முத்தி
சரியாகும் பாடு பட்ட சமாதிக்குப் பலனே தென்றால்
பெரிதான திருஷ்ட துக்கம் பிரமவித் தநுப விப்பன்
வரியானும் வரனு மற்றை வரிட்டனுஞ் சுகமாய் வாழ்வார். (93)

பிரமஞா னிகளுங் கர்மப் பேதையர் போலே வாழ்ந்தாற்
றிரமுறு மஞ்ஞா னம்போய்ச் செனியாத வழியே தென்றால்
பரவுமா காச மொன்றிற் பற்றாது மற்றை நான்கும்
விரவின தோடுங் கூடும் விதமிரு வோரு மாவர். (94)

சீவன்முத் தரைச்சே வித்தோர் சிவனய னெடுமா லான
மூவரு மகிழ நோன்பு முழுவதுஞ் செய்து சன்ம
பாவன மானா ரென்று பழமறை முழங்கு மிப்பான்
மேவருஞ் சீவன் முத்தர் விதேகமுத் தியுநீ கேளாய். (95)

பஞ்சினை யூழித் தீப்போற் பலசன்ம விவித வித்தாஞ்
சஞ்சித மெல்லா ஞானத் தழல்சுட்டு வெண்ணீ றாக்குங்
கிஞ்சிதா காமி யந்தான் கிட்டாமல் விட்டுப் போகும்
விஞ்சின பிராரத் தத்தின் வினையநு பவித்துத் தீரும். (96)

பொறுமையாற் பிராரத் தத்தைப் புசிக்குநாட் செய்யுங் கர்ம
மறுமையிற் றொடர்ந்தி டாமன் மாண்டுபோம் வழியே தென்றால்
சிறியவ ரிகழ்ந்து ஞானி செய்தபா வத்தைக் கொள்வா
ரறிவுளோ ரறிந்து பூசித் தறமெலாங் கைக்கொள் வாரே. (97)

அரியமெய்ஞ் ஞானத் தீயா லவித்தையா முடனீ றாகும்
பெரியதூ லமுங்கா லத்தாற் பிணமாகி விழுமந் நேர
முரியசூக் குமச ரீர முலையிரும் புண்ட நீர்போற்
றுரியமாய் விபுவாய் நின்ற சொரூபத்தி லிறந்து போமே. (98)

பின்னை மூவரில், இரண்டு பேர்களும் சமாதி யோகந் தன்னை
உற்றிருப்பார்; தேக சஞ்சார நிமித்தந் தானாய் உன்னுவோன்
வரன்;வேற்றோரால் உண்பவன் வரியான் ஆகும்;
அன்னியர் தம்மால், தன்னால் அறியாதோன் வரிட்டனாமே. (92)

அரிதாகும் இவர்கள், இவ்வாறு அநேகரானாலு(ம்),
முத்தி சரியாகும்; பாடுபட்ட சமாதிக்குப் பலன் ஏது? என்றால்,
பெரிதான திருஷ்ட துக்கம், பிரம வித்து அனுபவிப்பன்;
வரியானும்,வரனும், மற்றை வரிட்டனும் சுகமாய் வாழ்வார். (93)

பிரம ஞானிகளும்,கர்மப் பேதையர் போலே வாழ்ந்தால்,
திரம்உறும் அஞ்ஞானம் போய் ,செனியாத வழியேது? என்றால்,
பரவும் ஆகாசம் ஒன்றில் பற்றாது ; மற்றை நான்கும்,
விரவினதோடும் கூடும்; விதம் இருவோரும் ஆவார். (94)

சீவன் முத்தரைச் சேவித்தோர் சிவன்,அயன்,நெடுமால் ஆன
மூவரும் மகிழ, நோன்பு முழுவதும் செய்து , சன்மப் பாவனம்
ஆனார் என்று,பழமறை முழங்கும்;இப்பால்,
மேவரும் சீவன் முத்தர்,விதேக முத்தியும் நீ கேளாய். (95)

பஞ்சினை ஊழித் தீப்போல்,பல சன்ம விவித வித்தாம்;
சஞ்சிதம் எல்லாம்,ஞானத் தழல் சுட்டு வெண்ணீறு ஆக்கும்;
கிஞ்சித் ஆகாமியந்தான், கிட்டாமல் விட்டுப் போகும் ;
விஞ்சின பிராரத்தத்தின், வினை அனுபவித்துத் தீரும். (96)

பொறுமையால், பிராரத்தத்தைப் புசிக்கு(ம்) நாள் செய்யும் கர்மம்,
மறுமையில் தொடர்ந்திடாமல் மாண்டுபோம்; வழியேது? என்றால்,
சிறியவர் இகழ்ந்து, ஞானி செய்த பாவத்தைக் கொள்வார்;
அறிவு (உ)ளோர் அறிந்து,பூசித்து,அறம் எ(ல்)லாம் கைக்கொள்வாரே. (97)

அரிய மெய்ஞ்ஞானத் தீயால், அவித்தையாம் உடல் நீறாகும்;
பெரிய தூலமும்,காலத்தால் பிணமாகி விழும்; அந்நேரம்,
உரிய சூக்கும சரீரம், உலை இரும்பு உண்ட நீர் போல,
துரியமாய், விபுவாய், நின்ற சொரூபத்தில் இறந்து போமே. (98)

கடமெனு முபாதி போனாற் ககனமொன் றானாற் போல
வுடலெனு முபாதி போன வுத்தரஞ் சீவன் முத்த
ரடிமுடி நடுவு மின்றி யகம்புற மின்றி நின்ற
படிதிகழ் விதேக முத்திப் பதமடைந் திருப்ப ரென்றும். (99)

சொல்லிய மகனே யெங்குஞ் சூழ்வெளி யிருக்க மண்ணைக்
கெல்லிய பின்பு தோன்றுங் கிணற்றினா காசம் போலே
யொல்லையாம் பிரம நூலா லுற்றது போலே தோன்று
மெல்லையி னாமெப் போது மேகமென் றிருந்து வாழ்வாய். (100)

கானனீர் கிளிஞ்சில் வெள்ளி கந்தர்ப்ப நகர்க னாவூர்
வானமை கயிற்றிற் பாம்பு மலடிசேய் முயலின் கோடு
யீனமாந் தறிபு மானிற் பிரபஞ்ச மெல்லாம் பொய்யே
ஞானமெய் மகனே யுன்னை நம்மாணை மறந்தி டாதே. (101)

தத்துவ விளக்கப் படலம் முற்றியது
ஆக மொத்தம் 101 பாடல்கள்
××××××××

## சந்தேகம் தெளிதல் படலம்

நரர்குழி பறித்து மெள்ள நாட்டிய நெடிய கம்பம்
உரமுறக் குத்திக் குத்தி யுறைப்பிக்கு முபாயம் போலப்
பரமசிற் சொரூபந் தன்னிற் பற்றிய மனோவி ருத்தி
திரநிலை பெறச்சந் தேகந் தெளிதலை மொழிகின் றேனே. (1)

நற்கருத் துடையோ னாகி ஞானவா னாகி நின்றோன்
மர்க்கட நியாயம் போல மகாபூத விகாரந் தொட்டு
நிர்க்குண விதேக முத்தி நிலைபரி யந்தஞ் சொன்ன
சற்குரு வினைவி டாமற் சந்தத மநுச ரித்தான். (2)

சந்ததம் புருடன் றன்னைச் சாயைபோல் விடாம லன்பாம்
மைந்தனை நோக்கிச் சாட்சி மாத்திர மாய்நின் றாயோ
சிந்தையி லைய மெல்லாந் தீர்ந்தவோ தெளிவி னுள்ளே
அந்தரங் கலந்த துண்டோ வநுபவ முரைசெய் வாயே. (3)

கடம் எனும் உபாதி போனால்,ககனம் ஒன்றானாற் போல,
உடல் எனும் உபாதி போன உத்தரம்,சீவன்முத்தர்;
அடி , முடி, நடுவும் இன்றி,அகம்,புறம் இன்றி நின்ற,
படி திகழ்,விதேக முத்திப் பதம் அடைந்திருப்பர் என்றும். (99)

சொல்லிய மகனே! எங்கும் சூழ்வெளி இருக்க,மண்ணைக்
கெல்லிய பின்பு,தோன்றும் கிணற்றின் ஆகாசம் போலே,
ஒல்லையாம், பிரம நூலால் உற்றது போலே தோன்றும்;
எல்லையில் நாம், எப்போதும் ஏகம், என்று இருந்து வாழ்வாய். (100)

கானல் நீர்,கிளிஞ்சில் வெள்ளி ,கந்தர்ப்ப நகர், கனாவூர்,
வான மை, கயிற்றில் பாம்பு, மலடி சேய், முயலின் கோடு,
பீனம் ஆம் தறி புமானில், பிரபஞ்சம் எல்லாம் பொய்யே;
ஞானம் மெய் மகனே ! உன்னை,நம் ஆணை,மறந்திடாதே. (101)

தத்துவ விளக்கப் படலம் முற்றியது
ஆக மொத்தம் 101 பாடல்கள்
××××××××

## சந்தேகம் தெளிதல் படலம்

நரர்குழி பறித்து, மெள்ள நாட்டிய நெடிய கம்பம்,
உரமுறக் குத்திக் குத்தி, உறைப்பிக்கும் உபாயம் போல,
பரம சிற் சொரூபம் தன்னில்,பற்றிய மனோவிருத்தி,
திரநிலை பெற,சந்தேகம் தெளிதலை மொழிகின்றேனே. (1)

நற்கருத்து உடையோனாகி, ஞானவான் ஆகி நின்றோன்;
மர்க்கட நியாயம் போல, மகா பூத விகாரம் தொட்டு,
நிர்க்குண விதேக முத்தி நிலை பரியந்தம் சொன்ன,
சற்குருவினை விடாமல், சந்ததம் அனுசரித்தான். (2)

சந்ததம் புருடன் தன்னை, சாயை போல் விடாமல்,
அன்பாம் மைந்தனை நோக்கி, சாட்சி மாத்திரமாய் நின்றாயோ!
சிந்தையில் ஐயம் எல்லாம் தீர்ந்ததோ, தெளிவின் உள்ளே
அந்தரம் கலந்தது உண்டோ? அனுபவம் உரை செய்வாயே. (3)

எனவுரைத் தருளு மாசா னிருபதம் வணங்கி யெந்தாய்
சனனவன் காட்டின் மோகத் தமத்தெழு பேதப் பேய்கள்
உனதரு ளுதய வெற்பி லுபதேச வருக்கன் றோன்றி
மனவிழி தெரிய ஞான வான்கதிர் பரந்தா லுண்டோ. (4)

மந்திர மூர்த்தி தன்னான் மாற்றிய பேய்போ னாலும்
எந்திர மெழுதிக் கட்டி யினிவரா வகைசெய் வார்போல்
முந்தியுன் னுபதே சத்தான் மோகம்போ னாலு மையா
புந்திநின் றுறைக்க வின்னம் புகலும்வின் ணப்ப முண்டே. (5)

ஆகமப் பிரமா ணத்தா லறியென்றும் வாக்குக் கெட்டா
தேகமாம் பிரம மென்று மிதயத்தா லுணர்வா யென்றும்
சோகமா மனதிற் கெட்டாச் சுயஞ்சோதி யென்றுஞ் சொன்னீர்
மோகமா மிரண்டு சங்கை முளைத்தன பறித்தி டிரே. (6)

மற்றைமுப் பிரமா ணத்தால் வத்துநின் னையங்கூ டாதே
உற்றதோர் விடயம் பூத முபயமன் றாத லாலே
குற்றமாங் குணவி சேடங் கூடாம லிருக்கை யாலே
இற்றது வாக்குக் கெட்டா தென்பது மறிவாய் நீயே. (7)

வாக்கியந் தனக்கெட் டாது வத்துவென் றுரைத்த வேதம்
வாக்கிய விருத்தி யாலவ் வத்துவைக் காட்டிற் றன்றோ
வாக்கியங் களிலே மான மாவதே தென்றா யாகில்
வாக்கிய மிரண்டு மெய்யே மறைகள்பொய் யாது கேளாய். (8)

தன்பதி யல்லாப் பேர்க டமையல்ல னல்ல னென்றாள்
அன்பனைக் கேட்ட நேர மவள்வெட்கி மௌந மானாள்
என்பது போல நீக்கி யிதன்றிதன் றெனச்சே டித்த
பின்பரப் பிரமந் தன்னைப் பேசாமற் காட்டும் வேதம். (9)

முந்திய சங்கை தீர மொழிந்ததை யறிந்து கொள்வாய்
பிந்திய சங்கை தீரப் பேசுமுத் தரநீ கேளாய்
இந்தியங் களுக்கி ராச னிதயமா மதினெண் ணங்கள்
புந்தியு மனமு மென்றே புறத்தகத் துலாவி யாடும். (10)

என உரைத்து அருளும் ஆசான் இருபதம் வணங்கி, எந்தாய்!
சனன வன்காட்டில், மோகத் தமத்து எழு(ம்) பேதப் பேய்கள்;
உனது அருள் உதய வெற்பில் உபதேச அருக்கன் தோன்றி,
மன விழி தெரிய,ஞான வான்கதிர் பரந்தால், உண்டோ ? (4)

மந்திர மூர்த்தி தன்னால்,மாற்றிய பேய் போனாலும்;
எந்திரம் எழுதிக் கட்டி, இனி வரா வகை செய்வார் போல்,
முந்தி உன் உபதேசத்தால்,மோகம் போனாலும் ஐயா!
புந்தி நின்று உறைக்க, இன்னம் புகலும் விண்ணப்பம் உண்டே. (5)

ஆகமப் பிரமாணத்தால் அறி என்றும், வாக்குக்கு எட்டாது,
ஏகமாம் பிரமம் என்றும், இதயத்தால் உணர்வாய் என்றும் ,
சோகமாம் மனதிற்கு எட்டா, சுயஞ்சோதி என்றும் சொன்னீர்;
மோகமாம் இரண்டு சங்கை முளைத்தன; பறித்திடிரே ! (6)

மற்றை முப்பிரமாணத்தால், வத்து நிண்ணயம் கூடாதே ;
உற்றதோர் விடயம், பூதம், உபயம் அன்று; ஆதலாலே,
குற்றமாம், குண, விசேடம் கூடாமல் இருக்கையாலே,
இற்றது வாக்குக்கு எட்டாது என்பதும், அறிவாய் நீயே. (7)

வாக்கியம் தனக்கு எட்டாது வத்து, என்று உரைத்த வேதம்;
வாக்கிய விருத்தியால்,அவ்வத்துவைக் காட்டிற்று அன்றோ?
வாக்கியங்களிலே மானம் ஆவது ஏது? என்றாயாகில்,
வாக்கியம் இரண்டும் மெய்யே; மறைகள் பொய்யாது கேளாய். (8)

தன் பதி அல்லாப் பேர்கள் தமை,அல்லன் அல்லன் என்றாள் ;
அன்பனைக் கேட்ட நேரம், அவள் வெட்கி மௌனமானாள்;
என்பது போல நீக்கி, இதன்று இதன்று எனச் சேடித்த பின்
பரப்பிரமம் தன்னை, பேசாமல் காட்டும் வேதம். (9)

முந்திய சங்கை தீர, மொழிந்ததை அறிந்து கொள்வாய்;
பிந்திய சங்கை தீர, பேசும் உத்தர(ம்), நீ கேளாய்;
இந்தியங்களுக்கு இராசன் இதயமாம்; அதில் எண்ணங்கள்,
புந்தியும், மனமும் என்றே புறத்து, அகத்து உலாவி ஆடும். (10)

உன்முகம் போற்கண் ணாடிக் குள்ளொரு முகங்கண் டாற்போல்
சின்மய வடிவின் சாயை சித்துப்போற் புத்தி தோன்றும்
நின்மனோ விருத்தி யந்த நிழல்வழி யாயு லாவும்
தன்மநன் மகனே யித்தைத் தானன்றோ ஞான மென்பார். (11)

உருக்கிய தராநீர் நாநா வுருவங்க ளானாற் போல
விருத்திகள் கடப டாதி விடயமாய்ப் பரிண மிக்கும்
அருப்பல விடய மெல்லா மாபாசன் றோற்று விக்கும்
இருட்டினில் விளக்குங் கண்ணு மில்லாமற் பொருள்கா ணாதே. (12)

எரிகின்ற விளக்காற் கண்ணா லிருட்பொருள் காணல் வேண்டும்
தெரிகின்ற பரிதி காணச் சென்றிடிற் கண்ணே போதும்
விரிகின்ற சகத்தைக் காண விருத்தியும் பலமும் வேண்டும்
புரிகின்ற விருத்தி யொன்றே போதுமெய்ப் பொருள்காண் போர்க்கே.(13)

விருத்தியும் பலமுங் கூடும் விகாரமே மனமென் பார்கள்
கருத்தெழு விருத்தி வேண்டுங் கணக்கினான் மனத்திற் கெட்டும்
வருத்திய பலமா மிந்த மனத்திற்கெட் டாது கண்டாய்
அருத்தமிப் படியென் றைய மகன்றுநீ தெளிந்தி டாயே. (14)

வஞ்சகமில் பரமார்த்த குருவே சொன்ன
வழிகளறிந் தேனினியோர் வசனங் கேளீர்
சஞ்சலமற் றகண்டபூ ரணமாய்ச் சித்தந்
ததாகார மாவதன்றோ சமாதி யோகம்
உஞ்சலையொத் தலைவது தன் சுபாவமாகி
யொருகணத்திற் பலவுலகா யுதிக்கு மிந்த
நெஞ்சகம்வத் துவிலசையா நிவாத தீப
நிலையடைவ தெப்படியோ நீர் சொல் வீரே. (15)

கருதுமனோ குணமூன்றா மூன்றி லொன்று
கதித்தெழுந்தான் மற்றிரண்டுங் கரந்து நிற்கும்
தருமமிகுஞ் சத்துவமே லான போது
சன்மார்க்க மானதெய்வ சம்பத் துண்டாம்

உன்முகம் போல்,கண்ணாடிக்குள் ஒரு முகம் கண்டாற் போல்,
சின்மய வடிவின் சாயை, சித்துப் போல் புத்தி தோன்றும்;
நின் மனோ விருத்தி, அந்த நிழல் வழியாய் உலாவும்;
தன்ம நன் மகனே! இத்தைத்தான் அன்றோ ஞானம் என்பார். (11)

உருக்கிய தரா நீர்,நாநா உருவங்களானாற் போல,
விருத்திகள், கட படாதி விடயமாய்ப் பரிணமிக்கும்;
அருப்பல விடயம் எல்லாம், ஆபாசன் தோற்றுவிக்கும் ;
இருட்டினில் விளக்கும், கண்ணும் இல்லாமல் பொருள் காணாதே. (12)

எரிகின்ற விளக்கால், கண்ணால் இருள் பொருள் காணல் வேண்டும்;
தெரிகின்ற பரிதி காண, சென்றிடில் கண்ணே போதும்;
விரிகின்ற சகத்தைக் காண வி ருத்தியும், பலமும் வேண்டும்;
புரிகின்ற விருத்தி ஒன்றே போதும்,மெய்ப்பொருள் காண்போர்க்கே. (13)

விருத்தியும்,பலமும் கூடும் விகாரமே,மனம் என்பார்கள்;கருத்து
எழு(ம்)விருத்தி வேண்டும் கணக்கினால்,மனத்திற்கு எட்டும்;
வருத்திய பலமாம், இந்த மனத்திற்கு எட்டாது, கண்டாய்;
அருத்தம் இப்படியென்று, ஐயம் அகன்று , நீ தெளிந்திடாயே. (14)

வஞ்சகமில் பரமார்த்த குருவே! சொன்ன
வழிகள் அறிந்தேன் ; இனி ஓர் வசனங் கேளீர் ;
சஞ்சலமற்று, அகண்ட பூரணமாய்ச் சித்தம்
தத் ஆகாரம் ஆவதன்றோ! சமாதி யோகம் ;
உஞ்சலை ஒத்து அலைவது தன் சுபாவமாகி,
ஒரு கணத்தில், பல உலகாய் உதிக்கும் இந்த
நெஞ்சகம், வத்துவில் அசையா, நிவாத தீப
நிலை அடைவது எப்படியோ? நீர் சொல்வீரே. (15)

கருது மனோ குண(ம்) மூன்றாம்; மூன்றில் ஒன்று
கதித்து எழுந்தால், மற்றஇரண்டும் கரந்து நிற்கும்;
தரும(ம்)மிகும் சத்துவம் மேலான போது,
சன்மார்க்கமான தெய்வ சம்பத்து உண்டாம்;

மருவுரசோ குணமாகி லுலக தேக
வாதனையாஞ் சாத்திரவா தனையு மாகும்
அருமகனே தமோகுணமே லான போதி
லசுரசம்பத் துண்டாகு மறிந்து கொள்ளே. (16)

மனதுசத் துவசொரூப மற்றிரண்டும்
வந்துகலந் தனவவற்றை மாற்றி னாற்போம்
தனதுசன்மார்க் கத்தைவிடா திருந்த போது
தமோகுணமும் ரசோகுணமுஞ் சமிக்கும் பின்னைக்
கனபரிணா மஞ்சலனம் போம்போ னக்காற்
களங்கமற்று நின்றவா காசம் போலும்
நினதுளமப் படியாமப் பிரமத் தொன்றாய்
நிருவிகற்ப சமாதியிலே நிற்குந் தானே. (17)

களங்கமற்ற கண்ணாடி தன்முன் வேறோர்
களங்கமற்ற கண்ணாடி காட்டும் போது
விளங்கியதன் மயமாகி யபேத மாகி
விகற்பமின்றி நிருவிகற்ப மானாற் போல
அளந்தறியப் படாவிபுவாய்ச் சத்தாய்ச் சித்தா
யாநந்த மாம்பிரமத் தைக்கிய மான
உளந்தெளிந்த படியிருந்தா லுலக மெங்கே
யுலைவெங்கே யென்றுசங்கை யொழித்தி டாயே. (18)

ஏகமாய் மனமிறந்தாற் சீவன் முத்த
ரிருக்குமட்டும் பிராரத்த மெதனா லுண்பார்
போகமா னதுபுசித்துத் தொலைப்ப தன்றோ
புசிப்பதென்றான் மனந்தானும் போன தன்றே
சோகமா மனமிறந்தாற் போக மில்லை
தோன்றுமெனின் முத்தரென்று சொலக் கூடாதே
மோகமா மிதுதெளியக் குருவே நன்றா
மொழிந்தருள்வாய் தெளிந்ததன்றோ முத்தி தானே. (19)

மருவு ரசோ குணமாகில், உலக தேக
வாதனையாம், சாத்திர வாதனையுமாகும் ;
அருமகனே!தமோ குண(ம்)மேலான போதில்,
அசுர சம்பத்து உண்டாகும்; அறிந்து கொள்ளே. (16)

மனது சத்துவ சொரூபம்; மற்ற இரண்டும்
வந்து கலந்தன; அவற்றை மாற்றினால் போம்;
தனது சன்மார்க்கத்தை விடாது இருந்த போது,
தமோ குணமும்,ரசோ குணமும் சமிக்கும்; பின்னைக்
கனபரிணாமம் சலனம்போம்; போனக்கால்,
களங்கமற்று நின்ற ஆகாசம் போலும்,
நினது உ(ள்)ளம் அப்படியாம், அப்பிரமத்து ஒன்றாய்,
நிருவிகற்ப சமாதியிலே, நிற்கும் தானே. (17)

களங்கமற்ற கண்ணாடி ,தன் முன் வேறு ஓர்
களங்கமற்ற கண்ணாடி காட்டும் போது,
விளங்கி ,அதன் மயமாகி, அபேதமாகி,
விகற்பமின்றி, நிருவிகற்பமானாற் போல்,
அளந்து அறியப்படா விபுவாய், சத்தாய், சித்தாய்,
ஆனந்தமாம் பிரமத்து, ஐக்கியமான
உ(ள்)ளம் தெளிந்தபடி இருந்தால்,உலகம் எங்கே ?
உலைவு எங்கே? என்று சங்கை ஒழித்திடாயே. (18)

ஏகமாய் மனம் இறந்தால், சீவன் முத்தர்
இருக்கு(ம்) மட்டும், பிராரத்தம் எதனால் உண்பார் ?
போகமானது புசித்துத் தொலைப்பது அன்றோ ?
புசிப்பது என்றால் மனந்தானும் போனது அன்றே!
சோகமா(ம்) மனம் இறந்தால் போகம் இல்லை;
தோன்றுமெனின்,முத்தர் என்று சொ(ல்)லக் கூடாதே;
மோகமாம், இது தெளியக் குருவே! நன்றா(ய்) மொழிந்து
அருள்வாய்; தெளிந்தது அன்றோ முத்தி தானே. (19)

மனநாசஞ் சொருபமென்று மரூப மென்றும்
வகுத்துரைப்பா ரிருவகையா வருமி வற்றில்
வினவாத சீவன்முத்த ரிடத்தி லொன்றும்
விதேகமுத்த ரிடத்திலொன்று மேவுங் கண்டாய்
தனதான சத்துவமாய் மனஞ்சே டித்துத்
தமசுரச சுகணசித்தல் சொருப நாசம்
அனகாசத் துவந்தானு மிலிங்க தேக
மடங்கும்போ தடங்குதலே யரூப நாசம் (20)

சுத்தமாஞ் சத்துவமே யுண்மை யாகுந்
துகளிருள்போ னான்மனமென் சொல்லும் போம்போம்
வர்த்தமா னத்தில்வந்த வுணவை யுண்பார்
வருவதும்போ வதுநினைந்து மகிழார் வாடார்
கர்த்தரா மகந்தையைவிட் டகர்த்த ராகிக்
கரணவிருத்திகள வத்தை காண்பா ராகி
முத்தரா யிருக்கலுமாம் புசிப்புங் கூடு
முட்டிலையென் றறிந்துசங்கை மோசிப் பாயே. (21)

விவகார வேளையெலாஞ் சமாதி யென்றால்
விகற்பமன்றோ மனமலைந்து விடாதோ விட்டால்
அவதான நழுவுமன்றோ வென்றா யாகி
லதற்கொருதிட் டாந்தம்கே ளாசை கொண்டு
நவமாகப் பரபுருடன் றன்னைக் கூடி
நயந்தசுக மநுபவித்த நாரிநெஞ்சந்
தவமான மனைத்தொழில்கள் செய்யும் போதுந்
தழுவியநு பவித்தசுகந் தனைவி டாதே. (22)

தேகத்த னலனாகி யகர்த்த னாகிச்
சீவனின்றிப் பிரமமாய்த் தெளிந்த முத்தன்
போகத்தை யுண்பனென்றாற் கருத்தா வாமே
பூரணமா மகர்த்தனுக்குப் போக முண்டோ

மனநாசம் சொருபம் என்றும்; அரூபம் என்றும்,
வகுத்து உரைப்பார்;இருவகையா(ய்) வரும் இவற்றில்,
வினவாத சீவன்முத்தரிடத்தில் ஒன்றும்,
விதேக முத்தரிடத்தில் ஒன்றும் மேவும், கண்டாய்;
தனதான சத்துவமாய்,மனம் சேடித்து,
தமசு, ரசசுகள் நசித்தல் சொருப நாசம்;
அனகா சத்துவம் தானும்,இலிங்க தேகம்
அடங்கும் போது,அடங்குதலே அரூப நாசம். (20)

சுத்தமாம் சத்துவமே உண்மையாகும்;
துகள், இருள் போனால், மனம் என் சொல்லும் ? போம்போம்;
வர்த்தமானத்தில் வந்த உணவை உண்பார்;
வருவதும்,போவது(ம்) நினைந்து மகிழார், வாடார்;
கர்த்தராம் அகந்தையை விட்டு, அகர்த்தராகி,
கரண விருத்திகள் அவத்தை காண்பாராகி,
முத்தராய் இருக்கலுமாம்; புசிப்பும் கூடும்;
முட்டு இ(ல்)லை என்று அறிந்து,சங்கை மோசிப்பாயே. (21)

விவகார வேளையெலாம் சமாதி என்றால்,
விகற்பமன்றோ? மனம் அலைந்து விடாதோ ! விட்டால்,
அவதானம் நழுவும் அன்றோ ? என்றாயாகில்,
அதற்கு ஒரு திட்டாந்தம் கேள்! ஆசை கொண்டு,
நவமாக, பரபுருடன் தன்னைக் கூடி,
நயந்த சுகம் அனுபவித்த நாரி நெஞ்சம்,
தவமான மனைத் தொழில்கள் செய்யும் போதும்,
தழுவி அநுபவித்த சுகந்தனை விடாதே. (22)

தேகத்தன் அலனாகி, அகர்த்தனாகி,
சீவனின்றி, பிரமமாய்த் தெளிந்த முத்தன்,
போகத்தை உண்பன் என்றால், கருத்தாவாமே;
பூரணமாம் அகர்த்தனுக்கு, போகம் உண்டோ ?

சோகத்தை யறுத்தருளுங் குருவே யிந்தத்
துகளறுக்க வேண்டுமென்று சொன்னா யாகில்
மாகர்த்தன் மாபோகி மாத்தி யாகி
வகைமூன்றா யவரிருக்கு மகிமை கேளாய். (23)

செய்கையுஞ்செய் விக்கையுமற் றிருக்குங்
காந்தச் சிலைமலைமுன் னிரும்புகள்சேட் டிக்கு மாபோல்
செய்கையுஞ்செய் விக்கையுமற் றிருக்கு மென்முன்
செடமான வுலகமெலாஞ் சேட்டை செய்யும்
மெய்கலந்த விந்திரிய விகார ரூப
விவகார விருத்திக்கும் விருத்தி தானா
மெய்கலந்த சமாதிக்குஞ் சாட்சி யேநான்
வெயில்போலென் றுறைத்தவனே விபுமா கர்த்தன். (24)

அறுசுவையின் குணங்குற்ற மசுத்தஞ் சுத்த
மபத்தியம்பத் தியமெனவூ ணாய்ந்தி டாமல்
பொறுமையுடன் கிட்டினதைக் காட்டுத் தீப்போற்
போகங்கள் புசிப்பவன்மா போகி யாகும்
சிறிதுபெரி துகடனதந் நியங்க ணன்மை
தீமைகள்சே ரினும்படிகச் செயல்போற் சித்தம்
வெறிதிருக்கு மவனேமாத் தியாகி யாவன்
விரதமிம்மூன் றுடையவரே வீடு ளோரே. (25)

மெய்யுங் கொண்டு பிராரத் தந்தரு விதிவழி நின்றிடவும்
உய்யுங் கர்மிக ளுக்கநு குணமா வுறுதொழில் செய்திடவும்
செய்யும் செய்கை முடிந்தவ னென்றுரை செப்புவ தெப்படியோ
நையுந் துன்ப மகற்றிய குருவே நலமா வருள்வீரே. (26)

ஆடவர் செய்தொழின் மூவகை யாகு மவித்தை வசத்துறுநாள்
ஏடணை மமதை யகந்தையு ளார்க்கே யிகபர விவகாரம்
வீடணு குவமெனு மிச்சையு ளார்க்கே வித்தை படிப்பதெலாம்
பாடன் மிகுந்தொழி லாற்பல னுண்டோ பரிபூ ரணமானால். (27)

சோகத்தை அறுத்து அருளும் குருவே ! இந்தத் துகள்
அறுக்க வேண்டும் என்று சொன்னாயாகில்,
மாகர்த்தன், மாபோகி, மாத்தியாகி
வகை மூன்றாய்,அவர் இருக்கு(ம்) மகிமை கேளாய். (23)

செய்கையும்,செய்விக்கையுமற்று இருக்கும்
காந்தச் சிலை மலை முன், இரும்புகள் சேட்டிக்குமா போல்,
செய்கையும் செய்விக்கையுமற்று இருக்கும் என் முன்,
செடமான உலகம் எ(ல்)லாம் சேட்டை செய்யும்;
மெய்கலந்த இந்திரிய, விகார ரூப,
விவகார விருத்திக்கும் விருத்தி தானா(ய்),
மெய் கலந்த சமாதிக்கும் சாட்சியே நான்;
வெயில் போல் என்று உறைத்தவனே, விபு மாகர்த்தன். (24)

அறுசுவையின் குணம்-குற்றம்,அசுத்தம்-சுத்தம்,
அபத்தியம்-பத்தியம் என ஊண் ஆய்ந்திடாமல்,
பொறுமையுடன் கிட்டினதை, காட்டுத் தீப் போல்,
போகங்கள் புசிப்பவன் மாபோகி ஆகும் ;
சிறிது-பெரிதுகள், தனது-அந்நியங்கள், நன்மை-
தீமைகள் சேரினும், படிகச் செயல்போல்,சித்தம்
வெறிது இருக்கும் அவனே, மாத்தியாகி ஆவன்;
விரதம் இம்மூன்று உடையவரே, வீடு(உள்)ளோரே. (25)

மெய்யும் கொண்டு, பிராரத்தம் தரு(ம்) விதி வழி நின்றிடவும்;
உய்யும் கர்மிகளுக்கு அநுகுணமா(ய்) உறுதொழில் செய்திடவும்;
செய்யும் செய்கை முடிந்தவன் என்று, உரை செப்புவது எப்படியோ?
நையும் துன்பம் அகற்றிய குருவே ! நலமா(ய்) அருள்வீரே. (26)

ஆடவர் செய்தொழில் மூவகையாகும்;அவித்தை வசத்து (உ)று நாள்;
ஏடணை, மமதை, அகந்தை உ(ள்)ளார்க்கே இக, பர விவகாரம்;
வீடு அணுகுவம் எனும் இச்சையுளார்க்கே, வித்தை படிப்பது எ(ல்)லாம்;
பாடல் மிகும் தொழிலால் பலனுண்டோ ? பரிபூரணமானால். (27)

குரவர் சிகாமணி யேகே ளிர்நீர் கூறின வழியொக்கும்
பரமுட னிகமு மிழந்தவ ரன்றோ பழகுவர் மெய்ஞ்ஞானம்
விரவு முயற்சியின் மீண்டவ ரதையினி வேண்டுவ ரோவேண்டார்
சிரவண மனனா திகள்வேண் டாவோ சித்த முறைத்திடவே. (28)

கிளர்மக னேகேள் தத்துவ மறியார் கேட்டல் செயக்கடனே
தளர்வறு சிந்தித் தலின்முயல் வார்சிலர் சந்தே கங்களுளார்
தெளிதலி னிற்பார் விபரீ தப்பேய் தீரா வாதனையோர்
வெளியுரு வாயறி வாய்நிறை வாயினர் வேண்டுவ தொன்றுண்டோ. (29)

ஐயா கேளீர் தத்துவ ஞானியு மஞ்ஞா னிகள்போலச்
செய்யா நின்றேன் கண்டே னுண்டேன் சென்றே னெனலாமோ
பொய்யாம் விபரீ தங்க ளவர்க்குப் போயின வென்றீரே
மெய்யாம் பிரம விசார மிதன்றே வெளியா வுரையீரே. (30)

ஓய்ந்த கனாவிற் கண்ட பழங்கதை யோதுவன் வாதனையால்
ஆய்ந்தறி வுற்றவ னப்படி செப்புவ னாபா சனுமாகான்
மாய்ந்ததன் னுடல்வே மளவும் விண்ணவன் மநுட னெனப்படுவான்
வீய்ந்தசி தாபா சன்போ மளவும் விவகாரந் தொடரும். (31)

ஆனா லையா குருவே காண்ப தசத்திய மென்றாலும்
நானா விவகா ரந்துய ரலவோ ஞான சுகந்தருமோ
போனா லன்றோ நன்றா நிட்டை பொருந்திடல் வேண்டாவோ
தானா நிட்டை புரிந்தாற் செய்கை தவிர்ந்தவ னெப்படியோ. (32)

தெரிதரு மகனே யாரம் பத்தொடு தீரும் விவகாரம்
உரிய தியானமும் விவகா ரங்களு முள்ளத் தொழிலன்றோ
துரிய பரம்பொரு ளானவர் வேறொரு தொழில்செய் வதுமுண்டோ
அரிய சமாதிகள் பழகுவ னேலவ னாரு டனுமன்றே. (33)

உத்தம குருவே யாரு டருமா யொருதொழி லற்றவருள்
சித்தம டங்கு தியானா திகள்சிலர் செய்குவ தென்னென்றால்
இத்தல மருவும் பிராரத் தப்பிரி வெப்படி யப்படியே
முத்தரும் வெகுவித மாகுவ ரென்பது முன்னே சொன்னேனே. (34)

குரவர் சிகாமணியே கேளீர் ! நீர் கூறின வழியொக்கும்;
பரமுடன் இகமும் இழந்தவர் அன்றோ ? பழகுவர் மெய்ஞ்ஞானம்;
விரவு முயற்சியில் மீண்டவர், அதை இனி வேண்டுவரோ?வேண்டார்;
சிரவண, மனனாதிகள் வேண்டாவோ? சித்தம் உறைத்திடவே. (28)

கிளர் மகனே கேள்! தத்துவம் அறியார் கேட்டல் செயக் கடனே;
தளர்வு அறு சிந்தித்தலின் முயல்வார் சிலர்;சந்தேகங்கள் உ(ள்)ளார்;
தெளிதலில் நிற்பார், விபரீதப் பேய் தீரா(து) வாதனையோர்;வெளிஉருவாய்,
அறிவாய் நிறைவாயினர்,வேண்டுவது ஒன்றுண்டோ ? (29)

ஐயா கேளீர்! தத்துவ ஞானியும், அஞ்ஞானிகள் போல,
செய்யா நின்றேன், கண்டேன், உண்டேன், சென்றேன் எனலாமோ?
பொய்யாம் விபரீதங்கள், அவர்க்குப் போயின என்றீரே!
மெய்யாம் பிரம விசாரம் இது அன்றே! வெளியா(ய்) உரையீரே. (30)

ஓய்ந்த கனாவில் கண்ட பழங்கதை, ஓதுவன் வாதனையால்,
ஆ(ரா)ய்ந்து,அறிவுற்றவன், அப்படி செப்புவன்;ஆபாசனுமாகான்;
மாய்ந்த தன் உடல் வே(கு)ம் அளவும்,விண்ணவன் மநுடன் எனப்படுவான்;
வீய்ந்த சிதாபாசன் போ(கு)ம் அளவும், விவகாரம் தொடரும் (31)

ஆனால் ஐயா, குருவே! காண்பது அசத்தியம் என்றாலும்,
நானா விவகாரம் துயர் அ(ல்)லவோ? ஞான சுகம் தருமோ?
போனால் அன்றோ நன்றா(ம்); நிட்டை பொருந்திடல் வேண்டாவோ?
தானா(ம்) நிட்டை புரிந்தால், செய்கை தவிர்ந்தவன் எப்படியோ ? (32)

தெரிதரு மகனே! ஆரம்பத்தொடு தீரும் விவகாரம்;
உரிய தியானமும், விவகாரங்களும், உள்ளத் தொழில் அன்றோ?
துரிய பரம் பொருளானவர், வேறொரு தொழில் செய்வதும் உண்டோ?
அரிய சமாதிகள் பழகுவனேல், அவன் ஆரூடனும் அன்றே! (33)

உத்தம குருவே! ஆரூடருமாய், ஒருதொழில் அற்றவருள்,
சித்தம் அடங்கு(ம்) தியானாதிகள், சிலர் செய்குவது என்? என்றால்,
இத்தல(ம்) மருவும் பிராரத்தப் பிரிவு எப்படி ?அப்படியே,
முத்தரும் வெகு விதம் ஆகுவர் என்பது, முன்னே சொன்னேனே. (34)

நல்லவ னேகே ளுலகுப காரம் ஞானிகள் விவகாரம்
அல்லது வேறொரு பெறுபே றும்மிலை யதனாற் பிணியுமிலை
வல்லசி ருட்டிமு தற்பல தொழிலால் வருபுண் ணியபாவம்
எல்லவ ருக்கும நுக்கிர கஞ்செயு மீசன டைந்திலனே. (35)

ஈசனு மாயரு வாயுரு வாகி யெழுந்தரு ளுங்குருவே
ஈசனு ஞானியு மொப்பென் றீரே யெப்படி யொப்பென்றால்
ஈசனு ஞானியு மமதைய கந்தை யிகந்ததி னாலொப்பாம்
ஈசனு மாம்பல சீவரு மாமுல கெல்லா மிவனாமே. (36)

எல்லாச் சீவரு மிவனா மென்றீ ரிவன்றான் முத்தியடைந்
தெல்லாச் சீவரு முத்திபெ றாமலி ருப்பா னேனையா
எல்லாச் சீவரும் வெவ்வே றானா லிவனெல் லாமலனே.
எல்லாப் பொருளு முரைத்தருள் குருவே யிதைநீர் மொழியீரே. (37)

அகமெனு மான்மா பூரண மேக மநேக விதஞ்சீவர்
அகமெனு மந்தக் கரணோ பாதிக ளளவிலை யாதலினால்
சகமுழு துங்குளிர் சந்திர னேகஞ் சலசந் திரர்பலராம்
சகமதி லேரி குளஞ்சிறு குழிசால் சட்டி குடம்பலவால். (38)

சட்டி குடங்களி லொன்று நசித்திடி னதினுட் சலசந்திரன்
ஒட்டு முதற்சந் திரனொடு கூடு மொழிந்தவை கூடாவே
கட்டு முபாதி நசித்திடு சீவன் காரண வான்மாவில்
கிட்டு மயிக்க முபாதி கெடாதவர் கேவல மாகாரே. (39)

இவனயன் மால்சிவ னாகிய வீசரொ டெப்படி யொப்பாவன்
சிவன்முதன் மூவரு மகில சிருட்டி திதிநா சங்கள் செய்வார்
அவர்பிறர் மதிகளு முக்கா லங்களு மறிவார் விபுவாவார்
தவமிகு குருவே யிவனுக் கவையிலொர் சற்றுங் காணேனே. (40)

தடத்து நீர்நிலாத் திரியொளி யுபயமுந் தழுவுமூர் தனைக்காக்கும்
குடத்து நீர்விளக் கினிலொளி யிரண்டுமோர் குடும்பமாத் திரங்காக்கும்
அடுத்த மைந்தனே ஞானியு மீசனு மறிவினாற் பிரிவில்லை
கெடுத்த மாயையின் குணாங்களான் மேலென்றுங் கீழென்றும் பிரிவாமே (41)

நல்லவனே கேள்! உலக உபகாரம், ஞானிகள் விவகாரம்;அல்லது
வேறொரு பெறுபேறும்இ(ல்)லை;அதனால் பிணியும் இ(ல்)லை;
வல்ல சிருட்டி முதல் பல தொழிலால்,வரு(ம்) புண்ணிய பாவம்,
எல்லவருக்கும் அநுக்கிரகம் செ(ய்)யும் ஈசன் அடைந்திலனே. (35)

ஈசனுமாய், அருவாய்,உருவாகி எழுந்தருளும் குருவே!
ஈசனும், ஞானியும் ஒப்பு என்றீரே! எப்படி ஒப்பு என்றால்,
ஈசனு(ம்) ஞானியும் மமதை ,அகந்தை இகந்ததினால் ஒப்பாம்;
ஈசனுமாம்,பல சீவருமாம்;உலகு எல்லாம் இவனாமே. (36)

எல்லாச் சீவரும் இவனாம் என்றீர்; இவன்தான் முத்தி அடைந்து
எல்லாச் சீவரும் முத்தி பெறாமல் இருப்பான் ஏன்? ஐயா!
எல்லாச் சீவரும் வெவ்வேறானால், இவன் எல்லாம் அ(ல்)லனே;
எல்லாப்பொருளும் உரைத்து அருள் குருவே! இதை நீர் மொழியீரே. (37)

அகம் எனும் ஆன்மா பூரணம், ஏகம்; அனேகவிதம் சீவர்;
அகம் எனும் அந்தக்கரண உபாதிகள்,அளவி(ல்)லை; ஆதலினால்,
சகம் முழுதும் குளிர் சந்திரன் ஏகம்; சல சந்திரர் பலராம்;
சகம் அதில் ஏரி, குளம், சிறு குழி,சால், சட்டி, குடம் பலவால். (38)

சட்டி குடங்களில் ஒன்று நசித்திடின், அதினுள் சல சந்திரன்,
ஒட்டு முதல் சந்திரனொடு கூடும்; ஒழிந்தவை கூடாவே;
கட்டும் உபாதி நசித்திடு(ம்) சீவன், காரண ஆன்மாவில்
கிட்டும் அயிக்கியம்; உபாதி கெடாதவர், கேவலம் ஆகாரே. (39)

இவன் அயன், மால்,சிவன் ஆகிய ஈசரொடு எப்படி ஒப்பு ஆவன்?
சிவன் முதல் மூவரும் அகில சிருட்டி, திதி,நாசங்கள் செய்வார்;
அவர் பிறர் மதிகளும், முக்காலங்களும் அறிவார்; விபு ஆவார்;
தவ(ம்)மிகு குருவே ! இவனுக்கு அவையில் ஓர் சற்றும் காணேனே. (40)

தடத்து நீர்,நிலாத் திரி ஒளி உபயமும், தழுவும் ஊர் தனைக் காக்கும்;
குடத்து நீர், விளக்கினில் ஒளி இரண்டும்,ஓர் குடும்ப(ம்) மாத்திரம் காக்கும்;
அடுத்த மைந்தனே! ஞானியும்,ஈசனும் அறிவினால் பிரிவு இல்லை;
கெடுத்த மாயையின் குணங்களால் மேலென்றும், கீழென்றும் பிரிவாமே. (41)

நரரின் மன்னனைச் சித்தரைப் போலவே நாரணன் முதலான
சுரர்கண் மாயைவல் லவரணி மாதிக டொக்கமா தவமிக்கோர்
தரணி மானுடர்க் கவைகளில் லாமையாற் றாழ்வுள ரானாலும்
பிரம பாவனை யாலிவ ரவரெனும் பேதமொன் றிலைபாராய். (42)

முத்தி நல்கிய சற்குரு வேபல முனிகளுக் கணிமாதி
சித்தி பூமியிற் கண்டிருக் கவுமந்தச் செல்வமீ சனதென்றீர்
புத்தி யொத்திட வுரைத்தரு ளென்றிடிற் புகழுமீ சனைநோக்கிப்
பத்தி செய்திடுந் தவத்தினா லியோகத்தாற் பலித்ததென் றறிவாயே. (43)

சிவசொ ரூபமாந் தேசிக மூர்த்தியே சித்திமுத் தியிரண்டும்
தவமு ளோரடை குவரெனி லவர்கள்போற் சகலரு மடைவாரே
அவர்கள் பூருவஞ் சித்தியு ஞானமு மடைந்ததுங் கண்டோமே
இவர்கண் ஞானிக ளென்றிடிற் சித்திக ளிவர்க்கிலா வகையேதோ. (44)

காமி யத்தவங் காமிய மொன்றையுங் கருதிடாத் தவமென்றும்
பூமி யிற்றவ மிருவகை சித்தியும் போதமுந் தருமைந்தா
ஆமி வற்றிலொன் றியற்றினா ரொன்றையே யடைகுவ ரிதுதீர்வை
யாமு ரைத்தவவ் விரண்டையு மியற்றினா ரன்றுள பெரியோரே. (45)

அனக மைந்தனே முத்திஞா னத்தையே யடைந்தன ரல்லாமல்
செனகன் மாபலி பகீரதன் முதலினோர் சித்திகள் படித்தாரோ
இனிய சித்தியே விரும்பினார் சிலர்சில ரிரண்டையு முயன்றாரம்
முனிவர் சித்திகள் வினோதமாத் திரந்தரு முத்தியைத் தாராவே (46)

யோக ஞானமே முத்தியைத் தருமெனி லொழிந்தசித் திகள்வேண்டி
மோக மாயுடல் வருந்தினார் சிலசில முத்தர்க ளேனென்றால்
போக மாய்வரும் பிராரத்த கர்மங்கள் புசித்தன்றோ நசித்தேகும்
ஆகை யாலந்தச் சித்திகள் பிராரத்த மாகுமென் றறிவாயே. (47)

இலக்க மாயிரஞ் சுருதியா லூகத்தா லென்மன மசையாமல்
பெலக்க வேண்டுமென் றருள்குரு வேயகப் பிராந்திபோய்த் தெளிவானேன்
துலக்க மானகண் ணாடியை யடிக்கடி துலக்கினாற் பழுதன்றே
அலக்கண் மாற்றிய தேவரீ ரெனக்குரை யமிர்தங்க டெவிட்டாவே. (48)

நரரில் மன்னனை,சித்தரைப் போலவே, நாரணன் முதலான சுரர்கள்
மாயை வல்லவர்; அணிமாதிகள் தொக்க மா தவ(ம்) மிக்கோர்;
தரணி மாநுடர்க்கு,அவைகள் இல்லாமையால்,தாழ்வுளர்; ஆனாலும்,
பிரம பாவனையால் இவர், அவர் எனும் பேதம்,ஒன்றி(ல்)லை பாராய். (42)

முத்தி நல்கிய சற்குருவே ! பல முனிகளுக்கு அணிமாதி சித்தி,
பூமியில் கண்டிருக்கவும், அந்தச் செல்வம் ஈசனது என்றீர்;
புத்தி ஒத்திட உரைத்து, அருள் என்றிடில், புகழும் ஈசனை நோக்கி,
பத்தி செய்திடும் தவத்தினால், யோகத்தால் பலித்தது என்று அறிவாயே. (43)

சிவ சொரூபமாம் தேசிக மூர்த்தியே ! சித்தி, முத்தி இரண்டும்,
தவமுளோர் அடைகுவர் எனில்,அவர்கள் போல் சகலரும் அடைவாரே!
அவர்கள் பூருவம் சித்தியும், ஞானமும் அடைந்ததும் கண்டோமே;
இவர்கள் ஞானிகள் என்றிடில்,சித்திகள் இவர்க்கு இ(ல்)லா வகை ஏதோ ? (44)

காமியத் தவம்,காமியம் ஒன்றையும் கருதிடாத் தவம் என்றும்
பூமியில் தவம் இருவகை;சித்தியும்,போதமும் தரு(ம்) மைந்தா!
ஆம்!இவற்றில் ஒன்று இயற்றினார், ஒன்றையே அடைகுவர்; இது தீர்வை;
யாம் உரைத்த, அவ்விரண்டையும் இயற்றினார்,அன்றுள பெரியோரே.(45)

அனக மைந்தனே! முத்தி ஞானத்தையே அடைந்தனர் அல்லாமல்,
செனகன்,மாபலி,பகீரதன் முதலினோர் சித்திகள் படித்தாரோ?
இனிய சித்தியே விரும்பினார் சிலர்;சிலர் இரண்டையும் முயன்றார்;
அம்முனிவர் சித்திகள் வினோத(ம்) மாத்திரம் தரு(ம்); முத்தியைத் தாராவே. (46)

யோக ஞானமே முத்தியைத் தரும் எனில், ஒழிந்த சித்திகள் வேண்டி,
மோகமாய் உடல் வருந்தினார், சில சில முத்தர்கள்; ஏனென்றால்,
போகமாய் வரும் பிராரத்த கர்மங்கள்,புசித்தன்றோ நசித்து ஏகும்;
ஆகையால்,அந்த சித்திகள் பிராரத்தமாகும் என்று அறிவாயே. (47)

இலக்கம் ஆயிரம் சுருதியால், ஊகத்தால், என் மனம் அசையாமல்
பெலக்க வேண்டும்; என்று அருள் குருவே! அகப் பிராந்தி போய்த் தெளிவு ஆனேன்;
துலக்கமான கண்ணாடியை,அடிக்கடி துலக்கினால் பழுதன்றே;
அலக்கண் மாற்றிய தேவரீர்! எனக்கு உரை அமிர்தங்கள்,தெவிட்டாவே. (48)

கைத வங்களைச் சாத்திரஞ் சொல்லுமோ கருணையா லெனையாளும்
ஐய னேகுரு வேயெவ ராகிலு மநுபவித் தாலன்றிச்
செய்த கர்மங்கள் விடாவென்ற வசனமுஞ் சென்மசஞ் சிதம்வேவத்
துய்ய ஞானத்தீச் சுடுமென்ற வசனமுந் துணிவதெப் படிநானே. (49)

சீவ பேதங்க ளளவிலை மைந்தனே செய்கையு மளவில்லை
ஆவ வாமவ ரவரதி காரங்க ளறிந்துபக் குவநோக்கிப்
பூவ லர்ந்துபின் பலங்கள்காட் டுவனபோற் பூருவஞ் சித்தாந்தம்
காவல் வேதங்க ளிரண்டையும் வசனிக்குங் காண்டமூ வகையாலே.(50)

ஆன பாவிக ளடைவன நரகங்க ளவசிய மானாலும்
தான மந்திர விரதவோ மங்களாற் றவிருமென் பதுபொய்யோ
ஈன மாம்பல சன்மசஞ் சிதவினை யெத்தனை யானாலும்
ஞான மாங்கனல் சுடுமென்ற மறைமொழி நம்பினால் வீடுண்டே. (51)

என்ம னந்திருக் கோயிலாத் தினங்குடி யிருந்தருள் குருமூர்த்தி
சென்ம சஞ்சித வினைகள்வே ரறுத்திடுந் தேவரீர் மெய்ஞ்ஞானம்
தன்ம யந்தரு மகிமையை விபுதராஞ் சமர்த்தரு மறியாமல்
கன்ம மாங்குழி யினில்விழுந் தழிகின்ற காரண முரையீரே. (52)

அழிவி லாததற் பதந்தனை மைந்தனே யகமுகத் தவர்சேர்வர்
வழிந டப்பவர் பராமுக மாயினான் மலர்ந்தகண் ணிருந்தாலும்
குழியில் வீழ்வர்கா ணப்படி வெளிமுகங் கொண்டுகா மிகளானோர்
பழித ரும்பிற விக்கட லழுந்துவர் பரகதி யடையாரே. (53)

சிறந்த நன்மையுந் தீமையு மீசனார் செய்விக்குஞ் செயலன்றோ
பிறந்த சீவர்க ளென்செய்வ ரவர்கண்மேற் பிழைசொலும் வழியேதோ
துறந்த தேசிக மூர்த்தியே யென்றிடிற் சுருதிநூற் பொருண்மார்க்கம்
மறந்த மூடர்கள் வசனிக்கும் பிராந்திகாண் மைந்தனே யதுகேளாய். (54)

திகழ்ந்த வீசனார் சிருட்டியுஞ் சீவனார் சிருட்டியும் வெவ்வேறே
சகந்த னிற்பொது வீசனார் சிருட்டிகள் சராசரப் பொருளெல்லாம்
அகந்தை யாமபி மானங்கள் கோபங்க ளாசைக ளிவையெல்லாம்
இகழ்ந்த சீவனார் சிருட்டிக ளாகுங்கா ணீசனார் செயலன்றே. (55)

கைதவங்களைச் சாத்திரம் சொல்லுமோ?கருணையால்,எனை ஆளும்
ஐயனே !குருவே! எவராகிலும் அனுபவித்தால் அன்றி,
செய்த கர்மங்கள் விடா(து) என்ற வசனமும்,சென்ம சஞ்சிதம் வேவ,
துய்ய ஞானத் தீச் சுடும் என்ற வசனமும், துணிவது எப்படி? நானே. (49)

சீவ பேதங்கள் அளவி(ல்)லை; மைந்தனே! செய்கையும் அளவில்லை;
ஆவவாம் அவரவர் அதிகாரங்கள் அறிந்து, பக்குவ(ம்) நோக்கி,
பூ அலர்ந்து,பின் பலங்கள் காட்டுவன போல் பூருவம்,சித்தாந்தம்,
காவல் வேதங்கள் இரண்டையும் வசனிக்கும்; காண்ட(ம்) மூவகையாலே.(50)

ஆன பாவிகள் அடைவன நரகங்கள் அவசியம்; ஆனாலும்
தான,மந்திர, விரத, ஓமங்களால் தவிரும்;என்பது பொய்யோ?
ஈனமாம், பல சன்ம சஞ்சித வினை எத்தனையானாலும்,
ஞானமாம் கனல் சுடும்,என்ற மறை மொழி நம்பினால்,வீடு (உ)ண்டே (51)

என் மனம் திருக்கோயிலா(ய்), தினம் குடியிருந்து,அருள் குருமூர்த்தி
சென்ம சஞ்சித வினைகள் வேர்,அறுத்திடும் தேவரீர் மெய்ஞ்ஞானம்,
தன்மயம் தரு(ம்) மகிமையை, விபுதராம் சமர்த்தரும் அறியாமல்,
கன்மமாம் குழியினில் விழுந்து, அழிகின்ற காரணம் உரையீரே. (52)

அழிவிலாத தத்பதம் தனை, மைந்தனே! அகமுகத்தவர் சேர்வர்;
வழி நடப்பவர் பராமுகம் ஆயினால், மலர்ந்த கண் இருந்தாலும்,
குழியில் வீழ்வர் காண்; அப்படி வெளிமுகம் கொண்டு,காமிகள் ஆனோர்,
பழி தரும் பிறவிக் கடல் அழுந்துவர்; பரகதி அடையாரே. (53)

சிறந்த நன்மையும்- தீமையும், ஈசனார் செய்விக்கும் செயலன்றோ?
பிறந்த சீவர்கள் என்செய்வர்? அவர்கள்மேல் பிழைசொலும் வழி ஏதோ?
துறந்த தேசிக மூர்த்தியே!என்றிடில்,சுருதி,நூல் பொருள்,மார்க்கம்
மறந்த மூடர்கள் வசனிக்கும் பிராந்தி காண்; மைந்தனே!அது கேளாய். (54)

திகழ்ந்த ஈசனார் சிருட்டியும்,சீவனார் சிருட்டியும்,வெவ்வேறே;
சகம் தனில் பொது ஈசனார் சிருட்டிகள்,சராசரப் பொருளெல்லாம்;
அகந்தையாம்,அபிமானங்கள்,கோபங்கள்,ஆசைகள் இவை எல்லாம்,
இகழ்ந்த சீவனார் சிருட்டிகளாகும் காண்; ஈசனார் செயலன்றே. (55)

மூவ ராம்பரன் சிருட்டிக ளுயிர்க்கெலா முத்திசா தனமாகும்
சீவ னார்செயுஞ் சிருட்டிக டங்களைச் செனிப்பிக்கும் பிணியாகும்
தாவ ராதிக ணசித்திடி லொருவர்க்குஞ் சனனங்க ணசியாவாங்
கோப மாதிக ணசித்திடிற் பந்தமாங் கொடும்பிற விகள்போமே. (56)

ஈசர் காரியம் பிரளயத் தொழியவு மெவர்பவ மொழிந்தார்கள்
தேச காலதே காதிக ளிருக்கவுஞ் சீவகா ரியமோகம்
நாச மாக்கிய விவேகத்தி னுயிரொடு ஞானமுத் தர்களானார்
பாச மோகங்கள் பசுக்களின் செயலன்றிப் பசுபதி செயலன்றே. (57)

அச்சு வத்தமென் றொருமர மதிலிரண் டரும்பற வைகள்வாழும்
நச்சு மங்கொரு பறவையம் மரக்கனி நன்றுநன் றெனத்தின்னும்
மெச்சு மங்கொரு பறவைதின் னாதென வியங்கியப் பொருளாக
வைச்சு மாமறை சீவனை யீசனை வகுத்தவா றறிவாயே. (58)

இந்தச் சீவனால் வருமறு பகையெலா மிவன்செய லென்னாமல்
அந்தத் தேவனால் வருமென்ற மூடர்க ளதோகதி யடைவார்கள்
இந்தச் சீவனால் வருமறு பகையெலா மிவன்செய லல்லாமல்
அந்தத் தேவனா லன்றெனும் விவேகிக ளமலவீ டடைவாரே. (59)

நலமெய் யையனே யெல்லவர்க் குந்தெய்வ நாயகன் பொதுவானால்
சிலரை வாழ்வித்தல் சிலரொடு கோபித்தல் செய்வதே னென்றாயேல்
குலவு மக்களைத் தந்தைபோற் சிட்டரைக் குளிர்ந்துதுட் டரைக்காய்வன்
கலைக ணல்வழி வரச்செயுந் தண்டமுங் கருணையென் றறிவாயே. (60)

மனைவி லங்கறு மைந்தனே கற்பக மரங்கனல் புனன்மூன்றும்
தனைய டைந்தவர் வறுமையுஞ் சீதமுந் தாகமுந் தவிர்த்தாளும்
அனைய வீசனு மடைந்தவர்க் கருள்செய்வ னகன்றவர்க் கருள்செய்யான்
இனைய குற்றங்க ளெவர்குற்ற மாகுமென் றெண்ணிநீ அறிவாயே. (61)

ஒன்று கேண்மக னேபுமான் முயற்சியா லுறைத்துமா நுடர்க்கீசன்
நன்று செய்யவே காட்டிய நூல்வழி நடந்துநல் லவர்பின்னே
சென்று துட்டவா தனைவிட்டு விவேகராய்ச் செனித்தமா யையைத்தள்ளி
நின்று ஞானத்தை யடைந்தவர் பவங்கள்போ நிச்சய மிதுதானே. (62 )

மூவராம் பரன் சிருட்டிகள்,உயிர்க்கு எ(ல்)லா(ம்) முத்தி சாதனமாகும்;
சீவனார் செயும் சிருட்டிகள், தங்களைச் செனிப்பிக்கும் பிணியாகும்;
தாவராதிகள் நசித்திடில், ஒருவர்க்கும் சனனங்கள் நசியாவாம்;
கோபமாதிகள் நசித்திடில், பந்தமாம் கொடும் பிறவிகள் போமே. (56)

ஈசர் காரியம், பிரளயத்து ஒழியவும், எவர் பவம் ஒழிந்தார்கள்?
தேச,கால,தேகாதிகள் இருக்கவும், சீவ காரிய மோகம்,
நாசம் ஆக்கிய விவேகத்தின், உயிரொடு ஞான முத்தர்களானார்;
பாச மோகங்கள், பசுக்களின் செயலன்றி,பசுபதி செயலன்றே. (57)

அச்சுவத்தம் என்று ஒரு மரம்; அதில் இரண்டு அரும் பறவைகள் வாழும்;
நச்சும் அங்கொரு பறவை,அம்மரக் கனி நன்று நன்று எனத் தின்னும்;
மெச்சும் அங்கொரு பறவை தின்னாது, என வியங்கிய பொருளாக
வைச்சு, மாமறை சீவனை,ஈசனை வகுத்தவாறு அறிவாயே. (58)

இந்தச் சீவனால் வரும் அறுபகை எ(ல்)லாம்,இவன் செயல் என்னாமல்,
அந்தத் தேவனால் வரும்;என்ற மூடர்கள் அதோகதி அடைவார்கள்;
இந்தச் சீவனால் வரும் அறு பகை எ(ல்)லாம் இவன்செயல் அல்லாமல்,
அந்தத் தேவனால் அன்று எனும் விவேகிகள் அமல வீடு அடைவாரே. (59)

நல(ம்) மெய் ஐயனே! எல்லவர்க்கும் தெய்வ நாயகன் பொதுவானால்,
சிலரை வாழ்வித்தல், சிலரொடு கோபித்தல் செய்வது ஏன்?என்றாயேல்,
குலவு மக்களை,தந்தை போல் சிட்டரைக் குளிர்ந்து,துட்டரைக் காய்வன்;
கலைகள் நல்வழி வரச்செயும் தண்டமும்,கருணை என்று அறிவாயே. (60)

மனை விலங்கு அறு மைந்தனே! கற்பக மரம்,கனல்,புனல் மூன்றும்,
தனை அடைந்தவர் வறுமையும்,சீதமும், தாகமும் தவிர்த்து ஆளும்;
அனைய ஈசனும் அடைந்தவர்க்கு,அருள் செய்வன்; அகன்றவர்க்கு அருள் செய்யான்;
இனைய குற்றங்கள் எவர் குற்றமாகும்?என்று எண்ணி நீ அறிவாயே. (61)

ஒன்று கேள் மகனே!புமான் முயற்சியால் உறைத்து,மானுடர்க்கு ஈசன்
நன்று செய்யவே,காட்டிய நூல்வழி நடந்து,நல்லவர் பின்னே சென்று,
துட்டவாதனை விட்டு,விவேகராய்,செனித்த மாயையைத் தள்ளி,
நின்று ஞானத்தை அடைந்தவர் பவங்கள் போ(ம்); நிச்சயம் இதுதானே. (62)

இந்த ஞானந்தான் வருவதெப் படியெனி லிடைவிடா விசாரத்தால்
வந்த டைந்திடும் விசாரந்தா னேதெனின் மனாதியாஞ் சரீரத்தில்
இந்த நானெவன் சித்தெது சடமெது விரண்டுமொன் றாக்கூடும்
பந்த மேதுவீ டேதென வுசாவுதல் பகர்விசா ரமதாகும். (63)

போன சன்மங்க டமிலநுட் டித்தநற் புண்ணிய பரிபாகம்
ஞான மாக்குமே விசாரமே னென்றிடி னாமுரைத் திடக்கேளாய்
ஆன புண்ணிய மீசுரார்ப் பணஞ்செயி னசுசிபோஞ் சுசியாகும்
மான தம்பினை விசாரித்து ஞானத்தை மருவுமென் றறிவாயே. (64)

பத்தி யும்வயி ராக்கிய மும்பர லோகமு மணிமாதி
சித்தி யுந்தவ நிட்டையும் யோகமுந் தியானமுஞ் சாரூப
முத்தி யுந்தரும் விசித்திர கருமங்கண் மோகமாத் திரந்தள்ளும்
புத்தி தந்திட லருமையோ விசாரமேன் புண்ணிய குருமூர்த்தி. (65)

வேட மாறிய பேர்களை யறியவே வேண்டினான் மகனேகேள்
கூட மாமவர் சுபாவங்கள் சீலங்கள் குறிகளாய்ந் தறியாமல்
ஓடி யுங்குதித் துந்தலை கீழ்நின்று முயர்ந்தகம் பத்தேறி
ஆடி யும்பல கருமங்கள் செய்யினு மவருண்மை தெரியாதே. (66)

இன்ன வாறந்தப் பிரமத்தை யறிவிக்கு மிலக்கணத் தால்வேதம்
சொன்ன ஞானமும் விசாரத்தால் வருமன்றிச் சுருதிநூல் படித்தாலும்
அன்ன தானங்க டவங்கண்மந் திரங்களா சாரங்கள் யாகங்கள்
என்ன செய்யினுந் தன்னைத்தா னறிகின்ற திவைகளால் வாராதே.(67)

துளங்கு தர்ப்பண மழுக்கறக் கைக்கொண்டு துலக்கினாற் போமன்றி
விளங்கு புத்தியா லுலகிலார் துலக்கினார் விமல தேசிகமூர்த்தி
களங்க மாகுமஞ் ஞானமு மப்படிக் கருமத்தாற் கழுவாமல்
உளங்கு றித்தஞா னத்தினா லெப்படி யொழியுமீ தருள் வீரே. (68)

தர்ப்ப ணத்தினிற் களிம்புவாஸ் தவமலஞ் சகசமா தலின்மைந்தா
கற்ப ளிங்கினிற் கருநிறஞ் சகசமாக் கறுத்த தன்றாரோபம்
தர்ப்ப ணத்தினி லழுக்கற வேண்டினாற் சாதனத் தொழில்வேண்டும்
கற்ப ளிங்கிலா ரோபமே கறுப்பென்று கண்டிட மனம்போதும். (69)

இந்த ஞானந் தான் வருவது எப்படியெனில்? இடைவிடா விசாரத்தால்
வந்து அடைந்திடும்; விசாரந்தான் ஏதெனில்?மனாதியாம் சரீரத்தில்,
இந்த நான் எவன்?சித்து எது?சடம் எது?இரண்டும் ஒன்றாக் கூடும்
பந்தம் ஏது? வீடு ஏது?என உசாவுதல் பகர் விசாரம் அது ஆகும். (63)

போன சன்மங்கள் தமில்,அனுட்டித்த நற்புண்ணிய பரிபாகம்,
ஞானமாக்குமே! விசாரம் ஏன்?என்றிடில், நாம் உரைத்திடக் கேளாய்;
ஆன புண்ணியம், ஈசுரார்ப்பணம் செயின்,அசுசி போம்,சுசியாகும்;
மானதம் பி(ன்)னை விசாரித்து, ஞானத்தை மருவும் என்று அறிவாயே. (64)

பத்தியும், வயிராக்கியமும், பரலோகமும், அணிமாதி சித்தியும்,
தவ நிட்டையும், யோகமும், தியானமும், சாரூப முத்தியும்
தரும் விசித்திர கருமங்கள்; மோக(ம்) மாத்திரம் தள்ளும்,புத்தி தந்திடல்
அருமையோ ?விசாரம் ஏன்? புண்ணிய குருமூர்த்தி. (65)

வேட(ம்) மாறிய பேர்களை அறியவே வேண்டினால், மகனே,கேள்!
கூடமாம் அவர் சுபாவங்கள்,சீலங்கள்,குறிகள், ஆய்ந்து அறியாமல்,
ஓடியும், குதித்தும், தலை கீழ் நின்றும், உயர்ந்த கம்பத்து ஏறி ஆடியும்,
பல கருமங்கள் செய்யினும், அவர் உண்மை தெரியாதே. (66)

இன்னவாறு, அந்தப் பிரமத்தை அறிவிக்கும் இலக்கணத்தால், வேதம்
சொன்ன ஞானமும் விசாரத்தால் வருமன்றி, சுருதி நூல் படித்தாலும்,
அன்ன தானங்கள், தவங்கள்,மந்திரங்கள், ஆசாரங்கள்,யாகங்கள்
என்ன செய்யினும்,தன்னைத் தான் அறிகின்றது இவைகளால் வாராதே. (67)

துளங்கு தர்ப்பணம் அழுக்கு அற,கைக்கொண்டு துலக்கினால் போம்;
அன்றி,விளங்கு புத்தியால் உலகில் யார் துலக்கினார்?விமல தேசிக
மூர்த்தி;களங்கமாகும் அஞ்ஞானமும்,அப்படிக் கருமத்தால் கழுவாமல்,
உளம் குறித்த ஞானத்தினால் எப்படி ஒழியும்? ஈது அருளுவீரே. (68)

தர்ப்பணத்தினில்,களிம்பு வாஸ்தவ மலம் சகசம்;ஆதலின் மைந்தா,
கற்பளிங்கினில் கருநிறம், சகசமாக் கறுத்தது அன்று, ஆரோபம்;
தர்ப்பணத்தினில் அழுக்கற வேண்டினால், சாதனத் தொழில் வேண்டும்;
கற்பளிங்கில் ஆரோபமே கறுப்பென்று கண்டிட, மனம் போதும். (69)

இங்கு மப்படிச் சச்சிதா நந்தத்தி லிடர்சடம் பொய்மூன்றும்
தங்கு மாயையின் கற்பித மன்றியே சகசவாஸ் தவமன்றே
பங்க மாகுமஞ் ஞானத்தைக் கருமங்கள் பகைசெயா துறவாக்கும்
துங்க ஞானமே கருமவஞ் ஞானத்தைச் சுடுகின்ற நெருப்பாமே. (70)

மனைக்குள் வைத்தபண் டங்களை மறந்தவன் வருடநூ றமுதாலும்
நினைத்து ணர்ந்தபின் கிட்டுமப் படியிந்த நின்மல வான்மாவும்
அனர்த்த மானதன் மறதியைக் கெடுத்துத்தன் னறிவினாற் காணாமல்
கனத்த கர்மங்க ளூறுகஞ் செய்யினுங் காணுமோ காணாதே. (71)

நன்மை யாங்குரு வேசுகந் தருவது ஞானமே யெனும்வேதம்
தன்ம பாவமிச் சிரங்களாற் றேவர்க டருவிலங் குகண்மாந்தர்
சென்ம மாகுவ சாதியா சாரமே செய்தவஞ் சுகமென்று
கன்ம காண்டத்தில் விதித்ததென் விதித்துள காரண முரையீரே. (72)

தினமு மண்ணுகர் பிள்ளைநோய்க் கிரங்கியே தீம்பண்ட மெதிர்காட்டிக்
கன மருந்துக ளொளித்துவைத் தழைக்கின்ற கருணைநற் றாய்போல
மனைய றங்கள்செய் மகங்கள்செய் நன்றென்று மலர்ந்தவா சகஞ்சொல்லும்
நினைவு வேறுகாண் சுவர்க்ககா மிகளந்த நிண்ணயந் தெரியாரே.(73)

போக மாருயிர் கண்டதை யுண்பதும் புணர்வது மியல்பேகாண்
ஆக மங்களுஞ் சுபாவத்தை விதிக்குமோ வத்தனை தெரியாதோ
காக மேகறுத் திடுநெருப் பேசுடு கசந்திடு வேம்பேநீ,
வேக வாயுவே யசையென வொருவரும் விதித்திடல் வேண்டாவே(74)

கள்ளு மூனுநீ விரும்பினான் மகங்கள்செய் காமத்தின் மனதானால்
கொள்ளும் பெண்டொடு கலவிசெய் யெனிலிவன் குறையெலாந் தொடானென்றே
தள்ளும் வேதத்தின் சம்மதஞ் சகலமுந் தவிர்வதே கருத்தாகும்
விள்ளு மிவ்விதி யென்னெனிற் பூருவ நியமமாம் விதியன்றே (75)

மதுவி றைச்சிக ளுண்ணென்ற சுருதிபின் மணந்துபா ரெனல்பாராய்,
மிதுன விச்சையும் புத்திரோற் பத்தியால் விரும்பென்ற விதிபாராய்,
இதையும் விட்டொழி யதிநயிட் டிகவந்நிக் கிகழ்ச்சியற் றதும்பாராய்,
அதைய றிந்துகன் மங்களா சைகளொழிந் தாநந்த மடைவாயே. (76)

இங்கும் அப்படிச் சச்சிதாநந்தத்தில் இடர்,சடம்,பொய் மூன்றும்;
தங்கு மாயையின் கற்பிதம் அன்றியே, சகச வாஸ்தவ மன்றே;
பங்கமாகும் அஞ்ஞானத்தை,கருமங்கள் பகை செயாது;உறவாக்கும்;
துங்க ஞானமே,கரும அஞ்ஞானத்தைச் சுடுகின்ற நெருப்பாமே. (70)

மனைக்குள் வைத்த பண்டங்களை மறந்தவன்,வருட(ம்) நூறு அழுதாலும்,
நினைத்து உணர்ந்த பின்,கிட்டும்;அப்படி இந்த நின்மல ஆன்மாவும்,
அனர்த்தமான தன் மறதியைக் கெடுத்து,தன் அறிவினால் காணாமல் ,
கனத்த கர்மங்கள் நூறு (யு)கம் செய்யினும் காணுமோ ?காணாதே. (71)

நன்மையாம் குருவே! சுகம் தருவது ஞானமே எனும் வேதம்;
தன்ம, பாவ,மிச்சிரங்களால் தேவர்கள் ,தரு,விலங்குகள்,மாந்தர்
சென்மமாகுவ; சாதி,ஆசாரமே செய் தவம் சுகம் என்று,கன்ம
காண்டத்தில் விதித்தது என்? விதித்து(ள்)ள காரணம் உரையீரே. (72)

தினமு(ம்) மண் நுகர் பிள்ளை நோய்க்கு இரங்கியே, தீம் பண்டம் எதிர் காட்டி,
கன மருந்துகள் ஒளித்து வைத்து அழைக்கின்ற, கருணை நற்றாய் போல,
மனை அறங்கள் செய்,மகங்கள் செய், நன்று என்று மலர்ந்த வாசகம் சொல்லும்;
நினைவு வேறு காண்;சுவர்க்க காமிகள் அந்த நிண்ணயம் தெரியாரே. (73)

போகம் ஆருயிர் கண்டதை உண்பதும் ,புணர்வதும் இயல்பே காண்;
ஆகமங்களும் சுபாவத்தை விதிக்குமோ?அத்தனை தெரியாதோ;
காகமே கறுத்திடு; நெருப்பே சுடு; கசந்திடு வேம்பே, நீ
வேக வாயுவே அசை என; ஒருவரும் விதித்திடல் வேண்டாவே. (74)

கள்ளும் ஊனு(ம்) நீ விரும்பினால், மகங்கள் செய்; காமத்தின் மனதானால்,
கொள்ளும் பெண்டொடு கலவி செய் எனில், இவன் குறையெலாம் தொடான்
என்றே தள்ளும், வேதத்தின் சம்மதம்; சகலமும் தவிர்வதே கருத்தாகும்;
விள்ளும் இவ்விதி என்ன? எனில், பூருவ நியமமாம் விதியன்றே. (75)

மது,இறைச்சிகள் உண் என்ற சுருதி, பின் மணந்து பார் எனல் பாராய்;
மிதுன இச்சையும், புத்திர உற்பத்தியால் விரும்பு, என்ற விதி பாராய்;
இதையும் விட்டு ஒழி அதி நயிட்டிக வன்னிக்கு,இகழ்ச்சியற்றதும் பாராய்;
அதை அறிந்து, கன்மங்கள்,ஆசைகள் ஒழிந்து,ஆனந்தம் அடைவாயே.(76)

உலக மானவஞ் ஞானமுங் கருமமு முறவென்ற வழிகூடும்
பலவு மானவஞ் ஞானமு ஞானமும் பகையென்ப துளதானால்
நிலவி லேமறுப் போலவஞ் ஞானமு நிமலஞா னத்தோடே
குலவி நின்றிந்தச் சிருட்டிகள் செய்யவுங் கூடுமோ குருமூர்த்தி. (77)

சொரூப ஞானமும் விருத்திஞா னமுமென்று சோதிஞானமு மிரண்டாம்
சொரூப ஞானமே விருத்தியின் ஞானமாய்த் தோன்றும்வே றிலைமைந்தா
சொரூப ஞானமஞ் ஞானசத் துருவன்று சுழுத்தியிற் கண்டாயே,
சொரூப ஞானத்தின் மருவுமஞ் ஞானத்தைச் சுடும்விருத் தியின் ஞானம். (78)

துருத்தி மாயையைச் சுழுத்தியிற் சுடாததற் சொரூபஞா னந்தானே
விருத்தி ஞானமாய்ச் சுட்டதெப் படியெனில் வெய்யிலா லுலகெங்கும்
பரித்த சூரியன் சூரிய காந்தத்திற் பற்றியக் கினியாகி
எரித்த வாறுபோற் சமாதியில் விருத்தியா லெரிக்குமென் றறிவாயே. (79)

அருளு மையனே திரிவித கரணத்தா லாகிய தொழிலெல்லாம்
கரும மல்லவோ விருத்திஞா னமுமந்தக் கரணகா ரியமன்றோ
உரிய கர்மமஞ் ஞானத்தைக் கெடுக்குமென் றோதினா லாகாதோ
பெரிய ஞானமென் றதற்கொரு பெயரிட்ட பெருமையை யுரையீரே. (80)

விருத்தி ஞானமந் தக்கர ணத்தொடு விருத்தியா கிலுமைந்தா
ஒருத்தி மக்களே தங்களிற் பகைக்கின்ற துலகெங்குங் கண்டோமே
கருத்த னாகிய புருடதந் திரங்களாங் கருமங்க ளவைபோல
வருத்த ஞானமோ புருடதந் திரமன்று வஸ்துதந் திரமாமே. (81)

வகுத்த கர்மங்கள் செய்யவுந் தவிரவு மற்றொன்றாக் கவுங்கூடும்
மிகுத்த ஞானமப் படியன்று தியானமும் விவேகஞா னமும்வேறே
செகத்தி லொன்றையொன் றாவிவன் பாவிக்குந் தியானங்கற் பிதயோகம்
முகத்த மாக்கண்ட ஞானமே வாஸ்தவ மோகமாய் மயங்காதே. (82)

கண்ட றிந்தது ஞானங்கேட் டதுதனைக் கருதுபா வனையோகம்
கண்ட பேர்சொலக் கேட்டது மறந்துபோங் கண்டது மறவாதே
கண்ட வஸ்துமெய் தியானவஸ் துக்கள்பொய் கருவியஞ் ஞானத்தைக்
கண்ட வக்கணங் கொல்வது ஞானமே கருமமன் றறிவாயே. (83)

உலகமான அஞ்ஞானமும், கருமமும் உறவு என்ற வழி கூடும்;
பலவுமான அஞ்ஞானமு(ம்),ஞானமும் பகை என்பது உளதானால்,
நிலவிலே மறுப் போல, அஞ்ஞானமு(ம்) நிமல ஞானத்தோடே,
குலவி நின்று, இந்தச் சிருட்டிகள் செய்யவும் கூடுமோ?குருமூர்த்தி! (77)

சொரூப ஞானமும் ,விருத்தி ஞானமும் என்று, சோதி ஞானமும் இரண்டாம்;
சொரூப ஞானமே,விருத்தியின் ஞானமாய்த் தோன்றும்; வேறு இ(ல்)லை; மைந்தா!
சொரூப ஞானம் அஞ்ஞான சத்துரு அன்று;சுழுத்தியில் கண்டாயே;
சொரூப ஞானத்தில் மருவும் அஞ்ஞானத்தைச் சுடும் விருத்தியின் ஞானம். (78)

துருத்தி மாயையைச் சுழுத்தியில் சுடாத, தற்சொரூப ஞானந்தானே,
விருத்தி ஞானமாய்ச் சுட்டது எப்படியெனில் ? வெயிலால் உலகெங்கும்
பரித்த சூரியன்,சூரிய காந்தத்தில் பற்றி அக்கினியாகி,எரித்தவாறு போல்,
சமாதியில்,விருத்தியால் எரிக்கும் என்று அறிவாயே. (79)

அருளும் ஐயனே! திரிவித கரணத்தாலாகிய தொழில் எல்லாம்,
கருமம் அல்லவோ? விருத்தி ஞானமும்,அந்தக்கரண காரியமன்றோ;
உரிய கர்மம்,அஞ்ஞானத்தைக் கெடுக்கும் என்று ஓதினால் ஆகாதோ;
பெரிய ஞானம் என்று, அதற்கு ஒரு பெயரிட்ட பெருமையை உரையீரே.(80)

விருத்தி ஞானம்,அந்தக்கரணத்தொடு விருத்தியாகிலு(ம்) மைந்தா;
ஒருத்தி மக்களே தங்களில் பகைக்கின்றது,உலகு எங்கும் கண்டோமே;
கருத்தனாகிய புருட தந்திரங்களாம் கருமங்கள் அவை போல,
வருத்த ஞானமோ புருட தந்திரமன்று; வஸ்து தந்திரமாமே. (81)

வகுத்த கருமங்கள் செய்யவும்,தவிரவும்,மற்றொன்றாக்கவும் கூடும்;
மிகுத்த ஞானம் அப்படியன்று;தியானமும்,விவேக ஞானமும் வேறே;
செகத்தில் ஒன்றை ஒன்றா(ய்), இவன் பாவிக்கும் தியானம் கற்பிதயோகம்;
முகத்தமாக் கண்ட ஞானமே வாஸ்தவம்; மோகமாய் மயங்காதே. (82)

கண்டுஅறிந்தது ஞானம், கேட்டதுதனைக் கருது பாவனை யோகம்;
கண்டபேர் சொ(ல்)லக் கேட்டது மறந்து போம்; கண்டது மறவாதே;
கண்ட வஸ்து மெய்; தியான வஸ்துக்கள் பொய்; கருவி,அஞ்ஞானத்தைக்
கண்ட அக்கணம் கொல்வது ஞானமே, கருமம் அன்று, அறிவாயே. (83)

சருவ முத்தியைத் தருகின்ற தியானமுஞ் சத்திய மன்றென்றால்
சருவ முத்தியுஞ் சத்திய மன்றென்று சங்கியா தேநீகேள்
உருவங் கேட்டவன் றியானிக்கும் பொழுதிலவ் வுருவம்வாஸ் தவமன்றே
உருவ மாகுமப் பொழுதுகண் ணாற்கண்ட வுருவம் வாஸ் தவமாமே. (84)

சடம தாகிய தியானமெய் யாகிய சர்வமுத் தியைநல்கும்
திடம தானதெப் படியெனி லவரவர் தியானமே பிறப்பாகும்
உடல மாசையாற் றியானிக்கிற் றியானித்த வுடல்களா குவர்மைந்தா
தொடர்ப வங்கெடச் சொரூபமே தியானிக்கிற் சொரூபமா குவர்மெய்யே. (85)

பிரம ரூபத்தைத் தியானித்த பேர்களும் பிரமமா குவரென்றால்
நரச ரீரமாங் குரவனே விசாரமேன் ஞானமே னென்னாதே
பரம பாவனை பரோட்சமாம் பின்பந்தப் பரோட்சமே யபரோட்சம்
திரவி சாரமா ஞானமா முத்தியாந் தீர்வையீ தறிவாயே. (86)

வீட தாம்பரி பூரண சொரூபத்தில் விருத்திஞா னமுங்கூடிச்
சேட மாகினா லகண்டமா மநுபவ சித்தியெப் படியென்றால்
சாடி நீர்மண்ணைப் பிரித்ததேற் றாம்பொடி தானுமண் ணொடுமாயும்
ஊடி ஞானமு மறிவிலா மையைக்கெடுத் தொக்கவே கெடுந்தானே. (87)

இந்த நிச்சய முத்தரு ளனுபவ மிருப்பதெப் படியென்றால்
சிந்தை யற்றபூ மண்டல விராசனுஞ் சிசுவும்போற் சுகமாவர்
பந்த முத்திகண் மறந்துபோ முண்டென்று பலர்சொலி னகையாவர்
அந்த ரத்தையுண் டுமிழ்ந்ததோர் கொசுகெனு மவர்களை நகையாரோ. (88)

மலடி மைந்தனுந் தானுவிற் புருடனும் வான்மலர் முடிசூடி
இலகு கந்தர்ப்ப நகரிலே சுத்திகை யிரசதம் விலைபேசிக்
கலக மாய்முயற் கொம்பினாற் குத்தியே களைத்திரு வருமாண்டார்
அலகை யாயினா ரெனும்விவ காரத்தை யறிந்தவன் மயங்கானே. (89)

மாயை யென்பது பொய்யெனி லதுபெற்ற வகையெலாம் பொய்யாமே
தாயை யன்றிமக் களுக்கொரு பிறவியுஞ் சாதியும் வேறுண்டோ
சேய சொர்க்கமு நரகமு நன்மையுந் தீமையும் பாராமல்
தூய சத்துச்சித் தாநந்த பூரண சொரூபமா யிருப்பாயே. (90)

சருவமுத்தியைத் தருகின்ற தியானமும்,சத்தியம் அன்று என்றால்,
சருவ முத்தியும் சத்தியமன்று என்று சங்கியாதே; நீ கேள்; உருவம்
கேட்டவன் தியானிக்கும் பொழுதில் அவ்வுருவம் வாஸ்தவமன்றே;
உருவமாகும் அப்பொழுது கண்ணால் கண்ட உருவம் வாஸ்தவமாமே. (84)

சடம் அதாகிய தியான(ம்), மெய்யாகிய சர்வ முத்தியை நல்கும்;
திடம் அதுதான் எப்படியெனில், அவரவர் தியானமே பிறப்பாகும்;
உடலம் ஆசையால் தியானிக்கில், தியானித்த உடல்கள் ஆகுவர்;மைந்தா!
தொடர் பவம் கெட, சொரூபமே தியானிக்கில் சொரூபமாகுவர் மெய்யே.(85)

பிரம ரூபத்தைத் தியானித்த பேர்களும், பிரமமாகுவர் என்றால்,
நர சரீரமாம் குரவனே! விசாரம் ஏன்?ஞானம் ஏன்?என்னாதே;
பரம பாவனை பரோட்சமாம்,பின்பு அந்தப் பரோட்சமே அபரோட்சம்;
திர விசாரமா(ம்) ஞானமா(ம்), முத்தியாம், தீர்வை ஈது அறிவாயே. (86)

வீடதாம் பரிபூரண சொரூபத்தில்,விருத்தி ஞானமும் கூடிச் சேடம்
ஆகினால், அகண்டமாம் அனுபவ சித்தி எப்படியென்றால்?சாடி நீர்
மண்ணைப் பிரித்த தேற்றாம்பொடி தானு(ம்) மண்ணொடு மாயும்;
ஊடி ஞானமும் அறிவிலாமையைக் கெடுத்து,ஒக்கவே கெடும்தானே. (87)

இந்த நிச்சயம்,முத்தர் உள் அனுபவம் இருப்பது எப்படி என்றால்?
சிந்தையற்ற பூமண்டல இராசனும், சிசுவும் போல் சுகமாவர்; பந்த
முத்திகள் மறந்து போம்; உண்டென்று பலர் சொ(ல்)லின் நகையாவர்;
அந்தரத்தை உண்டு, (உ)மிழ்ந்தது ஓர் கொசுகு, எனும் அவர்களை நகையாரோ. (88)

மலடி மைந்தனும், தாணுவில் புருடனும், வான்மலர் முடிசூடி,
இலகு கந்தர்ப்ப நகரிலே, சுத்திகை இரசதம் விலை பேசி, கலகமாய்,
முயல் கொம்பினால் குத்தியே, களைத்து இருவரு(ம்) மாண்டார்;
அலகை ஆயினார்; எனும் விவகாரத்தை அறிந்தவன் மயங்கானே. (89)

மாயை என்பது பொய்யெனில் ,அது பெற்ற வகை எ(ல்)லாம்,பொய்யாமே;
தாயையன்றி, மக்களுக்கு ஒரு பிறவியும்,சாதியும்,வேறுண்டோ?
சேய சொர்க்கமு(ம்), நரகமு(ம்), நன்மையும், தீமையும் பாராமல்,
தூய சத்து, சித்து, ஆனந்த, பூரண சொரூபமாய் இருப்பாயே. (90)

பங்க யாசனன் முதற்பல தேவரும் பாருள பெரியோரும்
கங்கை யாதியாந் தீர்த்தமுந் தேசமுங் காலமு மறைநாலும்
அங்க மாறுமந் திரங்களுந் தவங்களு மசத்திய மெனச்சொன்னால்
எங்க ணாயக னேயத னாற்குற்ற மில்லையோ மொழியீரே. (91)

சொற்ப னந்தனிற் கண்டதைப் பொய்யென்று சொல்வது பிழையானால்
அற்ப மாயையிற் றோன்றிய சகங்களை யசத்தெனல் பிழையாமே
சொற்ப னந்தனிற் கண்டதைப் பொய்யென்று சொல்லலா மெனின்மைந்தா
அற்ப மாயையிற் றோன்றிய சகமெலா மசத்திய மெனலாமே. (92)

பொய்யை மெய்யென்ற மூடர்புண் ணியரென்று புராணங்கூப் பிடுமானால்
மெய்யை மெய்யென்ற ஞானிக்குக் குற்றங்கள் விதித்தசாத் திரமுண்டோ
பொய்ய தேதெனி னாமரூ பங்களாம் பூதமா கியமாயை
மெய்ய தேதெனிற் சச்சிதா நந்தமாய் வியாபிக்கு மான்மாவே. (93)

மாயை யென்பதே துடையரா ரெப்படி வந்தது வருவானேன்
மாயை யென்பது பிரமத்தின் வேறெனின் வஸ்துவு மிரண்டாமே
மாயை யென்பதும் பிரமமு மொன்றெனின் வஸ்துவும் பொய்யாமே
மாயை யென்றமே கங்களுக் கொருசண்ட மாருத குருமூர்த்தி. (94)

அதனை யின்னதென் றுரைத்திடப் படாமையா லவாச்சிய வடிவாகும்
இதுத னக்குள துடலியா னுலகுமெய் யெனுமவ ருடையோர்கள்
கதையி லாதபொய் வந்ததிப் படியென்று கண்டபே ரிலைமைந்தா
விதன மாயையேன் வந்ததென் றாற்புத்தி விசாரமற் றதனாலே. (95)

அருவ மாகுமா யாவிவித் தைகள்விளை யாடுமுன் றெரியாவே
உருவ மாம்பல கந்தர்ப்ப சேனையா யுதித்தபின் வெளியாகும்
பிரம சத்திக ளநந்தமா மதைக்கண்டு பிடித்திடல் கூடாதே
பரவு பூதங்கள் கண்டநு மானத்தாற் பலருக்கும் வெளியாமே. (96)

காரி யங்களுஞ் சத்தியா தாரமுங் காணுமற் றதுமாயம்
பாரி னின்றமா யாவியுஞ் சேனையும் பார்ப்பவர் கண்காணும்
வீரி யந்திகழ் வித்தையா யினசத்தி வெளிப்படா ததுபோலப்
பேரி யற்பிர மத்துக்கு முலகுக்கும் பிறிதுசத் திகளுண்டே. (97)

பங்கயாசனன் முதல் பல தேவரும்,பாருள பெரியோரும், கங்கை
ஆதியாம் தீர்த்தமும், தேசமும், காலமும், மறை நாலும்,அங்கம்
ஆறு(ம்),மந்திரங்களும், தவங்களும் அசத்தியம் எனச் சொன்னால்,
எங்கள் நாயகனே! அதனால் குற்றம் இல்லையோ?மொழியீரே. (91)

சொற்பனந்தனில் கண்டதை,பொய் என்று சொல்வது பிழையானால்,
அற்ப மாயையில் தோன்றிய சகங்களை,அசத்து எனல் பிழையாமே;
சொற்பனந்தனில் கண்டதை, பொய் என்று சொல்லலாம் எனின்,மைந்தா!
அற்ப மாயையில் தோன்றிய சகம் எ(ல்)லாம் அசத்தியம் எனலாமே. (92)

பொய்யை மெய் என்ற மூடர் புண்ணியர் என்று,புராணம் கூப்பிடுமானால்,
மெய்யை மெய் என்ற ஞானிக்கு,குற்றங்கள் விதித்த சாத்திரம் உண்டோ?
பொய் அது ஏது? எனில், நாம ரூபங்களாம் பூதமாகிய மாயை;
மெய் அது ஏது? எனில், சச்சிதாநந்தமாய் வியாபிக்கும் ஆன்மாவே. (93)

மாயை என்பது ஏது?உடையர் யார் ? எப்படி வந்தது? வருவான் ஏன்?
மாயை என்பது பிரமத்தின் வேறு எனின், வஸ்துவும் இரண்டாமே;
மாயை என்பதும் பிரமமும் ஒன்று எனின், வஸ்துவும் பொய்யாமே;
மாயை என்ற மேகங்களுக்கு, ஒரு சண்டமாருத குருமூர்த்தி. (94)

அதனை இன்னது என்று,உரைத்திடப் படாமையால்,அவாச்சிய வடிவாகும்;
இது தனக்கு உளது,உடல் யான்,உலகு மெய் எனும் அவர் உடையோர்கள்;
கதை இ(ல்)லாத பொய் வந்தது இப்படி, என்று கண்ட பேர் இ(ல்)லை மைந்தா;
விதன மாயை ஏன் வந்தது? என்றால்,புத்தி விசாரம் அற்றதனாலே. (95)

அருவம் ஆகும் மாயாவி வித்தைகள், விளையாடு முன் தெரியாவே;
உருவமாம், பல கந்தர்ப்ப சேனையாய் உதித்த பின் வெளியாகும்;
பிரம சக்திகள் அநந்தமாம்; அதைக் கண்டுபிடித்திடல் கூடாதே;
பரவு பூதங்கள் கண்ட அநுமானத்தால், பலருக்கும் வெளியாமே (96)

காரியங்களும், சத்தி ஆதாரமும் காணும்; மற்றது மாயம்;
பாரில் நின்ற மாயாவியும், சேனையும் பார்ப்பவர் கண் காணும்;
வீரியம் திகழ் வித்தை ஆயின சத்தி வெளிப்படாது; அதுபோலப்
பேர் இயல் பிரமத்துக்கும், உலகுக்கும் பிறிது சத்திகள் உண்டே (97)

சத்தி சத்தனைத் தவிரவே றன்றுகாண் சத்தனா மாயாவி
வித்தை காட்டிய விந்திர சாலம்பொய் வித்துவான் மெய்போலப்
புத்தி மைந்தனே சத்திமா னாகிய பூரண வான்மாவின்
வத்து நிர்ணயஞ் சொன்னதிட் டாந்தத்தின் வழிகண்டு தெளிவாயே. (98)

இல்லை யாகிய சத்தியை யுண்டென்ப தெப்படி யெனக்கேட்கில்
புல்லை யாதியா மசேதனப் பொருளெலாம் பூத்துக்காய்ப் பனபாராய்
நல்லை யாமக னேயதிற் சிற்சத்தி நடந்திடா திருந்தக்கால்
தொல்லை யாய்வருஞ் சராசர வுயிர்க்கெலாஞ் சுபாவங்கள் வேறாமே. (99)

கருப்பை முட்டையுட் பறவைகள் பலநிறங் கலந்தசித் திரம்பாராய்
அருப்ப மாஞ்சத்தி நியமமில் லாவிடி லரசிலா நகர்போலாம்
நெருப்பு நீரதாங் கசப்புமே மதுரமா நீசனு மறையோதும்
பொருப்பு மேகமாங் கடலெலா மண்களாம் புவனமிப் படிபோமே. (100)

ஆர்க்குங் காணவு மறியவும் படாதென்று மவாச்சிய வடிவென்றும்
சேர்க்கு நாமரூ பப்பயிர் வித்தென்றுஞ் செப்பிய சிற்சத்தி
பேர்க்கு மாறெங்ஙன் பிரித்திடப் படாதெனிற் பிரமபா வனையொன்றாப்
பார்க்கு மாறெங்ஙன் முத்தியா குவதெங்ஙன் பரமசற் குருமூர்த்தி.(101)

வாயுத் தம்பனஞ் சலத்தம்ப னம்மணி மந்திர மருந்தாலே
தேயுத் தம்பனஞ் செய்திடி லதிலதிற் சிறந்தசத் திகளெங்கே
நீயச் சச்சிதா நந்தமாய் வேறொன்று நினைந்திடா திருப்பாயேல்
மாயச் சத்திபோ மீதன்றி மந்திர மறைகளிற் காணோமே. (102)

மேவு மண்ணிலவ் வியத்தமே வியத்தமாம் விவகரித் திடவேண்டில்
நாவி னான்மண்ணைக் குடமென்ப ரக்குட நசிப்பது நாவாலே
பாவு நாமரூ பங்களை மறந்துமண் பார்ப்பதே பரமார்த்தம்
சீவ பேதகற் பிதங்களை மறந்துநீ சின்மய மாவாயே. (103)

பூரிக் குங்கன சச்சிதா நந்தத்திற் பொய்சடந் துயர்மூன்றும்
தூரத் தாயினுந் தோன்றுபாழ் விபரீதந் துடைப்பதெப் படியென்றால்
நீரிற் றோன்றுந்தன் னிழறலை கீழதாய் நின்றலை யினுநேராய்ப்
பாரிற் றோன்றிய தன்னைநோக் கிடிலந்தப் பாழ்நிழல் பொய்யாமே. (104)

சத்தி,சத்தனைத் தவிர வேறு அன்று, காண்; சத்தனா(ம்) மாயாவி,
வித்தை காட்டிய இந்திரசாலம் பொய்; வித்துவான் மெய் போல,
புத்தி மைந்தனே! சத்திமான் ஆகிய பூரண ஆன்மாவின்,
வத்து நிர்ணயம் சொன்ன திட்டாந்தத்தின், வழி கண்டு தெளிவாயே. (98)

இல்லையாகிய சத்தியை, உண்டு என்பது எப்படி?எனக் கேட்கில்,
புல்லையாதியாம்,அசேதனப் பொருள் எ(ல்)லாம்,பூத்துக் காய்ப்பன
பாராய்; நல்லையா(ம்) மகனே! அதில் சிற்சத்தி நடந்திடாது இருந்தக்கால்,
தொல்லையாய் வரும், சர அசர உயிர்க்கெலாம் சுபாவங்கள் வேறாமே. (99)

கருப்பை,முட்டையுள் ,பறவைகள் பல நிறம் கலந்த சித்திரம் பாராய்;
அருப்பமாம் சத்தி நியமம் இல்லாவிடில், அரசு இ(ல்)லா நகர் போலாம்;
நெருப்பு நீரதாம், கசப்புமே மதுரமா(ம்,) நீசனு(ம்) மறை ஓதும்;
பொருப்பு மேகமாம், கடல் எலா(ம்) மண்களாம்; புவனம் இப்படிப் போமே. (100)

ஆர்க்கும் காணவும், அறியவும் படாதென்றும், அவாச்சிய வடிவு
என்றும்,சேர்க்கு(ம்) நாம, ரூபப் பயிர் வித்து என்றும் செப்பிய சிற்சத்தி,
பேர்க்குமாறு எங்ஙன்? பிரித்திடப்படாதெனில்,பிரம பாவனை ஒன்றாப்
பார்க்குமாறு எங்ஙன்? முத்தியாகுவது எங்ஙன்? பரம சற்குரு மூர்த்தி ! (101)

வாயுத் தம்பனம், சலத் தம்பனம் மணி, மந்திர, மருந்தாலே,
தேயுத் தம்பனம் செய்திடில்,அதில் அதில் சிறந்த சத்திகள் எங்கே?
நீ அச்சச்சிதாநந்தமாய்,வேறொன்று(ம்) நினைந்திடாது இருப்பாயேல்
மாயச் சத்தி போம் ; ஈதன்றி மந்திர(ம்), மறைகளில் காணோமே. ( 102)

மேவு(ம்) மண்ணில்,அவ்வியத்தமே வியத்தமாம்;விவகரித்திட வேண்டில்,
நாவினால் மண்ணைக் குடம் என்பர்; அக்குடம் நசிப்பது(ம்) நாவாலே;
பாவு(ம்) நாம,ரூபங்களை மறந்து,மண் பார்ப்பதே பரமார்த்தம்;
சீவபேத கற்பிதங்களை மறந்து, நீ சின்மயம் ஆவாயே. (103)

பூரிக்கும் கன சச்சிதாநந்தத்தில் பொய்,சடம்,துயர் மூன்றும்,தூரத்து
ஆயினும்,தோன்று(ம்) பாழ்,விபரிதம் துடைப்பது எப்படி?என்றால்,நீரில்
தோன்றும் தன் நிழல்,தலை கீழதாய், நின்று அலையினு(ம்),நேராய்ப்
பாரில் தோன்றிய,தன்னை நோக்கிடில், அந்தப் பாழ்நிழல் பொய்யாமே.(104)

ஞானங் காரண மறிபொருள் காரிய நாமரூ பப்பேய்கள்
ஆன தெப்படி யழிந்த தெப்படியென வாய்குதல் பலனன்றே
மான மைந்தனே தீர்க்கசொப் பனசகம் வந்ததும் பாராமல்
போன துந்நினை யாமலுன் போதமாய்ப் பூர்ணமா யிருப்பாயே. (105)

அசத்தி லெம்மட்டுண் டம்மட்டும் பராமுக மாகினா லம்மட்டும்
நிசத்தி லுள்விழிப் பார்வையா மிப்படி நிரந்தரப் பழக்கத்தால்
வசத்தி லுன்மன நின்றுசின் மாத்திர வடிவமா யிடின்மைந்தா
கசத்த தேகத்தி லிருக்கினு மாநந்தக் கடல்வடி வாவாயே. (106)

தானன்றி வேறொன்று மில்லாத பூரணச் சச்சிதா நந்தகுணமாய்
ஊனின்ற வுயிர்தோறு மொன்றாகு மென்றாலஃ தொக்கின்ற படிகண்டிலேன்
நானென்ற சீவன்கள் சத்தான வகையொக்கு ஞானங்கள் வெளிகண்டதால்
ஆனந்த மிதுபோல வெளியாக வுதியாத வடைவேது குருநாதனே. (107)

உருவங்க ளிரதங்கள் பரிசங்க ளொருபூவி லொன்றாகு மென்றாலுமே
கரணங்க ளோரொன்றி லோரொன்று தெரியுங் கணக்கன்றி வாராதுகாண்
அருமந்த சச்சிதா நந்தச் சுபாவங்க ளான்மாவின் வடிவாகிலும்
பிரபஞ்ச மயமாம் விருத்திபே தத்தினாற் பேதங்க ளாமைந்தனே. (108)

தாமத மிராசதஞ் சாத்துவித முக்குணத் தால்வரும் விருத்திமூன்றாம்
ஆமவைகண் மூடமுங் கோரமுஞ் சாந்தமு மபிதான மாகுமகனே
ஏமுற விருக்கின்ற சச்சிதா நந்தங்க ளென்றென்று மொன்றாகிலும்
நாமுரைக் கும்விருத் திப்பிரிவி னாற்சொரூப ஞானாதி பிரிவாகுமே. (109)

சடமான மூடத் தருக்கல்லு மண்களிற் சத்தொன்று மேதோன்றுமால்
விடமான காமாதி கோரத்தி லாநந்தம் விளையாது மற்றவைகளாம்
திடமான வொழிவாதி சாந்தத்தி லேசச்சி தாநந்த மூன்றும்வெளியாம்
மடமான மூடங்கள் கோரங்கள் விடுசாந்த மனமாகி லாநந்தமே. (110)

இகமான குருநாத னேசச்சி தாநந்த மெனுமிலக் கணமறிகிலேன்
அகலாத சத்தாவ தேதுசித் தாவதே தாநந்த மேதென்றிடில்
மிகுகால மூன்றுங் கெடாதிருப் பதுசத்து வேறுபா டறிதல்சித்தாம்
மகிழ்காம நுகர்போது சுகமாகு மநுபூதி வாழ்வென்ப தாநந்தமே. (111)

ஞானம் காரணம்; அறிபொருள் காரியம்(ம்); நாம,ரூபப் பேய்கள்
ஆனது எப்படி? அழிந்தது எப்படி ?என ஆய்குதல் பலன் அன்றே;
மான மைந்தனே!தீர்க்க சொப்பன சகம் வந்ததும் பாராமல்,
போனதும் நினையாமல் உன் போதமாய், பூரணமாய் இருப்பாயே. (105)

அசத்தில் எம்மட்டு (உ)ண்டு?அம்மட்டும் பராமுகமாகினால்,அம்மட்டும்
நிசத்தில் உள் விழிப் பார்வையாம்; இப்படி நிரந்தரப் பழக்கத்தால்,
வசத்தில் உன் மன(ம்) நின்று,சின்மாத்திர வடிவமாயிடின்,மைந்தா!
கசத்த தேகத்தில் இருக்கினும், ஆநந்தக் கடல் வடிவு ஆவாயே. (106)

தானன்றி,வேறொன்றும் இல்லாத பூரணச் சச்சிதாநந்த குணமாய்,
ஊன் நின்ற உயிர்தோறும் ஒன்றாகும் என்றால் ,அஃது ஒக்கின்றபடி கண்டிலேன்;
நான் என்ற சீவன்கள், சத்தான வகை ஒக்கு(ம்) ஞானங்கள் வெளி கண்டதால்,
ஆனந்தம் இது போல,வெளியாக உதியாத, அடைவேது? குருநாதனே! (107)

உருவங்கள்,இரதங்கள்,பரிசங்கள் ஒரு பூவில் ஒன்றாகும் என்றாலுமே,
கரணங்கள் ஓரொன்றில், ஓரொன்று தெரியும் கணக்கன்றி வாராது; காண்!
அருமந்த சச்சிதாநந்தச் சுபாவங்கள், ஆன்மாவின் வடிவாகிலும்,
பிரபஞ்ச மயமாம் விருத்தி பேதத்தினால் ,பேதங்களா(ம்) மைந்தனே. (108)

தாமதம்,இராசதம்,சாத்துவித(ம்) முக்குணத்தால் வரும் விருத்தி மூன்றாம்;
ஆம்! அவைகள் மூடமும்,கோரமும்,சாந்தமும் அபிதானமாகு(ம்) மகனே !
ஏமுற இருக்கின்ற சச்சிதாநந்தங்கள், என்றென்றும் ஒன்றாகிலும்,
நாம் உரைக்கும் விருத்திப் பிரிவினால், சொரூப ஞானாதி பிரிவாகுமே. (109)

சடமான மூடத் தரு,கல்லு, மண்களில், சத்து ஒன்றுமே தோன்றுமால்,
விடமான காமாதி கோரத்தில் ஆநந்தம் விளையாது; மற்றவைகளாம்;
திடமான ஒழிவாதி சாந்தத்திலே,சச்சிதாநந்த(ம்) மூன்றும் வெளியாம்;
மடமான மூடங்கள்,கோரங்கள் விடு;சாந்த மனமாகில் ஆநந்தமே. (110)

இகமான குருநாதனே!சச்சிதாநந்தம் எனும் இலக்கணம் அறிகிலேன்;
அகலாத சத்தாவது ஏது?சித்தாவது ஏது? ஆநந்தம் ஏது? என்றிடில்,
மிகு கால(ம்) மூன்றும் கெடாது இருப்பது சத்து; வேறுபாடு அறிதல் சித்தாம்;
மகிழ் காம(ம்) நுகர்போது, சுகமாகும் அநுபூதி வாழ்வு என்பது ஆநந்தமே.(111)

நாசச் சரீரத் திருக்குஞ் சரீரிதனை நால்வேத மாவாக்கியம்
நீசச்சி தாநந்த மென்றிடினு மாசிரியர் நீபிரம மாகு மெனினும்
மாசற்ற சச்சிதா நந்தநா னென்னவிவன் மன்னுமநு பவமெங்ஙனே
கோசப் புரங்களை யிடித்துத் தகர்க்குமத குஞ்சரக் குருநாதனே. (112)

சென்மாந்த ரஞ்செய்த வினைகளுட றருமெனிற் செல்கால மிவனுண்டலோ
கன்மாநு பவநரக சொர்க்கமெனில் வருகின்ற காலத்து மிவனுண்டலோ
உன்மாத யாதனா வுடல்கடவு ளுடன்மநுட வுடன்மாறி மாறியழியும்
தன்மாய வுடல்கெடினு மிவனிருப் பதுகொண்டு சத்தென்ப தொக்குமகனே.(113)

இருளாக மூடுஞ் சுழுத்தியி லிராத்திரியி லிரவிசுட ரற்றபொழுது
மருளாம லிருளையும் பொருளையுந் தெரிகின்ற வகைகொண்டு சித்தாகுமே
பெருவாழ்வு மிக்கதா னேதன்னி டத்தினிற் பேராத பிரியமதனால்
அருகாத பிரியஞ் சுகத்தில்வரு மாதலா லாநந்த மாமைந்தனே. (114)

அன்னபா னாதிசுக சாதனம தாகையா லார்க்கும்வெகு பிரியமாகும்
இன்னவா றான்மாவு மாநந்த சாதன மெனக்கருதல் பொருளல்லவே
சொன்னவான் மாவையொரு சுகசாத னங்களொடு சொல்லுவா யாகின்மகனே
உன்னதா நந்தம்வே றேதநுப விப்பதா ருபயவான் மாவுமுளவோ. (115)

விடயசுக மதில்வருதல் பிரியமாத் திரமாகும் வெகுபிரிய மான்மாவிலாம்
விடயசுகம் வருபிரிய மாறிவரு மான்மாவில் வெகுபிரிய மாறாதுகாண்
விடயசுகம் விடலுமாங் கொளலுமா மான்மாவை விடுவதெவர் கொள்வதெவர்பார்
விடயசுக போகங்கள் விடுமவனை யவனால் விடப்படா தொருநாளுமே.(116)

வேகின்ற கோபங்க ளாலென்னை நான்கொன்று விடுகிறே னென்றுசிலபேர்
சாகின்ற படியினாற் றன்னையே தான்கொன்று சாவனெனல் சங்கையலவே
தேகந்த னைக்கொல்லு மவனால் விடப்பட்ட தேகமவ னல்லமகனே
ஆகந்த னிற்கோப மலதுதனை யொருநாளு மான்மா வெறுப்பதிலையே.(117)

தாகப்ப டும்பொருளி லும்மகன் பிரியமாந் தனயனிலு முடல்பிரியமாம்
ஆகத்தி லும்பிரிய மிந்திரிய மாங்கரண மதனிலும் பிரியமுயிராம்
ஏகப்பி ராணனிலும் வெகுபிரிய மான்மாவி லிந்தவான் மாமுக்கியம்
ஊகத்தி னாற்கௌண மித்தைகர்த் தாமூன்று மோரொன்றி லதிகமகனே. (118)

நாசச் சரீரத்து இருக்கும் சரீரிதனை,நால் வேத மாவாக்கியம்,
நீ சச்சிதாநந்தம் என்றிடினும்,ஆசிரியர் நீ பிரமமாகும் எனினும்,
மாசற்ற சச்சிதாநந்த(ம்) நானென்ன, இவன் மன்னும் அநுபவம் எங்ஙனே?
கோசப் புரங்களை இடித்துத் தகர்க்கு(ம்)மத குஞ்சரக் குருநாதனே. (112)

சென்மாந்தரம் செய்த வினைகள் உடல் தரும் எனில், செல்காலம் இவன் உண்டலோ?
கன்ம அநுபவ நரக,சொர்க்கம் எனில்,வருகின்ற காலத்தும் இவன் உண்டலோ?
உன் மாத யாதனா உடல்,கடவுள் உடல்,மநுட உடல் மாறி மாறி அழியும்; தன்
மாய உடல் கெடினும் இவன் இருப்பது கொண்டு சத்து என்பதுஒக்கு(ம்) மகனே. (113)

இருளாக மூடும் சுழுத்தியில்,இராத்திரியில்,இரவி சுடர் அற்ற பொழுது,
மருளாமல் இருளையும்,பொருளையும் தெரிகின்ற வகைகொண்டு,சித்து ஆகுமே;
பெருவாழ்வு மிக்க தானே,தன்னிடத்தினில் பேராத பிரியம்;அதனால்
அருகாத பிரியம் சுகத்தில் வரும்;ஆதலால் ஆநந்தமா(ம்) மைந்தனே. (114)

அன்னபானாதி சுக சாதனம்; அது ஆகையால், ஆர்க்கும் வெகு பிரியம் ஆகும்;
இன்னவாறு ஆன்மாவும்,ஆநந்த சாதனம் எனக் கருதல் பொருள் அல்லவே!
சொன்ன ஆன்மாவை,ஒரு சுக சாதனங்களொடு சொல்லுவாயாகில், மகனே !
உன்னது ஆநந்தம் வேறு ஏது? அனுபவிப்பது ஆர் ? உபய ஆன்மாவும் உளவோ? (115)

விடயசுகம் அதில் வருதல் பிரிய(ம்) மாத்திரமாகும்;வெகு பிரியம் ஆன்மாவிலாம்;
விடயசுகம் வருபிரிய(ம்) மாறிவரும்;ஆன்மாவில் வெகுபிரிய(ம்) மாறாது, காண்;
விடயசுகம் விடலுமாம், கொளலுமாம்; ஆன்மாவை விடுவது எவர்? கொள்வது எவர்? பார்;
விடய சுக போகங்கள் விடும் அவனை,அவனால் விடப்படாது ஒரு நாளுமே. (116)

வேகின்ற கோபங்களால்,என்னை நான் கொன்று விடுகிறேன் என்று, சில பேர்
சாகின்றபடியினால்,தன்னையே தான் கொன்று,சாவன் எனல் சங்கை அ(ல்)லவே;
தேகந்தனைக் கொல்லும் அவனால், விடப்பட்ட தேகம் அவன் அல்ல; மகனே !
ஆகம் தனில் கோபம்; அலது, தனை ஒரு நாளும்,ஆன்மா வெறுப்பதிலையே. (117)

தாகப்படும் பொருளிலும் மகன் பிரியமாம்; தனயனிலும் உடல் பிரியமாம்;
ஆகத்திலும் பிரியம் இந்திரியமாம்; கரணம் அதனிலும் பிரியம் உயிராம்;
ஏகப் பிராணனிலும் வெகு பிரியம் ஆன்மாவில், இந்த ஆன்மா முக்கியம்;
ஊகத்தினால்,கௌண(ம்), மித்தை, கர்த்தா மூன்றும் ஒரொன்றில், அதிக(ம்) மகனே!(118)

கெடலான பொழுதிவன் காணிக்கு மகனான கெவுணவான் மாமுக்கியம்
விடலாத வுடலம் பரிக்குநா ளுடலான மித்தையான் மாமுக்கியம்
திடமான நன்மைகதி வேண்டினாற் கர்த்தனாஞ் சீவவான் மாமுக்கியம்
சடமாயு முத்தியினின் ஞானவான் மாவான தானே மகாமுக்கியம். (119)

புலியுமநு கூலமெனி லிட்டமாம் பகைசெயிற் புதல்வனெனி னும்வெறுப்பாம்
உலகிலிரு வகையுமல் லாதபுல் லாதியி லுதாசீன மாமாதலான்
மலினமறு சின்மயன் பலவகையு மிப்படி மகிழ்ச்சியில் விருப்பமிகழான்
அலகிலா நந்தவடி வாகுமுன் சொரூபத்தை யாராய்ந்து பார்மைந்தனே. (120)

மானஞ்சி றந்தகுரு நாதனே யாநந்த வகைகளைத் தனையென்னிலோ
ஞானந்தி கழ்ந்தபிர மாநந்தம் வாசனா நந்தம்விட யாநந்த மென்
றாநந்த மூன்றுவித மெட்டுவகை யென்பர்சில ரவ்வைந்து மிதிலடக்கம்
யானந்த வகைசொலக் கேண்மைந்த னேயெட்டு மிஃதின்ன தின்னதெனவே.(121)

போகத்தில் வருசுகம் விடயசுக நித்திரைப் போதுளது பிரமசுகமாம்
மோகத்த னந்தலிற் சுகம்வாச னைச்சுக முழுப்பிரிய மான்மசுகமாம்
யோகத்தி லுளதுமுக் கியசுக முதாசீன முற்றசுக நிசசுகமதாம்
ஏகத்தை நோக்கலத் துவித சுகம் வாக்கிய மெழுந்தசுக ஞானசுகமே. (122)

இவ்வா றுரைசெயுஞ் சுகபே தங்களி னியல்பா மவைசொல மகனேகேள்
ஒவ்வா நனவினி லுழல்வா னிடர்கெட வுறங்குஞ் சயனம துறுநேரம்
செவ்வா மனமக முகமா மதிலொளிர் சித்தின் சுகநிழல் சேருங்காண்
அவ்வா றிவனுள மகிழ்வா மநுபவ மதுதான் விழயசு காநந்தம். (123)

ஈனந் தருசுக விடயந் திரிபுடி யிடரா மெனமன மசையாமல்
சேனந் தனது குலாயந் தனில்விழு செயல்போ னித்திரை செறிசீவன்
தானந் தமில்பர னுடனொன் றுவனொரு தனையல் லதுபிற நினையாமல்
ஆநந் தமயனு மாவன் சுகமிகு மதுதா னுயர்பிர மாநந்தம். (124)

தூங்குஞ் சுகமது பிரமச் சுகமெனல் சுருதிப் பொருள்விழி துயில்வோர்கள்
தாங்கும் மலரணை நன்றா கச்சிலர் சம்பா திப்பது தானூகம்
தீங்குந் நன்மையு மாண்பெண் முறைமையுந் தெரியா தமளிசெய் பொழுதேபோல்
ஆங்குள் வெளிகளு மறியா வநுபவ மதனா லதுபிர மாநந்தம். (125)

கெடலானபொழுது,இவன் காணிக்கு மகனான கெவுணஆன்மா முக்கியம்;
விடலாத உடலம் பரிக்கு(ம்)நாள்,உடலான மித்தை ஆன்மா முக்கியம்;
திடமான நன்மை கதி வேண்டினால்,கர்த்தனாம் சீவ ஆன்மா முக்கியம்;
சட(ம்) மாயு(ம்) முத்தியினில், ஞான ஆன்மாவான தானே, மகா முக்கியம். (119)

புலியும் அநுகூலம் எனில் இட்டமாம்; பகை செயில் , புதல்வன் எனினும் வெறுப்பாம்;
உலகில் இரு வகையும் அல்லாத புல்லாதியில் உதாசீனமாம்; ஆதலால், மலினம் அறு
சின்மயன், பல வகையும் இப்படி மகிழ்ச்சியில் விருப்பம் இகழான்; அலகு இல்
ஆநந்த வடிவாகும்,உன் சொரூபத்தை ஆராய்ந்து பார்; மைந்தனே! (120)

மானம் சிறந்த குருநாதனே! ஆனந்த வகைகள் எத்தனை என்னிலோ?
ஞானம் திகழ்ந்த பிரமாநந்தம்,வாசனாநந்தம், விடயாநந்தம் என்று ஆநந்தம்
மூன்று விதம்; எட்டு வகை என்பர் சிலர்; அவ்வைந்தும் இதில் அடக்கம்;
ஆநந்த வகை சொலக் கேள்; மைந்தனே! எட்டும் இஃது இன்னது இன்னது, எனவே. (121)

போகத்தில்வரு(ம்) சுகம் விடய சுக(ம்);நித்திரைப் போது (உ)ளது பிரம சுகமாம்;
மோகத்து அனந்தலில் சுகம் வாசனைச் சுக(ம்);முழுப் பிரியம் ஆன்ம சுகமாம்;
யோகத்தில் உளது முக்கிய சுகம்; உதாசீனமுற்ற சுக(ம்) நிச சுகமதாம்;
ஏகத்தை நோக்கல் அத்துவித சுகம்; வாக்கியம் எழுந்த சுக(ம்) ஞான சுகமே. (122)

இவ்வாறு (உ)ரை செயும் சுக பேதங்களின் இயல்பாம்,அவை சொ(ல்)ல மகனே கேள்!
ஒவ்வா நனவினில் உழல்வான்; இடர் கெட, உறங்கும் சயனம் அது (உ)று நேரம்,
செவ்வா மனம் அகமுகமாம்;அதில் ஒளிர் சித்தின் சுகநிழல் சேரும்; காண்!
அவ்வாறு இவன் உள(ம்) மகிழ்வாம் அநுபவம்; அதுதான் விழய சுக ஆநந்தம். (123)

ஈனம் தரு(ம்) சுக(ம்) விடயம்;திரிபுடி இடராம் என,மனம் அசையாமல்
சேனம் தனது குலாயம் தனில் விழு(ம்) செயல் போல், நித்திரை செறி சீவன்
தான்,அந்தம் இல் பரனுடன் ஒன்றுவன்;ஒருதனை அல்லது பிற நினையாமல்,
ஆநந்தமயனும் ஆவன்; சுக(ம்)மிகும்; அதுதான் உயர் பிரமாநந்தம். (124)

தூங்கும் சுகம், அது பிரமச் சுகம் எனல் சுருதிப் பொருள் ;விழி துயில்வோர்கள்,
தாங்கும் மலர் அணை நன்றாகச் சிலர் சம்பாதிப்பதுதான், ஊகம்;
தீங்கும் -நன்மையும்,ஆண்-பெண் முறைமையும் தெரியாது,அமளி செய் பொழுதே போல்,
ஆங்கு,உள்- வெளிகளும் அறியா(து) அநுபவம், அதனால் அது பிரமாநந்தம்.(125)

உதவும் புவியினி லொருவன் னநுபவ மொருவன் மனதினி லுதியாதே
மதியுங் கெடுகிற துயில்கொண் டாநந்த மயனன் றோசுக முறுகின்றான்
இதுவிஞ் ஞான மயனது சிந்தையி னினைவாய் வந்திட லழகன்றே
சுதைவிண் ணோர்புகழ் குருவே நீரிது சொல்லீர் சகலமும் வல்லீரே. (126)

நெய்யும் வெண்ணெயு மிருபேர் களுமறி நினைவிற் பிறிவறி வினிலில்லை
செய்யுந் நனவினி லிறுகும் மனதொடு சேருஞ் சின்மய விஞ்ஞானன்
நையுந் துயர்மன நழுவும் பொழுதுணர் ஞானச் சுகமுணு மாநந்தன்
பெய்யுந் துளிகளு நீருங் குளமொடு பாகும் போலிவர் பிறிவன்றே. (127)

ஒன்றா கியபிர மாநந் தச்சுக மொழிவா னேன்வெளி வருவானேன்
என்றான் முன்செய்த கருமம் வெளியினி லிழுக்குஞ் சுழுத்திவிட் டெழுந்தோனும்
நன்றா யினசுக மகலான் வெளியிலு நடவான் மறதியும் பெறமாட்டான்
அன்றா மெனவிருந் துறங்குஞ் சிலகண மதுவே வாதனை யாநந்தம். (128)

அந்தக் கணமுட லகமென் றிடர்களி லலைந்தே சுகந்தனை மறந்தேபோம்
முந்தைச் செயும்வினை சுகதுக் கந்தரு மோனம் முறுநடு வடிவிற்காண்
எந்தப் புருடனு மொருசிந் தையுமற விருந்தே னெனலநு பவமாகும்
இந்தப் படிதனு தாசீ னச்சுக மிதுவே நிசமெனு மாநந்தம். (129)

நிசமா னதுமுக் கியமோ குடத்துள நீரன் றேவெளி யீரந்தான்
வசமா வகங்கார மறைந்தா னிசமது படிந்தான் முக்கிய வகையாகும்
திசையார் திரிசய மறியா தேதுயில் செறியா தேயுட றறிபோல
அசையா தேமதி சமமா கியநிலை யதுதான் முக்கிய வாநந்தம். (130)

மனுடன் மனுடகந் தருவன் றேவநன் மாகந் தருவனொண் பிதிரோடே
பனுமா சானர்கள் கருமத் தேவர்கள் பகர்முக் கியரிந் திரனாசான்
கனமார் பிரசா பதியென் விராட்டுப்பொன் கர்ப்பப் பிரமனென் றின்னோர்கள்
பினவா நந்தங்க ளுரையாம் பிரளய வெள்ளக் கடல்பிர மாநந்தம்.(131)

எவனா கிலுமிந்தத் துரியா தீதத்தி லேழாம் பூமியி லிருந்தானேல்
அவனா ரதன்சுகன் சிவன்மா லயன்முத லறிவோ ரநுபவ சுகபோதன்
விவகா ரதிர்சய மிதுவே யநுபவ மெனமுன் சொல்லிய விவகாரி
உவமா னமுமறி மகனே யவனடி யுதிரும் பொடிகளென் முடிமேலே.(132)

உதவும் புவியினில் ஒருவன் அநுபவம்,ஒருவன் மனதினில் உதியாதே;
மதியும்கெடுகிற துயில்கொண்டு, ஆநந்தமயன் அன்றோ! சுகம் உறுகின்றான்;
இது விஞ்ஞானமயனது சிந்தையில், நினைவாய் வந்திடல் அழகன்றே!
சுதைவிண்ணோர் புகழ் குருவே!நீர் இது சொல்லீர்! சகலமும் வல்லீரே. (126)

நெய்யும், வெண்ணெயும் இருபேர்களும், அறி நினைவில் பிறிவு;அறிவினில்இல்லை;
செய்யும் நனவினில்,இறுகும் மனதொடு சேரும் சின்மய விஞ்ஞானன்,
நையும் துயர் மன(ம்) நழுவும் பொழுது, (உ)ணர் ஞானச் சுகம்உ(ண்)ணும் ஆநந்தன்;
பெய்யும் துளிகளு(ம்)-நீரும், குளமொடு-பாகும் போல் இவர் பிறிவு அன்றே. (127)

ஒன்றாகிய பிரமாநந்தச் சுகம் ஒழிவான் ஏன்? வெளி வருவான் ஏன்?என்றால்,
முன் செய்த கருமம் வெளியினில் இழுக்கும்;சுழுத்தி விட்டு எழுந்தோனும்,
நன்றாயின சுகம் அகலான்;வெளியிலும் நடவான்; மறதியும் பெறமாட்டான்;
அன்றாம் என இருந்து (உ)றங்கும் சில கணம், அதுவே வாதனையாநந்தம். (128)

அந்தக் கணம் உடல், அகம் என்று, இடர்களில் அலைந்தே, சுகம் தனை மறந்தே போம்;
முந்தைச் செ(ய்)யும் வினை சுக துக்கம் தரு(ம்); மோனம்உறு நடு வடிவில் காண்;
எந்தப் புருடனும் ஒரு சிந்தையும் அற இருந்தேன்; எனல் அநுபவமாகும்;
இந்தப்படி, தன் உதாசீனச் சுகம், இதுவே நிசம் எனும் ஆநந்தம். (129)

நிசமானது முக்கியமோ? குடத்து(உள்)ள நீர் அன்றே; வெளி ஈரந்தான்;
வசமா(ய்) அகங்கார(ம்) மறைந்தால் நிசம்;அது படிந்தால் முக்கிய வகை ஆகும்;
திசையார் திரிசயம் அறியாதே; துயில் செறியாதே; உடல் தறி போல
அசையாதே;மதி சமமாகிய நிலை; அதுதான் முக்கிய ஆநந்தம். (130)

மனுடன்,மனுடகந்தருவன், தேவ நன் மா கந்தருவன்.ஒண்பிதிரோடே,
பனும்ஆஜானர்கள், கருமத் தேவர்கள்,பகர் முக்கியர்,இந்திரன், ஆசான்,
கனமார் பிரசாபதி என் விராட்டு,பொன் கர்ப்பப் பிரமன் என்று, இன்னோர்கள்
பி(ன்)ன ஆநந்தங்கள் நுரையாம்; பிரளய வெள்ளக் கடல் பிரமாநந்தம். (131)

எவனாகிலும், இந்தத் துரியாதீதத்தில் ஏழாம் பூமியில் இருந்தானேல்,
அவன் நாரதன்,சுகன்,சிவன்,மால்,அயன் முதல் அறிவோர் அநுபவ சுக போதன்;
விவகார அதிர்சயம், இதுவே அநுபவம் என,முன் சொல்லிய விவகாரி
உவமானமும் அறி மகனே ! அவன் அடி உதிரும் பொடிகள் என் முடி மேலே. (132)

இந்தவா றைந்துசுகஞ் சொல்லினோம் வித்தைசுக மினிமேற் சொல்வோம்
முந்தமா யையுஞ்சச்சி தாநந்தப் பொருளுமே மொழியும் போதில்
அந்தமா மத்துவித சுகமான்ம சுகமிரண்டு மங்கே சொன்னோம்
தொந்தமாற் றியமகனே யின்னமுனக் கையமுண்டேற் சொல்லு வாயே. (133)

குகன்றனையு மெனையுமுல கினையுமீன் றளித்தருளுங் குருவேகேளீர்
புகன்றசச்சி தாநந்தப் பதங்கடனித் தனியாகிப் பொருள்வே றானால்
உகண்டமன முறைப்பதெங்ஙன் பரியாய பதங்களைப்போ லுறவு காணேன்
அகண்டமா யொருசுவையாய்த் தேனிக்கூட் டியமதுவா யறிவிப் பீரே. (134)

குளிரிலகல் வெண்மையென்ற பதங்களினா னீர்மூன்று கூறா யிற்றோ
ஒளிதவனஞ் செம்மையென்ற பதங்களா லக்கினியு மொருமூன் றாமோ
வெளிமுதலாஞ் சகமசத்து மூடமிட ரெனப்பிரித்து விலக்கி வேதம்
எளிதறிய முரண்மொழிந்த சத்தாதி யெனும்பிரம மேகந் தானே. (135)

நித்தியம்பூ ரணமேகம் பரமார்த்தம் பரப்பிரம நிதாநஞ் சாந்தம்
சத்தியங்கே வலந்துரியஞ் சமந்திருக்குக் கூடத்தன் சாட்சி போதம்
சுத்தமிலக் கியஞ்சநா தநஞ்சீவன் தத்துவம்விண் சோதி யான்மா
முத்தம்விபு சூக்குமமென் றிவ்வண்ணம் விதிகுணங்கண் மொழியும் வேதம். (136)

அசலநிரஞ் சநமமிர்த மப்பிரமே யம்விமலம் வசநா தீதம்
அசடமநா மயமசங்க மதுலநிரந் தரமகோ சரம கண்டம்
அசமநந்த மவிநாசி நிர்க்குணநிட் களநிரவ யவம நாதி
அசரீர மவிகார மத்துவித மெனவிலக்கா மநேக முண்டே. (137)

இன்னவகை விதிவிலக்குக் குணங்க ளன்றாய்ச் சேர்ந்தொருமித் தெல்லாங் கூடிச்
சொன்னபொரு ளொன்றன்றி யிரண்டில்லை யொருபொருளைச் சொல்லுஞ் சொற்கள்
பின்னபத மாமதனாற் சத்தாதி குணப்பொருளாம் பிரம மேகம்
அன்னபொரு ளொருமையறிந் தகண்டபரி பூரணமா யாவாய் நீயே. (138)

நிற்குணவத் துவின்குணங்க ளுரைப்பதுதாய் மலடியென நிகரென் னாதே
சற்குணனே வத்துநிலை யுரையாம லறியவல்ல சதுர ருண்டோ
நற்குணவே தங்களிந்தச் சீவன்முத்தி பெறப் பிரம்ம ஞானந் தோன்றச்
சொற்குணங்கள் பிரமத்தின் குணங்களன்று பிரமமாஞ் சொரூபந் தானே. (139)

இந்தவாறு ஐந்து சுகம் சொல்லினோம்;வித்தை சுகம் இனிமேல் சொல்லுவோம்
முந்த மாயையும்,சச்சிதாநந்தப் பொருளுமே மொழியும் போதில்,
அந்தமாம் அத்துவித சுகம்,ஆன்ம சுகம் இரண்டும் அங்கே சொன்னோம்;
தொந்த(ம்) மாற்றிய மகனே!இன்னம் உனக்கு ஐயம் உண்டேல் சொல்லுவாயே. (133)

குகன் தனையும், எனையும்,உலகினையும் ஈன்று, அளித்து,அருளும் குருவே கேளீர்
புகன்ற சச்சிதாநந்தப் பதங்கள்,தனித் தனியாகி, பொருள் வேறானால்,
உகண்ட மனம் உறைப்பது எங்ஙன்? பரியாய பதங்களைப் போல் உறவு காணேன்;
அகண்டமாய், ஒரு சுவையாய், தேனிக் கூட்டிய மதுவாய் அறிவிப்பீரே. (134)

குளிர்,இலகல்,வெண்மை என்ற பதங்களினால், நீர் மூன்று கூறு ஆயிற்றோ?
ஒளி,தவனம், செம்மை என்ற பதங்களால், அக்கினியும் ஒரு மூன்றாமோ?
வெளி முதலாம் சகம் அசத்து, மூடம், இடர் எனப் பிரித்து விலக்கி,
வேதம் எளிதறிய முரண் மொழிந்த,சத்தாதி எனும் பிரமம் ஏகம் தானே. (135)

நித்தியம்,பூரணம், ஏகம், பரமார்த்தம், பரப்பிரம்ம(ம்), நிதானம், சாந்தம்,
சத்தியம், கேவலம், துரியம், சமம் ,திருக்கு, கூடத்தன், சாட்சி, போதம்,
சுத்தம்,இலக்கியம், சநாதனம், சீவன், தத்துவம் ,விண், சோதி, ஆன்மா,
முத்தம், விபு ,சூக்குமம் என்று இவ்வண்ணம், விதி குணங்கள் மொழியும் வேதம். (136)

அசலம்,நிரஞ்சனம்,அமிர்தம்,அப்பிரமேயம்,விமலம்,வசநாதீதம்,
அசடம் ,அநாமயம் ,அசங்கம். அதுலம்,நிரந்தரம், அகோசரம், அகண்டம்,
அசம்,அனந்தம் ,அவிநாசி ,நிர்குண(ம்),நிட்கள(ம்), நிரவயவம், அநாதி,
அசரீரம், அவிகாரம், அத்துவிதம் என, விலக்காம் அனேகம் உண்டே. (137)

இன்னவகை விதி, விலக்குக் குணங்கள், நன்றாய்ச் சேர்ந்து, ஒருமித்து,எல்லாம் கூடி,
சொன்ன பொருள் ஒன்றன்றி இரண்டு இல்லை, ஒரு பொருளைச் சொல்லும் சொற்கள்;
பின்ன பதமாம்; அதனால் சத்தாதி குணப் பொருளாம் பிரமம் ஏகம்;
அன்ன பொருள் ஒருமை அறிந்து,அகண்ட பரிபூரணமாய் ஆவாய் நீயே. (138)

நிற்குண வத்துவின் குணங்கள் உரைப்பது,தாய் மலடியென(ல்) நிகர் என்னாதே;
சற்குணனே! வத்துநிலை உரையாமல், அறியவல்ல சதுரர் உண்டோ?
நற்குண வேதங்கள், இந்தச் சீவன் முத்தி பெற,பிரம்ம ஞானம் தோன்ற,
சொற்குணங்கள் பிரமத்தின் குணங்கள் அன்று; பிரமமாம் சொரூபந்தானே. (139)

மோகவிருள் கெடக்கோடி யருணனென வருகுருவே மொழியக் கேளீர்
ஏகபரி பூரணமா மென்சொரூப மென்னுளத்தி லிறுகும் வண்ணம்
ஆகமங்கள் சொன்னபடி யென்னையகண் டார்த்தமா வறிந்தே னையா
ஊகமுமொத் திடவுரைத்தாற் பசுமரத்தி லாணிபோ லுறைக்கு நெஞ்சே. (140)

சத்தேசித் தாகுமய லெனிலசத்தா மசத்தானாற் சாட்சி யெங்கே
சித்தேசத் தாகுமய லெனிற்சடமாஞ் சடங்களுக்குத் திதியு மில்லை
ஒத்தேதோன் றியசத்துஞ் சித்துநல்ல சுகமாகு மூகத் துக்கோர்
வித்தேயன் னியமாகிற் சடமசத்தாஞ் சுகாநுபவம் விளைந்தி டாதே. (141)

வீயாத சத்துமுன்னம் விளங்குவது தன்னாலோ வேறொன் றாலோ
வாயால்வே றெனிலதுவு மசத்தோசத் தோவசத்தேன் மலடி மைந்தன்
பேயாகா ரியஞ்செயுமோ சத்தெனவிப் படியதையும் பிரித்துச் சொன்னால்
ஓயாத வவத்தையாங் குதர்க்கவிகற் பங்களைவிட் டொழிந்தி டாயே (142)

சுருதியுத்தி யொத்ததுபோ லநுபவமுங் கேள்சுழுத்திச் சுகவா நந்தம்
மிருதிவடி வாதலிலவ் வாநந்த மேயறிவாம் வேறங் கில்லை
கருதுபிர ளயஞ்சுழுத்தி யிரண்டிலுநீ யிருந்திருளைக் காண்கின் றாயே
இருதயத்திப் படிநோக்கி யேகபரி பூரணமா யிருந்தி டாயே. (143)

பலகலையு முணர்ந்த குரு மொழிந்தபடி யிவனுமநு பவம்வி டாமல்
பலமலரின் மதுப்போலச் சச்சிதா நந்தமொன்றாம் பரமார்த் தத்தைப்
பலபொழுதுங் கண்மூடிச் சமாதியிருந் தான்விழித்துப் பார்த்த போது
பலவடிவாஞ் சராசரசித் திரங்களெலாந் தோன்றுமொரு படமா னானே. (144)

இதயமொத்த சற்குருவே நமக்கிதுவே வினோதமன்றி யினிவே றுண்டோ
அதையுரைத்து மதைநினைத்து மிருப்பதன்றோ ஞானிகளுக் கான நீதி
முதலுரைத்த துரியாதீ தமுமேழாம் பூமியுமுக் கியமா மென்ற
பதமுமதன் வகையுமெனக் கெளிதாகத் தெளியும்வண்ணம் பணித்தி டீரே. (145)

வினவுமிடத் தஞ்ஞான பூமிகளேழ் ஞானபூ மிகளே ழென்பார்
இனியவற்று ளஞ்ஞான பூமிகளே ழையுமுந்தி யியம்பக் கேளாய்
தனிவித்துச் சாக்கிரஞ்சாக் கிரமகா சாக்கிரஞ்சாக் கிரத்தைச் சார்ந்த
கனவுகனாக் கனவுசாக் கிரஞ்சுழுத்தி யென்றெழுபேர் கணித்தார் மேலோர். (146)

மோக இருள் கெட,கோடி அருணன் என வரு(ம்) குருவே! மொழியக் கேளீர் !
ஏக பரிபூரணமாம் என் சொரூபம், என் உ(ள்)ளத்தில் இறுகும் வண்ணம்
ஆகமங்கள் சொன்னபடி ,என்னை அகண்டார்த்தமா(ய்) அறிந்தேன் ஐயா!
ஊகமும் ஒத்திட உரைத்தால் பசு மரத்தில் ஆணி போல் உறைக்கும் நெஞ்சே. (140)

சத்தே சித்தாகும்; அயல் எனில் அசத்தாம்; அசத்தானால் சாட்சி எங்கே?
சித்தே சத்தாகும்; அயல் எனில் சடமாம்; சடங்களுக்குத் திதியும் இல்லை;
ஒத்தே தோன்றிய சத்தும், சித்தும் நல்ல சுகமாகும்; ஊகத்துக்கு ஓர் வித்தே;
அன்னியமாகில் சடம், அசத்து ஆம்; சுக அநுபவம் விளைந்திடாதே. (141)

வீயாத சத்து, முன்னம் விளங்குவது தன்னாலோ? வேறு ஒன்றாலோ?
வாயால் வேறு எனில்,அதுவும் அசத்தோ?சத்தோ?அசத்தேல், மலடி மைந்தன்
பேயா காரியம் செ(ய்)யுமோ? சத்து என,இப்படி அதையும் பிரித்துச் சொன்னால்,
ஓயாத அவத்தையாம்; குதர்க்க, விகற்பங்களை விட்டு ஒழிந்திடாயே. (142)

சுருதி, யுத்தி ஒத்தது போல் அநுபவமும் கேள்; சுழுத்திச் சுக ஆநந்தம்;
(ஸ்)மிருதி வடிவு; ஆதலில், அவ்வாநந்தமே அறிவாம்; வேறு அங்கில்லை;
கருது பிரளயம்,சுழுத்தி இரண்டிலு(ம்),நீ இருந்து, இருளைக் காண்கின்றாயே;
இருதயத்து இப்படி நோக்கி, ஏக பரிபூரணமாய் இருந்திடாயே. (143)

பல கலையும் உணர்ந்த குரு மொழிந்தபடி, இவனும் அநுபவம் விடாமல்,
பல மலரின் மதுப் போல, சச்சிதாநந்தம் ஒன்றாம் பரமார்த்தத்தை,
பல பொழுதும் கண்மூடி,சமாதி இருந்தான்;விழித்துப் பார்த்த போது,
பல வடிவாம் சர அசர சித்திரங்கள் எ(ல்)லாம்,தோன்றும் ஒரு படம் ஆனானே. (144)

இதயம் ஒத்த சற்குருவே! நமக்கு இதுவே வினோதமன்றி,இனி வேறுண்டோ?
அதை உரைத்தும்,அதை நினைத்தும்இருப்பதன்றோ? ஞானிகளுக்கான நீதி;
முதல் உரைத்த துரியாதீதமும்,ஏழாம் பூமியு(ம்) முக்கியமாம் என்ற பதமும்,
அதன் வகையும் எனக்கு எளிதாகத் தெளியும் வண்ணம் பணித்திடீரே. (145)

வினவுமிடத்து, அஞ்ஞான பூமிகள் ஏழ்; ஞான பூமிகள் ஏழ் என்பார்;
இனி அவற்றுள் ,அஞ்ஞான பூமிகள் ஏழையு(ம்), முந்தி இயம்பக் கேளாய்;
தனி வித்து,சாக்கிரம்,சாக்கிர மகா சாக்கிரம், சாக்கிரத்தைச் சார்ந்த கனவு,
கனா, கனவு சாக்கிரம்,சுழுத்தி என்று எழு பேர் கணித்தார் மேலோர். (146)

முந்தவகண் டத்தெழுமோ ரறிவுமாத் திரமதுதான் முதல்வித் தாகும்
இந்தவறி விற்பண்டில் லாவகந்தை முளைபோலா மிதுந ளைவாம்
வந்துவந்து பிறவிதொறு மகமமதை வளருமது மகாந னாவாம்
நந்துமகங் கொடுநனவின் மனோராச்சி யஞ்செயலே நனாக்க னாவே. (147)

உண்டுறங்கி மனோராச்சி யஞ்செயல்சொப் பனமெனும்பே ருடைய தாகும்
பண்டுகனாக் கண்டுமறந் ததைமீண்டு நினைப்பதுசொப் பனந னாவாம்
மண்டுமிருண் மூடுவது சுழுத்தியா மஞ்ஞான வகைகள் சொன்னோம்
விண்டுநிறை முத்திதரு ஞானபூ மிகளேழும் விளம்பக் கேளாய். (148)

புலவர்புகழ் முதற்பூமி சுபேச்சைவிசா ரணையிரண்டாம் பூமி யாகும்
நலதநுமா னசிமூன்றாம் பூமிசத்து வாபத்தி நாலாம் பூமி
சொலுமசம்சத் திப்பேரும் பதார்த்தாபா வனைப்பேருந் துரியப் பேரும்
மலினமறு மகனேயைந் தாறேழு பூமிகளா வகுத்தார் மேலோர். (149)

துற்சங்க நிவர்த்திவந்து சிவஞானம் விரும்புவது சுபேச்சை யாகும்
நற்சங்க மொழிவினவி ஞானநூல் பழகல்விசா ரணையா நம்பி
முற்சங்க வேடணைகள் விடறநுமா னசியிந்த மூன்றி னாலும்
சற்சங்க மனதிலுண்மை யறிவுதித்தல் சத்துவா பத்தி தானே. (150)

தத்துவத்தின் மனமுறைத்து மித்தையெலா மறத்தலசம் சத்தி யாகும்
அத்துவிதா நந்தம்வருந் திரிபுடிபோம் பதார்த்தாபா வனைய தாகும்
வத்துநிலை யிருந்தபடி யிருந்தமவு னசுபாவந் துரிய மாகும்
இத்துரிய பூமியைமுன் றுரியாதீ தப்பதமென் றதுவுங் கேளாய். (151)

முற்புவிமூன் றினுமுலகந் தோன்றுதலாற் சாக்கிரமா மூன்றற் கப்பால்
சொற்பனமா மதுவுமெள்ள நழுவுமைந்தாம் பூமியே சுழுத்தி யாகும்
அற்புதமாஞ் சுகாநுபவ மிகுமாறாம் புவிதுரிய மதற்கப் பாலோர்
கற்பனையி லாதவிட மதீதமென்று மௌனமாக் காட்டும் வேதம். (152)

துரியநிலந் தனைத்துரியா தீதமெனின் மயக்கமென்று சுருதிமே லோர்
அரியதொரு விதேகமுத்தி யதீதமென்பா ரதுகணக்கி லாறாம் பூமி
மருவுசுழுத் தியிற்காட சுழுத்தி யென்பா ரென்பதுநீ மனத்திற் கொள்வாய்
பெருமைதரு ஞானபூ மியின் விகற்ப மின்னமுண்டு பேசக் கேளாய். (153)

முந்த அகண்டத்து எழும்,ஓர்அறிவு மாத்திரம்,அதுதான் முதல் வித்தாகும்;
இந்த அறிவில்,பண்டு இல்லா அகந்தை முளை போலாம்,இது நனாவாம்;
வந்து வந்து,பிறவிதொறும் அகம், மமதை வளரும்; அது மகா நனாவாம்;
நந்தும் அகம் கொடு நனவில் ,மனோராச்சியம் செயலே, நனாக் கனாவே. (147)

உண்டு, (உ)றங்கி, மனோ ராச்சியம் செயல் சொப்பனம் எனும் பேர் உடையதாகும்;
பண்டு கனாக் கண்டு,மறந்து,அதை மீண்டு(ம்) நினைப்பது,சொப்பன நனாவாம் ;
மண்டும் இருள் மூடுவது சுழுத்தியாம் ; அஞ்ஞான வகைகள் சொன்னோம்;
விண்டு நிறை முத்தி தரு(ம்), ஞான பூமிகள் ஏழும் விளம்பக் கேளாய். (148)

புலவர் புகழ் முதல் பூமி சுபேச்சை; விசாரணை இரண்டாம் பூமியாகும்;
நல தநுமானசி மூன்றாம் பூமி; சத்துவாபத்தி நாலாம் பூமி; சொ(ல்)லும்
அசம்சத்திப் பேரும் பதார்த்தாபாவனைப் பேரும், துரியப் பேரும்,மலினம்
அறு மகனே! ஐந்து, ஆறு ,ஏழு பூமிகளா(ய்) வகுத்தார் மேலோர். (149)

துற்சங்க நிவர்த்தி வந்து, சிவஞானம் விரும்புவது சுபேச்சையாகும்;
நற்சங்க மொழி வினவி, ஞான நூல் பழகல் விசாரணையா(ம்);
நம்பி,முற்சங்க ஏடணைகள் விடல் தநுமானசி ; இந்த மூன்றினாலும்
சற்சங்க(ம்),மனதில் உண்மை அறிவு (உ)தித்தல்,சத்துவாபத்தி தானே. (150)

தத்துவத்தில் மனம் உறைத்து, மித்தையெலா(ம்) மறத்தல் அசம்சத்தி ஆகும்;
அத்துவிதாநந்தம் வரும்;திரிபுடி போம்;பதார்த்த அபாவனை அது ஆகும்;
வத்து நிலை இருந்தபடி ,இருந்த மவுன சுபாவம் துரியமாகும்;
இத்துரிய பூமியை முன், துரியாதீதப் பதம் என்றதுவும் கேளாய். (151)

முற்புவி மூன்றிலும் உலகம் தோன்றுதலால்,சாக்கிரமாம்;மூன்றற்கு அப்பால்,
சொற்பனமாம்; அதுவும் மெள்ள நழுவும் ஐந்தாம் பூமியே,சுழுத்தியாகும்;
அற்புதமாம் சுகானுபவம் மிகும், ஆறாம் புவி துரியம் ;அதற்கு அப்பால்
ஓர் கற்பனையிலாத இடம் அதீதம் என்று மௌனமாக் காட்டும் வேதம். (152)

துரியநிலம் தனை,துரியாதீதம் எனில்,மயக்கம் என்று சுருதி,மேலோர்,
அரியதொரு விதேக முத்தி,அதீதம் என்பார்; அது கணக்கில் ஆறாம் பூமி;
மருவு சுழுத்தியில்,காட சுழுத்தி என்பார், என்பதும் நீ மனத்தில் கொள்வாய்;
பெருமைதரு(ம்) ஞானபூமியின் விகற்பம் இன்னம் உண்டு; பேசக் கேளாய். (153)

முன்னிலங்க ளேறியமூ வருமப்பி யாசிகளா முத்த ரல்லர்
பின்னிலங்கள் வரன்வரியான் வரிட்டனெனுஞ் சீவன்முத்தர் பேத மாகும்
சொன்னநடுப் பூமிவந்த ஞானிகளே பிரமவித்தாந் தூய முத்தர்
இன்னமுமப் பூமிகளின் பெருமைதனை நீயறிய யான்சொல் வேனே. (154)

நாலாம்பூ மியில்வருமுன் முன்றுபூ மியுமடைந்து நடந்து மாண்டோர்
மேலான பதமடைந்து பிறந்துமெள்ள மெள்ளவந்து வீடு சேர்வார்
மாலான பவத்தில்விழார் முதற்பூமி கிடைப்பதுவே வருத்த மைந்தா
காலான முதற்பூமி கைவந்தான் முத்தியுங்கை வந்த தாமே. (155)

இப்புவியி லிஞ்ஞான பூமியொன்றி லிரண்டிலடைந் திருந்தா ரானால்
அப்புருடர் மிலேச்சரா கிலுமுத்தர் குருபாதத் தாணை மெய்யே
தப்புரையென் றவர்கெடுவார் நடுவான மறைகளைநீ சங்கி யாதே
செப்புமொழி வழிதிடமா யகம்பிரம மென்றிருந்து தெளிந்தி டாயே. (156)

பொல்லாத மிலேச்ச ருக்கும் விதேகமுத்தி தருஞான பூமியென்று
நெல்லாகி முளைக்குமெனைத் தண்டுலமாக் கியகுருவே நீர்சொன் னீரே
இல்லாளுங் குடும்பம்விட்டுச் சந்நியா சம்புகுந்தே காங்கி யானோர்
அல்லாமன் முத்திபெறா ரென்றுசிலர் சொலுமயக்க மகற்று வீரே.(157)

சிட்டர்புகழ் மகனேநீ சங்கித்த சங்கைநன்று தெரியக் கேளாய்
கட்டழியுந் துறவுநால் வகையாகு மவைகளுக்கங் காகும் பேர்கள்
பட்டதுயர் கெடுங்குடீ சகம்வெகூ தகமஞ்சம் பரம வஞ்சம்
விட்டகலுந் துறவுக்கு விராகங்கா ரணமன்றி வேட மன்றே. (158)

மந்தமுந்தீ விரமுந்தீ விரதரமு மெனமூன்று வகைவி ராகம்
வெந்துயரம் வரும்பொழுது குடும்பத்தை வெறுத்துவரும் விராக மந்தம்
இந்தவுட லளவுமனை தனம்வேண்டா மெனவிடறீ விரமென் பார்கள்
அந்தணனூர் மித்தையென விடலதுதீ விரதரமா மறிந்தி டாயே. (159)

பாவிமந்த விராகத்திற் சந்நியா சங்க ளொன்றும் பலித்தி டாதே
தீவிரத்திற் குடீசகமும் வெகூதகமு மென்றிரண்டு திறங்க ளுண்டாம்
தாவிநடந் திடத்திடமி லாதவர்க்குக் குடீசகமுஞ் சகங்க ளெங்கும்
மேவிநடந் திடத்திடமுள் ளவர்க்குவெகூ தகமுமென விதித்தார் மேலோர்.(160)

முன் நிலங்கள் ஏறிய மூவரும் அப்பியாசிகளாம் ;முத்தர் அல்லர் ;
பின் நிலங்கள் வரன்,வரியான்,வரிட்டன் எனும் சீவன் முத்தர் பேதமாகும் ;
சொன்ன நடுப்பூமி வந்த ஞானிகளே,பிரமவித்தாம் தூய முத்தர்;
இன்னமும் அப்பூமிகளின் பெருமைதனை, நீ அறிய,யான் சொல்வேனே. (154)

நாலாம் பூமியில் வரு(ம்) முன்,மூன்று பூமியும் அடைந்து,நடந்து மாண்டோர்;
மேலான பதம் அடைந்து,பிறந்து ,மெள்ள மெள்ள வந்து வீடு சேர்வார்;
மாலான பவத்தில் விழார்; முதல் பூமி கிடைப்பதுவே வருத்தம்; மைந்தா!
காலான முதல் பூமி கைவந்தால், முத்தியும் கைவந்ததாமே. (155)

இப்புவியில்,இஞ்ஞான பூமியில்,ஒன்றில்,இரண்டில் அடைந்து இருந்தாரானால்,
அப்புருடர் மிலேச்சராகிலு(ம்) முத்தர்; குருபாதத்து ஆணை! மெய்யே!
தப்பு (உ)ரை என்றவர் கெடுவார்; நடுவான மறைகளை, நீ சங்கியாதே;
செப்பு(ம்), மொழி வழி திடமாய், அகம் பிரமம் என்று இருந்து தெளிந்திடாயே. (156)

பொல்லாத மிலேச்சருக்கும், விதேகமுத்தி தரு(ம்) ஞானபூமி என்று,
நெல்லாகி முளைக்கும் எ(ன்)னை, தண்டுலம் ஆக்கிய குருவே! நீர் சொன்னீரே!
இல்லாளும்,குடும்பம் விட்டு,சந்நியாசம் புகுந்து,ஏகாங்கியானோர்
அல்லாமல் முத்தி பெறார், என்று சிலர் சொ(ல்)லும் மயக்கம் அகற்றுவீரே. (157)

சிட்டர் புகழ் மகனே! நீ சங்கித்த சங்கை நன்று; தெரியக் கேளாய்; கட்டு
அழியும் துறவு நால்வகையாகும்; அவைகளுக்கு அங்காகும் பேர்கள்,
பட்ட துயர் கெடும் குடீசகம், வெகூதகம் ,அஞ்சம், பரம அஞ்சம்;
விட்டு அகலும் துறவுக்கு, விராகம் காரணம் அன்றி, வேடம் அன்றே. (158)

மந்தமும், தீவிரமும், தீவிரதரமும் என மூன்று வகை விராகம்;
வெந்துயரம் வரும் பொழுது, குடும்பத்தை வெறுத்து வரும் விராகம், மந்தம்;
இந்த உடல் அளவு மனை, தனம் வேண்டாம் என விடல், தீவிரம் என்பார்கள்;
அந்தணன் ஊர் மித்தை என விடல்,அது தீவிரதரமாம்; அறிந்திடாயே. (159)

பாவி மந்த விராகத்தில்,சந்நியாசங்கள் ஒன்றும் பலித்திடாதே;
தீவிரத்தில் குடீசகமும்,வெகூதகமும் என்று இரண்டு திறங்கள் உண்டாம்;
தாவி நடந்திடத் திடம் இ(ல்)லாதவர்க்குக் குடீசகமும் ; சகங்கள் எங்கும்
மேவி நடந்திட, திடம் உள்ளவர்க்கு வெகூதகமும் என, விதித்தார் மேலோர். (160)

இருவகைதீ விரதரத்து மஞ்சனென்றும் பரமாஞ்ச னென்றுஞ் சொல்வர்
வருமஞ்ச னுக்குமுத்தி சத்தியலோ கத்தன்றி வாரா தென்பார்
பரமாஞ்ச னுக்குமுத்தி யிவ்வுலகின் ஞானத்தாற் பலிக்கு மென்பார்
திரமருவும் பரமாஞ்சன் றானுமிரு வகையாகுஞ் செப்பக் கேளாய்.(161)

சிஞ்ஞாசு ஞானவா னென்றிரண்டு பேர்களவ ரிற்சிஞ் ஞாசு
மெய்ஞ்ஞான பூமியின்முன் மூன்றுபூ மியுடைக்கும் விவேகியா னோன்
சுஞ்ஞான வானென்போன் சீவன்முத்தி யடைந்திருக்குந் தூய மேலோன்
அஞ்ஞான மகலுமந்தச் சிஞ்ஞாசு மிருவகையா மதுவுங் கேளாய்.(162)

பந்தமனை துறந்துசில ரதிதிகளா யிருந்தடைவர் பரம ஞானம்
அந்தணர்மன் னவர்வணிகர் சூத்திரரா யிருந்துசில ரடைவர் ஞானம்
இந்தவகைச் சாத்திரத்து முலகத்து நடப்பதுகண் டிருந்து மைந்தா
சிந்தனையின் மயக்கமென்னே சுருதியுத்தி யநுபவத்தாற் றெளிந் திடாயே.(163)

பிறந்ததுண் டானா லன்றோ பிறகுசா வதுதா னுண்டாம்
பிறந்ததே யில்லை யென்னும் பிரமமா வதுவு நானே
பிறந்தது நானென் றாகிற் பிரமமன் றந்த நானே
பிறந்தது மிறந்த தற்ற பிரமமா நானே நானே. (164)

நானென்ற பிரம மான நானேநா னறியே னென்றால்
நானென்ப தேது பின்னை நம்முடைப் புந்தி யென்னில்
தானது மயக்கந் தன்னிற் சாகுமே சாவா தாகி
நானென நிறைந்தி ருந்த ஞானமா நானே நானே. (165)

நிறைந்தவா றெந்த வாறு நிலைதெரிந் திலனென் றாயேல்
அறிந்ததாஞ் சுழுத்தி தன்னி லாநந்த மதுவே யாகும்
குறைந்ததற் காநந் தந்தான் குவலயந் தன்னி லில்லை
நிறைந்ததே யிந்த வான்மா நிதானமிவ் வறிவு தானே. (166)

மனத்தினா லெண்ணித் தானே வந்ததிவ் வுலக மாகும்
நினைத்திடி லநேக லோக நிற்பதவ் வறிவி லன்றோ
அனைத்தையுங் கடந்தப் பாலு மந்தமற் றறிவி தாமென்
றெனைத்தனி விசாரித் திட்டா லேகமாய் நிறைந்தோ னானே. (167)

இருவகை தீவிரதரத்தும்,அஞ்சன் என்றும்,பரமாஞ்சன் என்றும் சொல்வர்;
வரும் அஞ்சனுக்கு முத்தி, சத்தியலோகத்து அன்றி, வாராது என்பார்;
பரம அஞ்சனுக்கு முத்தி, இவ்வுலகில், ஞானத்தால் பலிக்கும் என்பார்;
திர(ம்) மருவும் பரமாஞ்சன் தானும் இருவகையாகும்; செப்பக் கேளாய். (161)

சிஞ்ஞாசு,ஞானவான் என்று இரண்டு பேர்கள்;அவரில் சிஞ்ஞாசு,
மெய்ஞ்ஞான பூமியில்,முன் மூன்று பூமியுள் நடக்கும் விவேகி ஆனோன்;
சுஞ்ஞானவான் என்போன்,சீவன் முத்தி அடைந்திருக்கும் தூய மேலோன்;
அஞ்ஞானம் அகலும் அந்த சிஞ்ஞாசும்,இருவகையாம்;அதுவும் கேளாய். (162)

பந்த மனை துறந்து சிலர்,அதிதிகளாய் இருந்து,அடைவர் பரம ஞானம்;
அந்தணர்,மன்னவர்,வணிகர்,சூத்திரராய் இருந்து சிலர் அடைவர் ஞானம்;
இந்தவகைச் சாத்திரத்தும்,உலகத்து(ம்) நடப்பது கண்டிருந்து மைந்தா!
சிந்தனையில் மயக்கம் என்னே! சுருதி, யுத்தி,அநுபவத்தால் தெளிந்திடாயே. (163)

பிறந்தது (உ)ண்டானால் அன்றோ? பிறகு சாவதுதான் உண்டாம்;
பிறந்ததே இல்லை, என்னும் பிரமம் ஆவதுவும் நானே!
பிறந்தது நான் என்றாகில், பிரமம் அன்று அந்த நானே!
பிறந்ததும், இறந்தது(ம்) அற்ற பிரமமா(ம்) நானே! நானே! (164)

நான் என்ற பிரமமான நானே, நான் அறியேன் என்றால்,
நான் என்பது ஏது? பின்னை நம்முடைப் புந்தி என்னில்,
தான் அது, மயக்கம் தன்னில் சாகுமே; சாவாதாகில்,
நான் என நிறைந்திருந்த ஞானமா(ம்) நானே! நானே! (165)

நிறைந்தவாறு,எந்தவாறு நிலை தெரிந்திலன்? என்றாயேல்,
அறிந்ததாம் சுமுத்தி தன்னில் ,ஆனந்தம் அதுவே ஆகும்;
குறைந்ததற்கு ஆநந்தந்தான், குவலயம் தன்னில் இல்லை;
நிறைந்ததே இந்த ஆன்மா, நிதானம் இவ்வறிவு தானே. (166)

மனத்தினால் எண்ணித் தானே ,வந்தது இவ்வுலகமாகும்;
நினைத்திடில், அநேக லோகம் நிற்பது, அவ்வறிவில் அன்றோ;
அனைத்தையும் கடந்து அப்பாலும்,அந்தமற்று,அறிவு இதாம் என்று,
எனைத் தனி விசாரித்திட்டால், ஏகமாய் நிறைந்தோன் நானே. (167)

அந்தவா றிருந்து கொண்டே யாநந்த மநுப விக்க
எந்தவா றிருந்து கொண்டா லெனக்கிது தெரியு மென்னில்
இந்தமுன் றவத்தை தம்மு ளெழுந்திடும் விருத்தி நீக்கில்
அந்தவா றிருந்து நீயு மாநந்த மடைய லாமே. (168)

வாதனா வசத்தி னாலே வருகிற விருத்தி யெல்லாம்
ஏதினா லடக்க லாகு மென்றுதான் விசாரஞ் செய்யில்
போதமா மிராசன் றானாய்ப் புந்தியைம் புலன்க ளெல்லாம்
தாதரா யிருக்கப் பெற்றாற் சகலமு மடங்குந் தானே. (169)

விருத்திக ளடக்க வின்னம் வினோதமாம் யோகத் தாலே
துருத்திபோ லூது மூச்சைச் சுகமுட னடக்கி னிற்கும்
கருத்ததற் கில்லை யென்னிற் காரண சரீர மாகிப்
பெருத்ததோ ரவித்தை தன்னைப் பிடுங்கிடி லடங்குந் தானே. (170)

காரண சரீரந் தன்னைக் களைவதெவ் வாறென் றோதில்
ஆரணம் பொய்சொல் லாதே யதன்பொரு ளகத்தி லுய்த்துப்
பூரண மாகு மென்மேற் புவனங்க டோற்ற மென்று
தாரணை வந்த தாகிற் றரித்திடு மவித்தை யெங்கே. (171)

அப்படி யிருக்கச் சித்த மலைதலால் விவகா ரத்தில்
எப்படி கூடு மென்னி லென்னைவிட் டொன்று மில்லை
இப்படி கண்ட வெல்லா மென்மய மென்க னாப்போல்
கற்பித மென்று தானே காண்கின்ற சித்து நானே. (172)

சித்துநா னிறைந்தோ னென்ற திடமற வாதி ருந்தால்
எத்தனை யெண்ணி னாலு மேதுசெய் தாலு மென்ன
நித்திரை யுணர்ந்த பின்பு நிற்கின்ற கனாவே போல
அத்தனை யும்பொய் தானே யாநந்த வடிவு நானே. (173)

நானென வுடலைத் தானே நம்பினே னநேக சன்மம்
ஈனராய்ப் பெரியோ ராகி யிருந்தவை யெலாமிப் போது
கானலில் வெள்ளம் போலக் கண்டுசற் குருவி னாலே
நானென வென்னைத் தானே நம்பியீ டேறி னேனே. (174)

அந்தவாறு இருந்து கொண்டே, ஆநந்தம் அனுபவிக்க,
எந்தவாறு இருந்து கொண்டால்? எனக்கு இது தெரியும் என்னில்,
இந்த மூன்று அவத்தை, தம்முள் எழுந்திடும் விருத்தி நீக்கில்,
அந்தவாறு இருந்து, நீயும் ஆநந்தம் அடையலாமே. (168)

வாதனா வசத்தினாலே வருகிற, விருத்தி எல்லாம்,
ஏதினால் அடக்கலாகும்? என்று தான் விசாரம் செய்யில்,
போதமாம் இராசன் தானாய், புந்தி, ஐம்புலன்கள் எல்லாம்,
தாதராய் இருக்கப் பெற்றால், சகலமும் அடங்குந்தானே. (169)

விருத்திகள் அடக்க, இன்னம், வினோதமாம் யோகத்தாலே,
துருத்தி போல் ஊது(ம்) மூச்சை, சுகமுடன் அடக்கில் நிற்கும்;
கருத்து அதற்கு இல்லை என்னில், காரண சரீரமாகி,
பெருத்ததோர் அவித்தை தன்னை, பிடுங்கிடில் அடங்குந்தானே. (170)

காரண சரீரம் தன்னைக் களைவது எவ்வாறு ?என்று ஓதில்,
ஆரணம் பொய் சொல்லாதே; அதன் பொருள் அகத்தில் உய்த்து,
பூரணமாகும் என் மேல், புவனங்கள் தோற்றம் என்று,
தாரணை வந்ததாகில், தரித்திடும் அவித்தை எங்கே? (171)

அப்படியிருக்க, சித்தம் அலைதலால் ,விவகாரத்தில்
எப்படிக் கூடும் ? என்னில், என்னை விட்டு ஒன்றும் இல்லை;
இப்படிக் கண்ட எல்லாம் என்மயம், என் கனாப் போல்,
கற்பிதம் என்று ,தானே காண்கின்ற சித்து நானே. (172)

சித்து நான் நிறைந்தோன், என்ற திடம் மறவாதிருந்தால்,
எத்தனை எண்ணினாலும் ,ஏது செய்தாலும் என்ன?
நித்திரை உணர்ந்த பின்பு, நிற்கின்ற கனாவே போல,
அத்தனையும் பொய் தானே; ஆநந்த வடிவு நானே. (173)

நான் என உடலைத் தானே ,நம்பினேன் அநேக சன்மம்;
ஈனராய், பெரியோர் ஆகி இருந்தவை எ(ல்)லாம், இப்போது,
கானலில் வெள்ளம் போலக் கண்டு, சற்குருவினாலே
நான் என ,என்னைத் தானே நம்பி ,ஈடேறினேனே. (174)

என்னபுண் ணியமோ செய்தே னேதுபாக் கியமோ காணேன்
நன்னிலந் தனிலெழுந்த நாரணன் கிருபை யாலே
தன்னிய னானே னானுத் தரீயத்தை வீசு கின்றேன்
தன்னிய னின்னு நானே தாண்டவ மாடு கின்றேன். (175)

தத்துவ ஞானம் வந்த சந்தோட வதிச யத்தால்
நித்தமா டுவன்கா ணென்ற நிலைமுன்ன மேய றிந்த
சத்திய மதனா லன்றோ தாண்டவா வென்ற ழைத்தார்
அத்தனை மகிமை யுள்ளோ ரன்னையும் பிதாவுந் தாமே. (176)

வந்ததோ ரிவ்வா நந்த மகிழ்ச்சியா ருடன்சொல் வேன்யான்
சிந்தையி லெழுந்து பொங்கிச் செகமெலா நிறைந்து தேங்கி
அந்தமில் லாத தாயிற் றப்படி குருவே தாந்த
மந்திர மருளு மீசன் மலரடி வணங்கி னேனே. (177)

வித்தியா நந்த மிந்த விதமென விளம்பி னோமே
பத்தியா லிந்த நூலைப் பார்த்தநு பவித்த பேர்கள்
நித்திய தரும நிட்டை நிலைதனை யறிந்து சீவன்
முத்தியை யடைந்தி ருந்த முனிவர ராகு வாரே. (178)

ஆரணப் பொருளாம் வித்தி யாநந்தம் விளங்க வேதும்
காரணங் குறைவி லாமற் கைவல்ய நவநீ தத்தைப்
பூரண மாக்க வேண்டிப் பூர்வமா நன்னி லத்தில்
நாரண குருந மக்கு நவின்றனர் யோகில் வந்தே. (179)

குலவுசற் குருவின் பாதக் குளிர்புனற் றலைமேற் கொண்டால்
உலகினிற் றீர்த்த மெல்லா முற்றபே றடைவார் போல
நலமெய் யாகியகை வல்ய நவநீத நூலைக் கற்றோர்
பலகலை ஞான நூல்கள் படித்தஞா னிகளாய் வாழ்வார். (180)

சந்தேகம் தெளிதல் படலம்
மொத்தம் 180 - பாடல்கள்
முற்றியது.

என்ன புண்ணியமோ செய்தேன்! ஏது பாக்கியமோ காணேன்!
நன்னிலம் தனில் எழுந்த, நாரணன் கிருபையாலே,
தன்னியன் ஆனேன் நான்! உத்தரீயத்தை வீசுகின்றேன்!
தன்னியன் நின்னு, நானே தாண்டவம் ஆடுகின்றேன் ! (175)

தத்துவ ஞானம் வந்த சந்தோட அதிசயத்தால்,
நித்தம் ஆடுவன் காண், என்ற நிலை முன்னமே அறிந்த,
சத்தியம் அதனால் அன்றோ, தாண்டவா என்று அழைத்தார்;
அத்தனை மகிமை உள்ளோர், அன்னையும், பிதாவும் தாமே. (176)

வந்தது ஓர் இவ்வாநந்த மகிழ்ச்சி யாருடன் சொல்வேன் யான்?
சிந்தையில் எழுந்து, பொங்கி, செகம் எ(ல்)லாம் நிறைந்து, தேங்கி,
அந்தம் இல்லாதது ஆயிற்று; அப்படி குரு ,வேதாந்த மந்திரம்
அருளும், ஈசன் மலர் அடி வணங்கினேனே. (177)

வித்தியாநந்தம் இந்த விதம் என, விளம்பினோமே;
பத்தியால், இந்த நூலைப் பார்த்து, அநுபவித்த பேர்கள்,
நித்திய தரும நிட்டை நிலைதனை அறிந்து,
சீவன் முத்தியை அடைந்திருந்த, முனி வரர் ஆகுவாரே. (178)

ஆரணப் பொருளாம் வித்தியாநந்தம் விளங்க ஏதும்
காரணம் குறைவி(ல்)லாமல், கைவல்ய நவநீதத்தைப்
பூரணமாக்க வேண்டி, பூர்வ மா நன்னிலத்தில்,
நாரண குரு ,நமக்கு நவின்றனர், யோகில் வந்தே. (179)

குலவு சற்குருவின் பாதக் குளிர் புனல், தலை மேல் கொண்டால்
உலகினில் தீர்த்தம் எல்லாம் , உற்ற பேறு அடைவார் போல,
நல(ம்) மெய்யாகிய கைவல்ய நவநீத நூலைக் கற்றோர்,
பலகலை ஞான நூல்கள் படித்த ,ஞானிகளாய் வாழ்வார். (180)

| | | |
|---|---|---|
| **பாயிரம்** | - | **7-பாடல்கள்** |
| **தத்துவ விளக்கம்** | - | **101-பாடல்கள்** |
| **சந்தேகம் தெளிதல்** | - | **180-பாடல்கள்** |
| **மொத்தம்** | - | **288-பாடல்கள்** |

## ஸ்ரீதாண்டவேசுர சுவாமிகளின் மாணாக்கர்
## கைவல்ய நவநீதத்தையும் குருநாதரையும் துதித்தல்

அண்ணறன் னருளி னாலே யகம்புற மின்றி யொன்றாய்
எண்ணமி லிலக்கி யார்த்தத் தின்பொரு ளதுநா னென்ன
நண்ணின சரீர மாதி நாதத்தி னுபாதி யென்றே
கண்ணதா யனைத்துங் காணக் காட்டினன் றாண்ட வேசன். (1)

ஆன்ற பதமா மூன்றற்கு மதுநீ யானா யெனும்பொருளிற்
சான்ற துரியா தீதத்திற் றடையற் றிலங்கொண் சைதந்நியம்
ஊன்றி யுணர்ந்தோர் விகற்பமயக் கொழித்துத் தடையு மூடறுத்துத்
தோன்றித் தானே தானாவர் துலங்குந் தமக்கே சுவாநுபவம். (2)

என்னு மாவாக் கியநான்கு மிசைக்கும் வித்தி யாநந்தஞ்
சொன்ன நாரா யணன்பாதந் தொழுது துதித்தோர் துகளற்றோர்
இன்ன மாணாக் கன்குருவாற் சந்தே கந்தீர்ந் திடுபதத்தே
துன்னி நிறைந்து நின்றோர்க டூய முத்த ராகுவரே. (3)

தத்துவ விளக்கத் தாலுஞ் சந்தேகந் தெளித லாலு
மொத்திருள் விடாத மாயா வுள்ளிரு ளிரிய வோங்குஞ்
சித்ததா மொளிவி ளங்கச் செய்துபின் விருத்தி பேதப்
புத்தியால் வருமை யத்தைப் புரையறத் தெளிவித் தாண்டான். (4)

ஆண்டதே சிகனா மைய னாரண னநந்தன் பாதம்
பூண்டவா ரோபத் தான் பொய்ம்மயக் காய்வந் தத்தை
மாண்டநல் லபவா தத்தான் மாய்த்தரு ளோக்கத் தென்றுங்
காண்டிட வைத்த ளித்த காரணா போற்றி !போற்றி! (5)

சற்குரு ஸ்ரீமத் வேதாந்த விஞ்ஞான ஏழுமலையாநந்த சுவாமிகள்
திருவடிகள் போற்றி ! போற்றி !

## ஸ்ரீதாண்டவேசுர சுவாமிகளின் மாணாக்கர்
## கைவல்ய நவநீதத்தையும் குருநாதரையும் துதித்தல்

அண்ணல் தன் அருளினாலே அகம் புறமின்றி ஒன்றாய்
எண்ணம் இலக்கியார்த்தத்தின் பொருளது நானென்ன
நண்ணின சரீரமாதி நாதத்தின் உபாதியென்றே
கண்ணதாய் அனைத்தும் காணக் காட்டினன் தாண்டவேசன். (1)

ஆன்ற பதமாம் மூன்றற்கும் அது நீயானாய் எனும் பொருளில்
சான்ற துரியாதீதத்தில் தடையற்று இலங்கொண் சைந்நியம்
ஊன்றி உணர்ந்தோர் விகற்ப மயக்கு ஒழித்து எத்தடையு மூடறுத்துத்
தோன்றித் தானே தானாவர் துலங்கும் தமக்கே சுவானுபவம் (2)

என்னும்) மாவாக்கியம்) நான்கும் இசைக்கும் வித்தியானந்தம்
சொன்ன நாராயணன் பாதம் தொழுது துதித்தோர் துகளற்றோர்
இன்ன மாணாக்கன் குருவால் சந்தேகந் தீர்ந்திடு பதத்தே
துன்னி நிறைந்து நின்றோர்கள் தூய முத்தர் ஆகுவரே. (3)

தத்துவ விளக்கத்தாலும் சந்தேகம் தெளிதலாலும் ஒத்து
இருள்விடாத மாயாவுள் இருள் இரிய ஓங்கும் சித்ததாம்
ஒளி விளங்கச் செய்து பின் விருத்தி பேதப்புத்தியால்
வரும் ஐயத்தைப் புரையறத் தெளிவித்து ஆண்டான். (4)

ஆண்ட தேசிகனாம் ஐயன் நாரணன் அனந்தன் பாதம்
பூண்டு ஆரோபத்தால் பொய் மயக்காய் வந்து அத்தை
மாண்ட நல்ல அபவாதத்தான் மாய்த்து அருள் நோக்கத்து
என்றும் காண்டிட வைத்து அளித்த காரணா போற்றி போற்றி. (5)

ஞான போத குரு ஸ்ரீமத் சிவசாத்மீகானந்த சுவாமிகள்
திருவடிகள் போற்றி ! போற்றி !

ஓம்

தத் சத்

பரப்பிரஹ்மணே நம:

## முடிவுரை

**கல்லாத பேர்களே நல்லவர்கள் நல்லவர்கள், கற்றும் அறிவிலாத என் கர்மத்தை என் சொல்கேன்,கைவல்ய ஞான நீதி நல்லோர் உரைக்கிலோ கர்மம் முக்கியம் என நிலை நாட்டுவேன் என்று** தாயுமான சுவாமிகள் சித்தர் கணத்திலே, கைவல்ய நவநீதம் கூறுகின்ற பர ஞான விளக்கத்தைப் பற்றி திருவாய் மலர்ந்தருளியுள்ளார்.

வேத முதலாயுள்ள எல்லா நூற்களிலும் சொல்லப்பட்ட பொருளை, எவர்க்கும் நன்கு விளங்குமாறு உள்ளங்கை நெல்லிக்கனி போல் காட்டி, ஞானமயமான பேரானந்த நிலையில் ஆழ்த்துகின்ற இந்த ஒப்பற்ற ஞான சாத்திரமான **கைவல்ய நவநீதத்தை,** மூலத்தில் உள்ளபடி பாடல்களாகவும், மூலத்தில் உள்ள பாடல்களோடு விளக்கங்களும், பாடல்கள் இல்லாமல் விளக்கங்களுடனும் வெளியிடப்பட்டு வந்திருக்கின்றன என்பது யாவரும் அறிந்ததே.

காலத்தின் வேகம் க்ஷணத்திற்கு க்ஷணம் மாறிக்கொண்டே இருக்கின்றது. கணிணியின் தாக்கம் வெகு வேகமாய் நம்மை ஆட்கொண்டு விட்டது. தொழில் முறைகள் எல்லாம் மாறிப் போய்விட்டன.

இன்னும் இது போன்ற பற்பல காரணங்களால் இக்காலத்து மாணாக்கர்களால் வேதாந்த நூற்களைக் குருமுகமாகப் பயில அவகாசம் இல்லாமல் போய்விட்டது.இவற்றையெல்லாம் மனதில் கொண்டு கைவல்ய நவநீதப் பாடல்களின் மூலத்தை, **ஸ்ரீ தாண்டவேசுர சுவாமிகள்** இயற்றிய முறைமையில் இடது பக்கத்திலும்,இப்பாடல்களை எவரும் எளிதில் படித்துணர, வாக்கியங்களை முறையாகப் பிரித்து, உரை நடை வடிவமாக வலது பங்கத்திலுமாக வைத்து செய்திருக்கின்றோம்.

இதனைப் படிக்கும் அன்பர்கள் இப்பாடல்களின் அர்த்தங்களை சுலபமாகப் புரிந்து கொள்ளவும்,எவருடைய உதவியுமின்றி கற்று,மனனம் செய்து,சிந்திக்கவும் முடியும் என்பது.இந்நூல் 2009-ம் ஆண்டு முதல் பதிப்பாக வெளியிடப்பட்ட பிறகு, பல மெய்யன்பர்களால் இப்பாடல்களை எவரது துணையுமின்றி படிக்க இயலுவதும்,இன்னும் சில மெய்யன்பர்களால் மனனம் செய்யப்படுவதும் நம் எல்லோரது அநுபவத்திலும் காணமுடிகிறது.

இந்நூலிற்கு நல்ல வரவேற்பு இருக்கின்றமையாலும்,முதல் பதிப்பின் பிரதிகள் தீர்ந்து போயினமையாலும்,மெய்யன்பர்களின் நலன் பொருட்டு .இதனை இரண்டாம் பதிப்பாக வெளியிடும் **தீர்க்கதரிசி தியாகராச சுவாமிளைப்** பாராட்ட வார்த்தைகளே இல்லை.

**..........பொருவிகந்த இந்நூலை.................**

**.............................................................................**

**.........பிறவி நோய் தணிப்பதனுக்கு எண்ணி**

**..........................................................உருகும்**

**அன்புடையோர் தமைக்காணின் அளித்திடுக உவந்தே**

என்று வேதாந்த சூளாமணி கூறுவதற்கு ஒப்ப, இந்தகைவல்ய நவநீத நூலை இலவச அர்ப்பணிப்பாகவும், **பாடி கைவல்ய நவநீத சங்கத்தினருக்கும்,** வேதாந்த பாடங்களை அவர்களுக்கு **போதித்த குருமார்களுக்கும்** சமர்ப்பணமாகவும் இதனை அச்சிட்டு வெளியிடுகின்ற **தீர்க்கதரிசி தியாகராச சுவாமிகளும், அவரது குடும்பத்தினரும்** தீர்க்காயுளும், சகல ஐஸ்வரியங்களும் பெற்றுய்ய வேண்டுகிறோம். பிழை திருத்தங்கள் செய்வதற்கு துணையாய் செயல்பட்ட **இறையொளி நாகேந்திரன் சுவாமிகளின்** உழைப்பும் போற்றற்குரியது. பொன்னம்பலத்தில் நடமிடும் குரு வேதாந்த மந்திரம் அருளும் கனகசபாபதியை வணங்கி இந்த முடிவுரையை நிறைவு செய்கிறோம்.

**ஜவஹர் சுவாமிகள்**

**ஈசுரார்ப்பணம்.**

| பாடல் | பக்கம் |
|---|---|
| அகமெனும் ஆன்மா | 53 |
| அக்கினி கட்டுப் பட்டால் | 33 |
| அசத்தில் எம்மட்டும் | 73 |
| அசலம் நிரஞ்சனம் | 81 |
| அச்சுவத்தம் | 59 |
| அடங்கிய விருத்தியான் | 13 |
| அதனையின்னதென்று | 69 |
| அதுதானெப்படி யென்றக் | 17 |
| அத்தியாரோப மென்றும் | 15 |
| அநுபவானந்த வெள்ளத்து | 31 |
| அந்தக் கணம் உடல் | 79 |
| அந்தமும் நடுவுமின்றி | 9 |
| அந்தவாறிருந்து | 91 |
| அப்படி இருக்க சித்தம் | 91 |
| அரவன்று கயிறு | 21 |
| அரிதாகு மிவர்கள் | 37 |
| அரிய மெய்ஞ்ஞானத்தீயால் | 37 |
| அருவமாகும் மாயாவி | 69 |
| அருளுமையனே | 65 |
| அழிவிலாத தத்பதம் | 57 |
| அழுக்கொடு பற்றும் | 17 |
| அளிமகன் நெடும் போது | 33 |
| அறியாத மயல் அஞ்ஞானம் | 25 |
| அறிவுக்கு அறிவு செய்யும் | 29 |
| அறுசுவையின் குணம் | 49 |
| அனக மைந்தனே | 55 |
| அன்ன பானாதி சுக சாதனம் | 75 |
| அன்ன தன் சிசுவை | 13 |
| ஆகமப் பிரமாணத்தால் | 41 |
| ஆடவர் செய் தொழில் | 49 |
| ஆதாரம் மறைந்து போனால் | 23 |
| ஆதிமுக்குணம் | 19 |
| ஆரணப் பொருளாம் | 93 |
| ஆரோபம் அத்தியாசம் | 15 |
| ஆர்க்குங் காணவும் | 71 |
| ஆனபாவி களடைவன | 57 |
| ஆனபின் மனைவி | 11 |
| ஆனாலையா குருவே | 51 |
| இகமான குருநாதனே | 73 |
| இக்குணங்களிலே | 17 |
| இங்குமப்படி சச்சிதா | 63 |
| இதயமொத்த சற்குருவே | 83 |
| இது நினக்கு அறியும் | 25 |
| இந்தச் சீவனால் வரும் | 59 |
| இந்த ஞானந்தான் | 61 |
| இந்த நிச்சயம் முத்தருள் | 67 |
| இந்த நீ துவம் பதத்தின் | 29 |

| பாடல் | பக்கம் |
|---|---|
| இந்த மாயையினால் | 25 |
| இந்தவாறு ஐந்து சுகம் | 81 |
| இப்படிப்போல நாம ரூபம் | 15 |
| இப்புவியில் இஞ்ஞான பூமி | 87 |
| இம்பரில் நஞ்சை | 25 |
| இராசத குணத்தில் | 19 |
| இருவகை தீவிரதரத்தும் | 89 |
| இருளாக மூடும் சுழுத்தியில் | 75 |
| இலக்கமாயிரம் சுருதியால் | 55 |
| இல்லையாகிய சத்தியை | 71 |
| இவனதிகாரி யானோன் | 11 |
| இவனயன் மால் சிவனாகிய | 53 |
| இவ்வாறுரை செயும் | 77 |
| இவ்வுடன் மருவுஞ் சீவன் | 19 |
| இன்னது தேகம் தேகி | 15 |
| இன்னவகை விதி விலக்கு | 81 |
| இன்னவாறந்த பிரமத்தை | 61 |
| ஈசர் காரியம் | 59 |
| ஈசனுக் கிது சுழுத்தி | 17 |
| ஈசனுமா யருவாய் | 53 |
| ஈனந்தரு சுகம் | 77 |
| ஈன்றளித்தழிக்கும் | 9 |
| உண்டுறங்கி | 85 |
| உதவும் புவியில் | 79 |
| உத்தமவெளுப்புச் செம்மை | 17 |
| உத்தம குருவே | 51 |
| உருக்கிய தரா நீர் | 43 |
| உருவங்க ளிரதங்கள் | 73 |
| உலகமான அஞ்ஞானமும் | 65 |
| உன்முகம் போல் | 43 |
| எத்தனை நாள் ஞாதாவும் | 35 |
| எரிகின்ற விளக்கால் | 43 |
| எல்லாங் கண்டறியும் | 29 |
| எல்லாச் சீவரும் | 53 |
| எவருடை அருளால் | 9 |
| எவனாகிலும் இந்த | 79 |
| எனவுரைத் தருளும் | 41 |
| என் மனந் திருக்கோயிலாய் | 57 |
| என்ன புண்ணியமோ | 93 |
| என்னுடை மனது | 9 |
| என்னைத்தான் சடனா | 13 |
| ஏகமாய் மனம் இறந்தால் | 45 |
| ஏமமாயா வினோத | 17 |
| ஐந்து பூதமும் பத்தாக்கி | 19 |
| ஐயனே எனதுள்ளே நின்று | 33 |
| ஐயா கேளீர் | 51 |
| ஒருவழி யிதுவாம் | 17 |

ஒன்றாகிய பிரமானந்தம் 79
ஒன்று கேள் மகனே 59
ஓய்ந்த கனாவில் 51
கங்கையில் கோஷம் 31
கடநீரின் மேகநீரில் 31
கடமெனும் உபாதி 39
கண்டறிந்தது ஞானம் 65
கரணமாம் மனது 27
கருதுமனோ குணம் 43
கருப்பை முட்டையுள் 71
களங்கமற்ற கண்ணாடி 45
கள்ளுமூனும் நீ விரும்பினால் 63
கற்பனை வந்தவாறு 21
காமமாதி வந்தாலும் 35
காமியத்தவம் 55
காரண சரீரம் தன்னைக் 91
காரியங்களும் 69
கானனீர் கிளிஞ்சில் வெள்ளி 39
கிளர் மகனே கேள் 51
குகன்தனையும் 81
குரவர் சிகாமணியே 51
குலவு சற்குருவின் பாதக் 93
குளிரிளகல் வெண்மை 81
கெடலான பொழுது 77
கேவல நிலை தோன்றாமல் 23
கைதவங்களை 57
சகமதில் இதுவென் 23
சடமதாகிய தியானம் 67
சடமான மூடத் தருக் 73
சட்டி குடங்களில் 53
சத்தி சத்தனைத் தவிர 71
சத்தே சித்தாகும் 83
சத்தொடு சித்தாநந்தம் 27
சந்ததம் புருடன் தன்னை 39
சமம் தமம் விடல் 11
சருவ முத்தியைத் தருகின்ற 67
சாதனமின்றி ஒன்றை 11
சிஞ்ஞாசு ஞானவான் 89
சிட்டர் புகழ் மகனே 87
சிட்டனிவ்வாறு கூற 33
சித்து நான் நிறைந்தோன் 91
சிரவணப் பொருளை 11
சிவ சொரூபமாம் 55
சிறந்த நன்மையும் 57
சிரிய வீசனார்க்கும் 21
சீவ பேதங்கள் 57
சீவன் முத்தரை சேவித்தோர் 37
சுத்தமாஞ் சத்துவமே 47
சுத்தியில் வெள்ளி போல 23
சுருதி யுத்தி ஒத்தது 83
சுழுத்தியில் பிரளயத்தில் 23
சூக்கும சடம் இம்மட்டும் 19
செய்கையும் செய்விக்கையும் 49
சென்மாந்தரம் செய்த 75
சென்றது கருதார் 35
சொரூப ஞானமும் 65
சொல்லிய மகனே 39
சொற்பனந்தனில் 69
சொன்னது கேட்கமாட்டா 13
ஞானம் காரணம் 73
ஞானமார் சீவன் முத்தர் 35
தசபுமான் தனைக் 27
தஞ்சமாங் குருவும் சொன்ன 31
தடத்து நீர் நிலாத்திரி 53
தடையெவை எனில் 33
தத்துவஞானம் வந்த 93
தத்துவத்தின் மனமுறைத்து 85
தத்துவமெனும் பதங்கள் 31
தத்துவஅநுபோகந்தான் 35
தத்துவ விசாரம் செய்து 25
தர்ப்பணத்தில் 61
தன்பதியல்லா பேர்கள் 41
தன்னையுந் தனக்காதார 13
தாகப்படும் பொருளிலும் 75
தாமத மிராசதம் 73
தாலத்தின் மரங்கள் 15
தானன்றி வேறொன்று 73
தானிகர் தனக்காம் 21
திகழ்ந்த ஈசனார் 57
தினமும் மண் நுகர் 63
தீரராய் பிரம்ம வித்தாய் 35
துரிய நிலந்தனை 85
துருத்தி மாயையை 65
துற்சங்க நிவர்த்தி வந்து 85
துளங்கு தர்ப்பணம் 61
தூங்குஞ் சுகம் 77
தூடண தமத்தில் வந்த 21
தூல சூக்கும அஞ்ஞானம் 29
தூலமே மருவுஞ் சீவன் 19
தெரிதரு மகனே 51
தேகத்தனல னாகி 47
தேகமல்லாமல் வேறே 15
தொடர்பவம் தொலையும் 13
தோற்றமாம் சத்தி தன்னில் 19
தோற்றமாம் சத்தி தானும் 23
நரரின் மன்னனை 55
நரர் குழி பறித்து 39
நலமெய் ஐயனே 59

நல்லவனே கேள் 53
நற்கருத்து உடையோனாகி 39
நனவுகண்டது 15
நன்மையாம் குருவே 63
நாசச் சரீரத்திருக்கும் 75
நாலாம் பூமியில் 87
நானென உடலைத்தானே 91
நானென்ற பிரமமான 89
நிசமானது முக்கியமோ 79
நித்தியம் பூரணம் 81
நித்தியவ நித்தியங்கள் 11
நிறைந்தவாறு 89
நிற்குண வத்துவின் 81
நீ நானென்றிரண்டிலாமல் 33
நெய்யும் வெண்ணையும் 79
பங்கயாசனன் முதல் 69
பஞ்சகோசமும் விட்டு 27
பஞ்சினை ஊழித்தீப்போல் 37
படமும் நூலும் போல் 21
படர்ந்த வேதாந்தம் 9
பத்தியும் வைராக்கியமும் 61
பந்த மனை துறந்து 89
பலகலையும் உணர்ந்த 83
பன்னிய சோயமென்னும் 31
பாவிமந்த விரகத்தில் 87
பிரமஞானிகளும் 37
பிரமபாவனையை மூடி 33
பிரமமாம் தனை மறந்த 25
பிரமரூபத்தை தியானித்த 67
பிறந்தது உண்டானால் 89
பிறிவதெப்படி என்றக்கால் 27
பின்னை மூவரில் 37
புண்ணிய பதிகன் 25
புலவர் புகழ் முதல் பூமி 85
புலியும் அனுகூலம் எனில் 77
பூச்சிய வீசன் 27
பூரிக்கும் கன சச்சிதா 71
பூன்றமாம் பிரமத்துக்கும் 23
பேத கன்மத்தால் 35
பேதமானதுவும் கேளாய் 29
பொய்யை மெய்யென்ற 69
பொல்லாத மிலேச்சருக்கும் 87
பொறுமையால் பிராரத்தத்தை 37
பொன்னில மாதராசை 9
போகத்தில் வருசுகம் 77
போகமாருயிர் 63
போனசன்மங்கள் தமில் 61
மதுரமாம் கட்டி சுட்ட 29
மதுவிறைச்சிகள் 63
மந்தமும் தீவிரமும் 87
மந்திர மூர்த்திதன்னால் 41
மரங்கள் போல் 21
மலடி மைந்தனும் 67
மற்றைமுப்பிரமாணத்தால் 41
மனது சத்துவ சொரூபம் 45
மனத்தினால் எண்ணித் 89
மனநாசம் சொரூபம் 47
மனுடன் மனுடகந்தர்வன் 79
மனைக்குள் வைத்த 63
மனைவிலங்கு அறு 59
மாயை என்பது பொய்யெனில் 67
மாயை என்பதேது 69
மானஞ்சிறந்த குருநாதனே 77
முத்தனை வேங்கடேச 9
முத்தி நல்கிய சற்குருவே 55
முந்தவகண்டத்து 85
முந்திய சங்கை தீர 41
முற்புவி மூன்றிலும் 85
முன்புகல் தசமன் 29
முன்னிலங்கஉளேறிய 87
மூவராம் பரன் 59
மெய்யுங் கொண்டு 49
மேவு மண்ணில் 71
மோகவிருள் கெட 83
யோக ஞானமே 55
வகுத்த கர்மங்கள் 65
வஞ்சகமில் பரமார்த்த 43
வடநூல் வல்லவர்கள் 31
வணங்கி நின்று அழுது 11
வந்ததோ ரிவ்வாநந்தம் 93
வாக்கியந் தனக்கெட்டாது 41
வாதனா வசத்தினாலே 91
வாயுத்தம்பனம் 71
வாராயென் மகனே 13
விடயசுகம் அதில் வருதல் 75
விண்ணொன்றை 27
வித்தியானந்தம் 93
விருத்திகளடக்க 91
விருத்தி ஞானம் 65
விருத்தியும் பலமும் 43
விவகார வேளையெல்லாம் 47
வினவுமிடத்து அஞ்ஞான 83
வீடதாம் பரிபூரண 67
வீயாத சத்து முன்னம் 83
வேகின்ற கோபங்களால் 75
வேடமாறிய பேர்களை 61

இந்நூலின் ஆசிரியரைப் பற்றி...

திருவாரூர் மாவட்டத்தைச் சார்ந்த தற்போது கீழையூர் என வழங்கும் கீழரங்கம் என்ற திருத்தலத்தில் பிறந்து, கல்வி முடித்து, பின்னர் சென்னையம்பதியில் சுயமாகத் தொழில் புரிந்து, மனைவி மக்களோடு இல்லற வாழ்வை நடாத்தி கொண்டிருக்கும் காலை,தனது 33-வது வயதில், பூர்வ புண்ணிய வசத்தால் **பாடி கைவல்ய நவநீத சங்கம்** என்ற அமைப்பை நடத்தி வந்த, **ஸ்ரீமத் அச்சுதாநந்த சுவாமிகள்** மரபைச் சார்ந்த ஸ்ரீமத் வேதாந்த விஞ்ஞான **ஏழுமலையாநந்த சுவாமிகளை** குருவாக அடைந்து, அவரிடம் திருவடி தீட்சைப் பெற்றதன் பலனாக நாநா சீவ வாத கட்டளை, கைவல்ய நவநீதம், சசிவன்ன போதம், பஞ்சதசி, ஞானவாசிட்டம், ஆத்மபுராணம், வேதாந்த சூளாமணி, விசார சாகரம் முதலான வேதாந்த சாத்திரங்களை குருமார்களின் மூலமாக பயின்று வேதாந்த தத்துவ ஞானத்தை பெறும் வாய்ப்பினை அடைந்தவர் ஆவார்.

தமக்கு வழிகாட்டிய குருமார்கள் அனைவரையும், அவர்கள் வாழ்ந்த காலத்தில் பூசித்தும், குருமகான்கள் விதேக முக்தி அடைந்தபிறகு அவர்களுக்கு குருபூஜைகள் நடாத்தியும் வருகின்றார்கள். குருமார்களின் அருளால் வேதாந்த தத்துவ விசாரணைகளில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டு **அதை உரைத்தும், அதை நினைத்தும் இருப்பதன்றோ ஞானிகளுக்கான நீதி** என்ற கைவல்ய நவநீத வரிகளுக்கு ஒப்ப வாழ்ந்து கொண்டிருக்கும் ஜவஹர் சுவாமிகளால் உரையாக்கம் செய்யப்பட்ட நூல்கள் பின்வருமாறு :-

| | |
|---|---|
| **சசிவன்ன போதம்** (முதற்பதிப்பு) | 2008 |
| **சிவபுராணம்** (முதற்பதிப்பு) | 2008 |
| **சிவபுராணம்** (இரண்டாம் பதிப்பு) | 2009 |
| **நாநா சீவ வாதக் கட்டளை** (முதற் பதிப்பு) | 2009 |
| **கைவல்ய நவநீதம்** (மூலமும் உரைநடை வடிவமும்) | 2009 |
| **பராமாநந்த தீபம்** | 2010 |
| **கைவல்ய நவநீதம்** (தத்துவ விளக்கப் படலம் - உரைநூல்) | 2011 |
| **நாநா சீவவாதக் கட்டளை** (இரண்டாம் பதிப்பு) | 2012 |
| **சசிவன்ன போதம்** (இரண்டாம் பதிப்பு) | 2013 |
| **சிவபுராணம்** (மூன்றாம் பதிப்பு) | 2014 |

இவண்,

இறைஒளி **நாகேந்திரன்**
பிர்மவித்யா பீடம்.
C.M.D.A.காலனி, அரும்பாக்கம், சென்னை-106.